# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 233 ஆடி 01ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 17 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## புத்தரின் படம்போட்ட ஆடையால் சிக்கல்

வவுனியாவில் பெண் மீது வழக்குப் பதிவு

வவுனியா, ஜூலை 17
குடும்பப் பெண் ஒருவர் அணிந்திருந்த ரி.சேர்ட்டில் சிறிய புத்தரின் உருவங்களும் விகாரையின் உருவங்களும் பொறிக்கப்பட்டிருந்ததால் அவர் கைது செய்யப்பட்டார். வழக்குப்பதிவு செய்யப்பட்டது பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார். வவுனியா » 06

## காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக முல்லைத்தீவில் நாளை போராட்டம்

ஆதரவு தருமாறும் அழைப்பு

முல்லைத்தீவு, ஜூலை 17
காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தருமாறு வலிறுத்தி ஒரு வருடத்தைக் கடந்தும் வடக்கு மாகாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் அனைவரும் ஒன்றிணைந்து நாளை மாபெரும் போராட்டம் ஒன்றை முல்லைத்தீவில் முன்னெடுக்கவுள்ளனர். அந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தரவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்கவும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவும் » 06

## லசந்த கொலை; பொலிஸாருக்கு நேற்றுப் பிணை

கொழும்பு, ஜூலை 17
சன்டேலீடர் பத்திரிகையின் முன்னாள் முதன்மை ஆசிரியரும் மூத்த ஊடகவியலாளருமான லசந்த விக்ரமதுங்கவின் கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ சுகதபால ஆகியோர் பிணையில் செல்ல கல்கிஸ்சை நீதிவான் மன்றம் நேற்று அனுமதி வழங்கியது.
லசந்த கொலை தொடர்பான வழக்கு நேற்று கல்கிஸ்சை நீதி » 23

# மாகாண சபைக்கு உடன் அமைச்சரவை வேண்டும்

நியமிக்குமாறு முதலமைச்சரிடம் கோரி நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாண சபைக்கு ஓர் முழுமையான அமைச்சர்கள் சபையை நியமிப்பதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்கோரி வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
இந்தத் தீர்மானம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு நேற்று மாலையே அவசர அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டதுடன், வடக்கு மாகாண ஆளுநருக்கும் அதன் பிரதி அனுப்பி வைக்கப்பட்டது. » 06

## கரடி தாக்கி சிப்பாய் காயம்

வவுனியா, ஜூலை 17
உடலில் கீறல் காயங்களுடன் சிப்பாய் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் நேற்றுச் சேர்க்கப்பட்டார். கரடி தாக்கியதில் இவர் காயம » 25

## தூக்கிலிடுவோர் பட்டியலில் முதலிடத்தில் ஒரு பெண்

கொழும்பு, ஜூலை 17
சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதைப்பொருள் குற்றவாளிகளுள் தூக்கிலிடப்படவேண்டியவர்களின் பட்டியலில்-முதலில் இருப்பது பெண்ணொருவரின் பெயரே என்று நீதியமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். » 23

## அனுதாப வாக்கு திரட்டுவதற்காக சபையைக் கலைக்க முயற்சி

வடக்கு மாகாண உறுப்பினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாணத்தில் நெருக்கடி நிலமையை ஏற்படுத்தி மாகாண சபையைக் கலைப்பதற்கே சிலர் விரும்புகின்றார்கள். அவ்வாறு செய்வதன் ஊடாக மக்களின் அனுதாபத்தைப் பெற்று அடுத்த தேர்தலில் தாம் வெற்றியீட்ட முடியும் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ் » 06

## முதல்வர் தன் தவறை ஏற்றால் பதவியை விட்டுவிடுகிறேன்

டெனீஸ்வரன் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தான் செய்த தவறை ஏற்றுக்கொண்டால், அமைச்சர் பதவியை ஏற்காமல் விடுவதற்குக்கூடத் தயாராக இருக்கின்றேன். ஆனால் முத » 25

## அலுக்கோசு பதவியில் மூதாட்டிக்கு ஒரு கண்

கொழும்பு, ஜூலை 17
சாவுத் தண்டனையை நிறைவேற்றுவது என்று அரசு முடிவு செய்ததை அடுத்து தூக்கில் இடுவோருக்கான 'அலுகோசு' பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதற்கு எவரும் விண்ணப்பிக்காத பட்சத்தில்தான் அந்தப் பதவிக்கு வரத் தயாராக இருக்கிறார் என்று 71 » 25

## பொய் சொன்னார் விக்கி சபையில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் இரண்டு விவகாரங்களில் பொய்யுரைத்துள்ளார் என்று உறுப்பினர்கள் பலர் சபையில் நேற்றுப் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினர். » 23

## இந்திய மீனவர்களிடமிருந்து கி. 37 கேரளக் கஞ்சா பறிமுதல்

கடற்படையின் ரோந்தில் சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 17
இலங்கைக் கடலில் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களிடமிந்து 37 கிலோ கேரளக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
சுற்றுக் காவலில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறைக் கடற்படையினர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் நால்வரை நேற்று அதிகாலை கைது செய்தனர். இலங்கைக் கடற்பரப் » 25

## ரூ. 2 லட்சம் செலவு

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாண சபையில் நேற்று நடந்து முடிந்த தனி அமர்வுக்கு 2 லட்சம் ரூபா செலவாகியுள்ளது.
முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பால் ஏற்பட்ட அசாதாரண » 06

## அமைச்சர்களும் இல்லை பங்காளிகளும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாணத்தில் எழுந்துள்ள இக்கட்டு நிலமை தொடர்பில் ஆராய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு அமர்வில், ஆளும் கட்சியில் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் எவரும் ஏனைய கட்சி உறுப்பினர்களும் பங்கேற்கவில்லை.
வடக்கு மாகாண அமைச்சர் » 06

## காய்த்துக் குலுங்குகிறது பேரீச்சை காரைநகரில்

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணக் குடாநாட்டின் காரைநகரில் காய்த்து பழுத்துக் குலுங்குகிறது பேரீச்சை மரம்.
காரைநகர், திக்கரை முருக மூர்த்தி கோவில் வீதியில் உள்ள பொன்னம்பலவா » 25

## கே.கே.எஸ். கட்லில் தத்தளித்த இந்தியச் சிறுவர் இருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 17
றெஜிபோமில் தயாரிக்கப்பட்ட சிறிய படகொன்றில் மிதந்து தத்தளித்த சிறுவர்கள் இருவர் காங் » 25

## அனந்தியிடம் கைத்துப்பாக்கி அம்பலப்படுத்தினார் அஸ்மின்

யாழ்ப்பாணம், ஜூலை 17
பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து, வடக்கு மாகாண சபையிலுள்ள » 24

## இளம் பெண் தற்கொலையில் சட்டத்தரணிக்குத் தொடர்பா?

சி.ஐ.டி. விசாரணைக்கு நீதிமன்று உத்தரவு » 06

# நொண்டிக் குதிரையான மாகாணசபை முடமாக்கப்பட்ட குதிரையாகி விட்டது

## முதலமைச்சர் தவறாக வழிநடத்திவிட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு வந்ததிலிருந்து மாகாண சபையின் நிறைவேற்றுச் செயற்பாடுகள் தேக்கமடைந்த நிலையிலேயே இருக்கின்றது. யார் அமைச்சர்கள், யார் துறைசார் நிறைவேற்றுத் துறைக்குப் பொறுப்பு என்ற தெளிவற்ற நிலை மாகாண சபையின் செயற்பாடுகளை மந்த கதிக்கு இட்டுச் சென்றுள்ளது. ஏற்கனவே நொண்டிக் குதிரை போல் மாகாண சபையின் நிறைவேற்றுச் செயற்பாடுகள் வினைத் திறனற்றவையாக இருந்த நிலையில் இவ்வாறான நிகழ்வுகள் முடமாக்கப்பட்ட குதிரையான மாகாண சபையாக மாறிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாக எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பான சிறப்பு விவாதம் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அமர்வின்போது நான் சபையில் பிரசன்னமாக இருக்காவிட்டாலும் இங்கு நடைபெற்ற சகல நடவடிக்கைகளையும் கூர்மையாக அவதானித்துள்ளேன். இங்கு பல உண்மைக்குப் புறம்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அரசமைப்பின் 154எப்(6) இற்கு அமைய 'அமைச்சர்கள் சபை மாகாண சபைக்குக் கூட்டாகப் பொறுப்புடையதாதலும், வகைசொல்ல வேண்டியதாதலும் வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொறுப்புக் கூறல் அல்லது வகைசொல்லல் என்பது வெறுமனே ஏதோ வாயில் வந்ததைக் கூறுவதாக அமைய முடியாது. அது உண்மையானதாகவும், பொறுப்புடன் கூறப்படுவதாகவும் அமைதல் வேண்டும். உண்மையைத் திரிபுபடக் கூறுவது கூடப் பொய்க்குச் சமனாகும்.

### விக்கி கூறிய பொய்

கடந்த அமர்வின்போது கே.சயந்தனால், 'ஆளுநர் முதலமைச்சரிடம் கோரியுள்ளார் உங்கள் அமைச்சர்கள் யாவரென்று அறியத் தாருங்கள்' என்று உரையாற்றப்பட்ட வேளையில் குறுக்கிட்ட முதலமைச்சர், தன்னிடம் அப்படியொன்றும் கேட்கவில்லை எனக் கூறியிருக்கின்றார். என்னிடம் ஆளுநரால் அவ்வாறு கோரி கடந்த 5ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதமும், அந்தக் கடிதம் முதலமைச்சர் பணியகத்திலும் மற்றும் கோவில் வீதியிலுள்ள அவரது உத்தியோகபூர்வ வதிவிடத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்களும் உள்ளன. இது ஒரு முக்கிய விடயமாதலால் மறுநாள் 6ஆம் திகதியன்றும் ஒரு நினைவூட்டல் கடிதமும் விரைவுத் தபாலில் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஊடகங்கள் சபை அமர்வின் பின் முதலமைச்சரிடம் மின்னஞ்சல் ஊடாகக் கேட்டதற்கு அன்றைய சபை அமர்வின் பின்னர்தான் தனக்கு அப்படி ஒரு கடிதம் கிடைத்துள்ளதாகப் பதிலளித்துள்ளார் என அறிகின்றோம்.

இவ்வாறான சூழலில் முதலமைச்சர் தன்னிடம் அப்படியொன்றும் கேட்கவில்லை என்று சபைக்கு விளம்பியது இந்தச் சபையை அவமதித்த செயலாகவே கருத வேண்டியுள்ளது. பொறுப்புடன் பதிலளிக்க வேண்டிய நீதியரசர் முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையைத் தவறாக வழி நடத்தியுள்ளார்.

### தீர்ப்பை திரிபுபடுத்திய விக்கி

கடந்த அமர்வின்போது முதலமைச்சரால் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாக ஒரு விளக்கவுரை ஆற்றப்பட்டுள்ளது. விளக்கவுரையிலும் எவ்வாறு உண்மைக்குப் புறம்பான விடயங்கள் திரிபுபடுத்திக் கூறப்பட்டுள்ளன என்பதையும் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அவரது உரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானத்தின் படி எந்தவொரு மாகாண முதலமைச்சர் தானும் தமது அமைச்சர் குழாமின் அமைச்சர் ஒருவரை நியமிக்கவோ, பதவியிறக்கவோ முடியாது என்பதாகும்.

முதலமைச்சர் கூறியிருப்பது உண்மையைத் திரிபுபடுத்திக் கூறியிருக்கும் ஒரு செயலாகும். அரசமைப்பின் பிரிவு 154எப்(5) இற்கு அமைய 'ஆளுநர் முதன்மை அமைச்சரின் ஆலோசனை மீது அம் மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினர்களிலிருந்து ஏனைய அமைச்சர்களை நியமித்தல்வேண்டும்'. அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் மட்டும்தான் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதே அன்றி அமைச்சர்களை நீக்கும் அதிகாரம் குறிப்பிடப்படவில்லை. பொதுவாக ஒரு பதவிக்கு நியமிக்கும் அதிகாரம் யாரிடமுள்ளதோ நீக்கும் அதிகாரமும் உள்ளதென்பதை 'மறைமுக ஒப்பு' என்று சொல்வார்கள்.

இந்திய அரசமைப்பின் பிரிவு 164(1) மாநிலங்களின் முதமைச்சர்களையும், அமைச்சர்களையும் அமைப்பது தொடார்பாக எமது அரசமைப்பில் உள்ளது போல் 'ஏனைய அமைச்சர்கள் முதலமைச்சரின் ஆலோசனையில் ஆளுநரால் நியமிக்கப்படுவர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கும் அமைச்சர்களை நீக்கும் அதிகாரம் யாரிடமென்று குறிப்பிடப்படவில்லை. இந்தியாவிலிருக்கும் 29 மாநில அரசுகளுக்கும் அமைச்சர்களை நியமிப்பது, நீக்குவது தொடர்பில் இது வரை சர்ச்சைகள் இருந்ததாக நானறியேன். அங்கு இந்தப் பிரிவின் நடைமுறைப்படுத்தலால் மாநிலங்களின் அதிகாரம் ஆளுநருக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதாக எங்கும் விமர்சித்ததாக எனக்குத் தெரியாது.

பிரித்தானியாவில் கூட தலைமை மந்திரியையும், ஏனைய மந்திரிகளையும் நியமிக்கும் மற்றும் நீக்கும் அதிகாரம் மகாராணியிடமே உள்ளது. அதற்காக மகாராணி தான் விரும்பியது போல் அமைச்சர்களை நியமிக்கவோ, நீக்கவோ முடியாது. இவை ஜனநாயக நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள்.

### நடைமுறைத் தவறு

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதுபோல் இங்கு எழுந்துள்ள பிரச்சினை பிரிவு 154எப்(5) தொடர்பான பொருள்கோடல் அல்ல. நடைமுறைப்படுத்தல் தொடர்பானதே. நடைமுறைப்படுத்தலைச் சரிவரச் செய்திருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் எழுந்திருக்காது.

### மந்த நிலை

முதலமைச்சரால் அமைக்கப்பட்ட வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கையைக் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பத்தில் சபையில் சமர்ப்பித்து அதன் பின் ஜூன் 14ஆம் திகதி அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பான தனது நடவடிக்கைகளை அறிவித்ததில் இருந்து ஏறத்தாழ 4 அல்லது 5 மாதங்கள் வரை மாகாண சபையின் நிறைவேற்றுச்செயற்பாடுகள் யாவும் ஒரு தேக்க நிலையிலேயே காணப்பட்டது. அதே போன்று கடந்த மாதம் 29ஆம் திகதி டெனிஸ்வரனால் தன்னை அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றுவதற்கு உள்ள தடைகளை நீக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக வழக்கின் தீர்ப்பு வந்ததிலிருந்து மாகாண சபையின் நிறைவேற்றுச் செயற்பாடுகள் தேக்கமடைந்த நிலையிலேயே இருக்கின்றது. யார் அமைச்சர்கள், யார் துறைசார் நிறைவேற்றுத் துறைக்குப் பொறுப்பு என்ற தெளிவற்ற நிலை மாகாண சபையின் செயற்பாடுகளை மந்த கதிக்கு இட்டுச் சென்றுள்ளன. ஏற்கனவே நொண்டிக்குதிரை போல் மாகாண சபையின் நிறைவேற்றுச் செயற்பாடுகள் வினைத்திறனற்றவையாக இருந்த நிலையில் இவ்வாறான நிகழ்வுகள் முடமாக்கப்பட்ட குதிரையான மாகாண சபையாக மாற்றிக் கொண்டிருக்கின்றது.

நான் முதலமைச்சரை விநயமாகக் கேட்டுக் கொள்வது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையை ஏற்று டெனீஸ்வரன் தொடர்ந்து அமைச்சராகப் பதவி வகிப்பதற்கு இருக்கின்ற முட்டுக்கட்டைகளை நீக்கி அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய எல்லாமாக ஐந்து அமைச்சர்களுக்கு மேல் இருக்க வேண்டுமென்பதற்கு அமைவாக ஏனைய மூவரும் யாரென்பதைத் தீர்மானித்து ஆளுநர் ஊடாக உரியமுறையிற் பரிசீலனை செய்து மாகாண சபையை சுமுகமான முறையில் இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

(5)

# மக்களை முட்டாள்களாக்கும் விதத்தில் முதலமைச்சர் செயற்பட்டுள்ளார்

## கடித விவகாரத்தில் ஆதாரங்களுடன் ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு மாகாண சபையைப் பிழையாக வழிநடத்தும் வகையிலும், மாகாணசபையை அவமதிக்கும் வகையிலும், மக்கள் பிரதிநிதிகளான மாகாணசபை உறுப்பினர்களை அவமானப்படுத்தும் விதத்திலும், அவர்களைத் தெரிவு செய்த மக்களை முட்டாள்களாக்கும் வகையிலும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செயற்பட்டுள்ளார். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் கே. சயந்தன் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

வடக்கு மாகாண சபையில், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாக எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பான சிறப்பு விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற அமர்வில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம், வடக்கு மாகாண அமைச்சர்கள் யார் எனக் கோரி ஆளுநரிடமிருந்து கடிதம் வந்ததா என்று கேட்டேன். அவ்வாறனதொரு கடிதம் வரவில்லை என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஆனால் வடக்கு மாகாண ஆளுநரால், அமைச்சர் சபையைப் பரிந்துரைக்குமாறு எழுதப்பட்ட கடிதத்துக்கு முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து, கடந்த 6ஆம் திகதியே பதில் அனுப்பப்பட்டுள்ளது. உங்களின் (ஆளுநரின்) கடிதத்தை எனது சட்டத்தரணிகளிடம் முன்னளிப்புச் செய்துள்ளேன். அவர்கள் பதில் வழங்குவார்கள் என்று உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து கடிதம் அனுப்பியுள்ளார்.

10ஆம் திகதி இடம்பெற்ற வடக்கு மாகாணசபை அமர்வில் அவ்விதமாக எதுவுமே கூறப்படவில்லை என்று முதலமைச்சர் கூறினார். இது உயரிய சபை. இங்கு பொழுதுபோக்குக்கு கதைக்க முடியாது. ஆகக் குறைந்தபட்சம் ஏனைய 37 உறுப்பினர்களையும் விடுவோம். தனக்கு வாக்களித்த ஒரு லட்சத்து 31 ஆயிரம் மக்களுக்காவது அந்த உண்மையைச் சொல்ல வேண்டும். அதுவும் சொல்லப்படவில்லை. முதலமைச்சர் தெரிந்தே இந்தச் சபையைப் பிழையாக வழிநடத்தியுள்ளார் என்பதுதான் எனது அபிப்பிராயம்.

ஆளுநர் 6ஆம் திகதி நினைவூட்டல் கடிதம் அனுப்பியுள்ளார். வடக்கு மாகாண முதலமைச்சர் 11ஆம் திகதி அதற்குப் பதில் அனுப்பியுள்ளார். முதலமைச்சர் அனுப்பிய இரண்டாவது கடிதம், அவர் அனுப்பிய முதலாவது கடிதத்தில் கூறப்பட்ட விடயத்தை இல்லாமல் செய்துள்ளது. அவரின் சட்டத்தரணிகள் பதில் வழங்குவார்கள் என்று கூறிவிட்டு, இரண்டாவது கடிதத்தில் தானே பதில் வழங்கியுள்ளார். அமைச்சரவையில் பதவி வெற்றிடம் இல்லை என்பதே அவரது இரண்டாவது கடிதத்தின் பதில்.

அமைச்சர்கள் யார் என்று முதலமைச்சர்தான் ஆளுநருக்குப் பரிந்துரைக்கவேண்டும். வடக்கு மாகாண முதலமைச்சர் முதலாவது அமைச்சரவை நியமனத்தின்போது என்னசெய்தாரோ அல்லது இரண்டாவது அமைச்சரவையில் முதல் இரண்டு அமைச்சர்கள் நியமனத்தின்போது என்ன செய்தாரோ, இரண்டாவது அமைச்சரவையின் எஞ்சிய இரண்டு அமைச்சர்கள் நியமனத்தின்போது என்ன செய்தாரோ அதை இப்போதும் செய்யவேண்டும் என்றுதான் நீதிமன்றத் தீர்ப்பு கூறுகின்றது. முதலமைச்சரின் அதிகாரத்தை நீதிமன்றம் பறிக்கவில்லை.

தன்முனைப்பு (ஈகோ) பிரச்சினையாலேயே இந்த விவகாரம் தீர்க்கப்படவில்லை. இந்த வழக்கு விடயத்தில் கொழும்பு அரசு அதிகாரத்தைப் பறிக்கின்றது என்பதெல்லாம், தேர்தல் மேடையில் பேசப்படவேண்டிய விடயம்.

மக்களுக்காக தங்களுடைய நிறைவேற்றுக் கடமையைச் செய்யாத ஒருவர், செய்வதிலிருந்து விலகிய ஒருவர், அதனைத் தடுக்கின்ற ஒருவர், குடிமகனின் அடிப்படை உரிமையை மீறியதாகக் கருதப்படுவார். நாம் அரசமைப்பை மீறும் வகையில், வேண்டுமென்றே மீறும் வகையில் செயற்பட முடியாது. அது பெரிய தவறு.

நாம் இதுவரை 20 நியதிச் சட்டங்கள்தான் நிறைவேற்றியிருக்கின்றோம். ஒரு மாகாணசபை இயங்குவதற்கு 200 நியதிச் சட்டமாவது நிறைவேற்றப்படவேண்டும். மாகாணசபையில் சமர்பிக்கப்படாமல் இன்னமும் 10 நியதிச் சட்டங்கள் தொங்கி நிற்கின்றது. கடந்த 3ஆம் திகதி நியதிச் சட்டக் கூட்டம் இருக்கின்றது என்று எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்தக் கூட்டத்துக்குச் சென்றோம். முதலமைச்சரின் செயலர் அங்கு வந்து, தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்படுகின்றது என்று கூறினார். இது ஒரு சட்டசபை. முன்பள்ளியோ, பாடசாலையோ அல்ல. சட்டங்களை நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கப்பட்டிருக்கின்றோம். அமைச்சரவை இல்லாது நிறைவேற்று நிர்வாகக் கடமையாற்ற முடியாது. மக்கள் எங்களிடத்தில் தந்த நம்பிக்கைப் பொறுப்பை நிறைவேற்றவேண்டும் - என்றார்.

(5)

# 'சப்பென்று' நடந்த சபை அமர்வு

## கீரைக் கடைக்கும் எதிர்க்கடை இல்லாததால் வந்த நிலமை

வடக்கு மாகாண சபையின் அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்றுக் காலை 9.50 மணியளவில் ஆரம்பமானது. சபையின் ஆரம்பத்தில் வழக்கத்துக்கு மாறாக குறைந்த எண்ணிக்கையான உறுப்பினர்களே பங்கேற்றனர். அவைத் தலைவர் சபையை ஆரம்பிக்க முன்னர் உறுப்பினர்களின் எண்ணிகையைக் கணக்கிட்டு. 'கோரம்' இருப்பதை உறுதிப்படுத்திய பின்னரே சபையைத் தொடக்கினார்.

சபை அமர்வுகளில் அதுவும் சிறப்பு அமர்வுகள் என்றாலே காரசாரமான விவாதம் இருக்கும். ஆனால் ஆளும் கட்சியில் ஒரு அணியினர் நேற்றைய அமர்வில் பங்கேற்கவில்லை. இதனால் சபை அமர்வு கூச்சல். குழப்பமின்றி, அமளிதுமளி இன்றி நடைபெற்று முடிந்தது. நடந்தது வடக்கு மாகாணசபையின் அமர்வுதானா என்று கூட எண்ணும் அளவுக்கு நடத்தது.

அமர்வின் ஆரம்பத்திலேயே, முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வருகைதரமாட்டார் என்று அவர் அனுப்பிய கடிதத்தை அவைத் தலைவர் வாசித்தார். நீதிமன்றில் வழக்கு நிலுவையில் இருப்பதை முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சூடாகினார். முதலமைச்சர் கடந்த அமர்வில் நீதிமன்ற விடயங்களில் தலையிடும் வகையில் பேசிவிட்டு இப்போது இப்படிச் சொல்வது பொருத்தமற்றது. அவருக்கு வந்தா இரத்தம். எங்களுக்கு வந்தா தக்காளிச்சட்னியா என்ற தொனியில் அவருக்கு ஒரு நியாயம் எங்களுக்கு ஒரு நியாயமா என ஆதங்கத்துடன் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து ரெலோ அமைப்பினர் கட்சியின் தீர்மானத்தை சபைக்கு அறிவித்தனர். அந்தக் கட்சியின் உறுப்பினர் க.விந்தன் சபையில் அதனை ஒப்புவித்தார். அந்தக் கட்சியின் சார்பில் அமைச்சராக இருக்கும் ஜி.குணசீலன், தானும் சபை அமர்விலிருந்து வெளியேறப் போவதாக விந்தனின் உரைக்குப் பின்னர் தனியாகத் தெரிவித்தார். அதன் பின்னர் சபையிலிருந்த ரெலோவின் நான்கு உறுப்பினர்களும் வெளியேறிச் சென்றனர். ஆனால் வரவுப் பதிவேட்டில் கையெழுத்திட்டு தங்களுக்கான 'கொடுப்பனவை' உறுதிப்படுத்தியிருந்தனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர் சி.அகிலதாஸ், சபை அமர்வில் ஆள்கள் எண்ணிக்கை குறைந்ததும் ஒரு அமர்வுக்கு எவ்வளவு செலவாகும் என்று அவைத் தலைவரிடம் கேள்வி எழுப்பினார். அவைத் தலைவர் அதற்கு இறுதிவரையில் பதிலளிக்கவில்லை.

இதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தனது உரையைத் தொடங்கினார். இந்தத் தீர்ப்புத் தொடர்பில் விளக்கம் தெரியாமல் வவுனியா மாவட்ட உறுப்பினர் என்று எதிர்க்கட்சித் தலைவர் பேசத் தொடங்கியதும். இவர் இப்படிப் பேசுவதை நிறுத்தவேண்டும் என்று சொல்லிக் கொண்டு வெளியேறுவதற்கு எதிர்பார்த்திருந்தவர் போல உடனே சபையிலிருந்து நடையைக் கட்டினார். வவுனியா மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் எம்.தியாகராசா. அவைத் தலைவர் அவரை நில்லுங்கள் என்று சொல்லவும் அவர் வெளியேறினார்.

நாங்களே விளங்காமல் இதைக் கதைக்கேக்க என்று அவைத் தலைவர் இழுக்க, விளங்காட்டிக் கதைக்கக் கூடாது என்று தவரசா 'கட்டன்ரைட்டாக' பதிலிறுத்தார். இந்த விடயத்துக்குள் நுழைந்த ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன். ஓய்வுபெற்ற நீதியரசர் விட்ட பெரும் பிழையைப் பற்றிப் பேசும் போது. ஓய்வு பெற்ற கிராம அலுவலர் விட்ட சின்னப் பிழையை ஏன் தூக்கிப் பிடிக்கிறியள் என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா. நானும் இப்போது எனது பேச்சுக்களை எழுதி வந்துதான் வாசிக்கின்றேன் என்று குறிப்பிட்டார். உடனே அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம். நீங்களும் புத்தகம் வெளியிடப் போகின்றீர்களா என்று நக்கலாகக் கேட்டார். முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். அண்மையில் தனது உரைகள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டிருந்தார். இதை மனதிலிருத்தியே இந்தக் கேள்வியை அவைத் தலைவர் எழுப்பியிருந்தார் போலும்.

வவுனியா மாவட்ட விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் சபைக்கு விடயத்தை தெரியப்படுத்தியபோது உரிய விதத்தில் தீர்வு கண்டிருந்தால் இன்று இந்த ஆபத்தான நிலமையில் வந்திருக்கவேண்டியதில்லை எனத் தெரிவித்த ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின். அமைச்சர் சபை விவகாரத்தில் 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து நடத்த விடயங்களை விளக்கினார். முதலமைச்சர் ஒரு அமைச்சரை 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என்று தெரிவித்து காப்பாற்ற முயன்றதன் விளைவுதான் இது என்றும் குறிப்பிட்டார்.

இந்த மாகாணசபை எப்போது கலைக்கப்படும் என்று மக்கள் என்னிடமும் கேட்கின்றார்கள். மாகாண சபை மீது மக்களுக்கு சலிப்பு வந்துவிட்டது. ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி ஆதங்கத்துடன் தெரிவித்தார். எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதனும், இதே கருத்தை தெரிவித்திருந்தார். தன்னிடம் சுமார் 500பேர் இந்தக் கேள்வியைக் கேட்டதாக தவநாதன் தெரிவிக்க, ஆளும் கட்சி உறுப்பினர் த.குருகுலராஜா, அவ்வளவுதான் வாக்கு எண்ணிக்கையா என்று தெரிவித்து. தவநாதனிடம் வாங்கிக் கட்டிக்கொண்டார்.

போரில் பாதிக்கப்பட்டவர்கள் இந்தச் சபையைப் பொறுப்பேற்று நடத்தியிருந்தால் எந்தப் பிரச்சினையும் வந்திருக்காது. அவர்களுக்கு போரின் பாதிப்பு வலி தெரியும். அந்தப் பாதிப்புக்கு எதுவுமே உட்படாதவர்கள் தலைமையேற்றமைதான் எல்லாப் பிரச்சினைக்கும் காரணம் என்று ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஜெயசேகரன், முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குச் சூடு வைத்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் தீர்மானத்தை ஆளும் கட்சியிலுள்ள 16பேர் ஏற்றிருக்கின்றார்கள். (16பேர் சபையில் பிரசன்னமாக இருக்கவில்லை) 14பேர் ஏற்கவில்லை. எதிர்கட்சியில் 8பேரும் ஏற்கவில்லை. இப்போது ஆளும் கட்சியின் 14 பேரும், எதிர்கட்சியின் 8 பேரும் சேர்ந்து 22 உறுப்பினர்களும் ஆளும் கட்சியா? எதிர்கட்சியா? இந்தக் கேள்விக்கு முதலில் பதில் சொல்லுங்கள் என்றார் எதிர்க்கட்சி உறுப்பினர் அப்பாஸ் அலிகான். அவைத் தலைவர் சிரித்துச் சமாளித்து அடுத்த விடயத்துக்கு நகர்ந்தார்.

கிரிக்கெட் ஆட்டத்துக்கு முன்னதாக, பிர்ச் ரிப்போட், வெதர் ரிப்போட் சொல்வார்கள். இன்று இரண்டும் நல்லாக இருக்கின்றது. நல்லதொரு கிரிக்கெட் ஆடலாம் என்று நினைக்கின்றேன் என்று தெரிவித்துவிட்டே, டெனீஸ்வரன் தனது உரையை ஆரம்பித்தார். கடந்த அமர்வில் டெனீஸ்வரனின் உரைக்கு உறுப்பினர் சிவாஜிலிங்கம் இடையூறு விளைவித்துக் கொண்டிருந்தார். இந்த அமர்வில் சிவாஜிலிங்கம் கலந்து கொள்ளவில்லை. அதனையே டெனீஸ்வரன் மறைமுகமாகக் குத்திக்காட்டினார். சிவாஜிலிங்கத்தை அரசியல் கோமாளி என்றும் சூடாக விமர்சித்திருந்தார்.

தான்பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் விடாப்பிடியாக நிற்பதே எல்லாப் பிரச்சினைக்கும் காரணம் என்று டெனீஸ்வரன் தனது உரையில் சாடினார்.

தென்னிந்தியத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'பிக்பொஸ்' எல்லோரையும் பாதித்திருக்கின்றது என்பது டெனீஸ்வரனின் உரையில் வெளிப்பட்டது. பிக்பொஸ்ஸில் சொல்லப்படும் ஓடவும் முடியாது ஒழியவும் முடியாது என்பதைப் போல, அமைச்சர்களை நீக்கவும் முடியாது நியமிக்கவும் முடியாது என்று முதலமைச்சர் குறிப்பிடுகின்றார். ஆனால் அந்த அதிகாரம் அவரிடம்தான் இருக்கின்றது என்றார் டெனிஸ்.

அரசமைப்புக்கு விசுவாசமாக இருப்போம் என்று, அரச தலைவரின் முன்பாக, முள்ளிவாய்க்காலில், வீரசிங்கம் மண்டபத்தில், வலிகாமத்தில், கிளிநொச்சியில் என்று பல்வேறு இடங்களில் பதவியேற்புச் செய்திருக்கின்றோம் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். வடக்கு மாகாண முதலமைச்சர், அப்போதைய அரச தலைவர் மகிந்த முன்பாகப் பதவியேற்புச் செய்ததையும் இதனைக் குறிப்பிட்டு ஆளும் கட்சி உறுப்பினர்கள் 9 பேர், மாகாணசபை உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வைப் புறக்கணித்து தனித்தனியே பதவியேற்புச் செய்திருந்தனர். அவைத் தலைவர் அதனை இப்படிச் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் ஆலோசகர்கள் அவரைத் தவறாக வழிநடத்துகின்றார்கள் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். யார் ஆலோசனை வழங்கினாலும், முடிவு எடுப்பது முதலமைச்சர்தானே என்று எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார். ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன். இது தொடர்பில் முகநூலில் வந்த விடயம் ஒன்றைச் சொல்கின்றேன். முதலமைச்சர் விக்னேஸ்வரன் தவறாக வழிநடத்தப்படுகின்றார் என்ற பதிவுக்கு, முதலமைச்சர் சரியாக வழிநடத்தப்பட முடியாதவர் என்று ஒருவர் பின்னூட்டப் பதிவிட்டிருந்தார் என்று குறிப்பிட்டார்.

(5)

# தமிழர்கள் ஒரு பிள்ளை பெறுவதையும் நிறுத்துவதற்காக அரசு முயற்சிக்கின்றது?

## ரி.ஐ.டி. விவரம் திரட்டிய விவகாரத்தில் மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கேள்வி

தமிழர்கள் முன்பு பத்துப் பிள்ளைகள் வரையில் பெற்றார்கள். இப்போது ஒன்றிரண்டுடன் நிறுத்திக் கொள்கின்றார்கள். சனத் தொகையில் ஏற்கனவே நாங்கள் பின்னடைந்து செல்கின்றோம். ஒன்றிரண்டு குழந்தையையும் பெற்றுக் கொள்வதையும் நிறுத்தும் வகையில்தான் இந்த அரசின். அதன் பாதுகாப்புத் தரப்பினரின் செயற்பாடுகள் அமைந்துள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் சிறப்புக் கவனவீர்ப்பை முன்வைத்தார். கிளிநொச்சி மாவட்டத்தில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப்பொலிஸார். குழந்தைகள் பெற்ற தாய்மாரின் விவரங்களைத் திரட்டி வருகின்றமை தொடர்பிலேயே அவரது கவனவீர்ப்பு அமைந்திருந்தது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நோயாளி ஒருவரின் சம்மதமில்லாமல் அவர் தொடர்பான அறிக்கையை யாருக்கும், யாரும் வழங்க முடியாது. அவ்வாறு வழங்குவதாக இருந்தால் கூட கொழும்பு அரசின் சுகாதார அமைச்சின் செயலரே வழங்கமுடியும். ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில். கடந்த மே மாதம் 25ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் குழந்தை பெற்றவர்களின் விவரங்களை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் பெற்றுக் கொண்டுள்ளனர். எங்கள் காலத்தில் தமிழர்கள்பத்துப்பிள்ளைகள்வரையில் பெற்றார்கள். இப்போது ஒன்றிரண்டு பிள்ளைகளு டன் நிறுத்திக் கொள்கின்றார்கள். தமிழர்களின் சனத் தொகை குறைந்து செல்கின்றது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் நடவடிக்கையால், ஒரு குழந்தையைப் பெற்றுக்கொள்வதற்கே அச்சப்படுகின்ற நிலமையை உருவாக்கியுள்ளனர். எங்கேயோ ஒழிந்திருந்த ஒசாமா பின் லேடனைப் பிடிக்கக் கூடியளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்திருக்கின்றது. ஒரு சந்தேகநபரைக் கைது செய்வதற்கு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குழந்தை பெற்ற அத்தனை தாய்மாரின் விவரங்களும் அவர்களுக்குத் தேவையா? இந்த விடயத்தைபன்னாட்டுச்சமூகத்தின்கவனத்துக்குக்கொண்டு செல்லவேண்டும் - என்றார்.

உறுப்பினரின் கோரிக்கைக்கு அமைவாக, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஊடாக இந்த விடயம் கொண்டுசெல்லப்படும் என்று அவைத் தலைவர் அறிவித்தார். (5)

# தேர்தல் அறிக்கையை மீறியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர்

## ஏன் இரட்டைவேடம் என்று ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் கேள்வி

2013ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் நாம் முன்வைத்த தேர்தல் அறிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் மீறியுள்ளார். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஐ.அஸ்மின் தெரிவித்தார்.

வடக்குமாகாண சபையின் நேற்றைய சிறப்பு அமர்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2013ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் ஒட்டுமொத்த வாக்குகளில் 78.48 சதவீதம் எமது கட்சிக்கு கிடைத்தது. நாம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது நம்பிக்கை வைத்து அவரைத் தெரிவு செய்தோம். அவர் மக்களுக்கு விசுவாசமானவரா? மக்கள் பிரதிநிதிகளுக்கு விசுவாசமானவரா? ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வு, இன்றைய இந்த அமர்வை விட முக்கியமானதா? எமக்கு வாக்களித்த 3 இலட்சம் மக்களை விடவும், அந்த நிகழ்வு மகோன்னதமானதா? அந்த நிகழ்வு அப்படி முக்கியமானது இல்லையாயின், முதலமைச்சர் மக்களை ஏமாற்றியவராகவே இருப்பார். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சில தினங்களுக்கு முன்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிய கடிதத்தில், அரசியல் தீர்வு முதலில் பின்னர்தான் அபிவிருத்தி என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், 2013ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அரசியல் தீர்வுக்கு சமாந்தரமாக அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். ஆனால் முதலமைச்சர் அதற்கு மாறாகச் செயற்பட்டுள்ளார். ஏன் இந்த இரட்டைவேடம்.

முதலமைச்சர், முன்னாள் அமைச்சர் ஒருவரைப்பாதுகாக்கமுற்பட்டமையே இன்றைய இந்த விவகாரத்துக்கு எல்லாம் காரணம் - என்றார். (5)

**Ceylinco General Insurance Ltd.**
**Ceylinco VIP இல் வேலைவாய்ப்பு**

VACANCY

பதவி :- Marketing Executive
ஆண்/பெண்

Basic Salary + Fuel + Company motor Bike + Allowance

தகைமை :- O/L

பதவி வெற்றிடம் :- Jaffna, Atchuvely, Chavakachcheri, Chunnakam, Nelliyadi.

நேர்முகத்தேர்வு திகதி :- 18,19 July 2018 - 9am

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் :-
Jaffna Branch - 021 222 6257
173, Stanly Road, Jaffna.

(IN/7299)(11,17)

## பணிஸ் வகைகளின் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்.ஜூலை 17
அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின், தீர்மானத்துக்கமைய யாழ்ப்பாண மாவட்டத்திலும் பாண் தவிர்ந்த பணிஸ் வகைகளின் விலையை 5 ரூபாவால் அதிகரிக்க யாழ்ப்பாணம் மாவட்ட பேக்கரி உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கமும், மாவட்ட பேக்கரி உரிமையாளர்சங்கமும் இணைந்து தீர்மானித்துள்ளது.

இவ்விலை அதிகரிப்பு நாளை புதன்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தப் படும் என யாழ்ப்பாணம் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

## ஆடிப்பிறப்பு நிகழ்வுகள்

தென்மராட்சி, ஜூலை 17
யாழ்ப்பாணம், தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இன்று செவ்வாய்க்கிழமை ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன எனப்பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

தென்மராட்சிக் கல்வி வலய நலன்புரிச் சங்கத்தினரால் ஆடிப்பிறப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு வலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளில் சிறார்களுக்கு ஆடிப்பிறப்பு தொடர்பானவிழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆடிப்பிறப்பு நிகழ்வு நடத்தப்படவுள்ளதென முன்பள்ளி ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர். (9)

★ ★ ★

யாழ்ப்பாணம்.ஜூலை 17
யாழ்ப்பாணம், கொக்குவில் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு தமிழர் பண்பாட்டு நிகழ்வும் பரிசில்கள் வழங்கும் வைபவமும் நிலைய மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடை பெறும்.

ஆடிப்பிறப்பு தினத்தையொட்டி கொக்குவில் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட பிரம்படிப்பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான அறிவுத்திறன் காண் எழுத்துப் பரீட்சைப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# மண் அகழ்வைக் கட்டுப்படுத்த காவலரண் அமைக்க பொலிஸார் பின்னடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 17
சட்ட விரோத மண் அகழ்வுச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸ் காவலரண் அமைக்க வேண்டும் என்று நல்லூர்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்னமும் நடைமுறைக்கு வராமையினால் மண் அகழ்வு தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

நல்லூர்ப் பிரதேச செயலத்துக்கு உட்பட்ட அரியாலைப்பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இரவு, பகல் பாராது தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது. இந்த அகழ்வு தொடர்பில் மணல் ஏற்றி வரும் வழியில் நிப்பவர்கள் ஏதும் கேட்டால் கூடத் தாக்கப்படும் சம்பவமும் நடைபெற்று வருகின்றது. இதனால் சட்ட விரோத மணல் அகலும் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பிரதேசபொது அமைப்புகளால் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற நல்லூர்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து மணல் அகலும் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கு அந்தப் பகுதியில் நிரந்தரப் பொலிஸ் காவலரண் அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நான்கு மாத காலமாகியும் இன்னமும் அரியாலைப் பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்கப்படவில்லை. இதனால் சட்ட விரோத மணல் அகழ்வுச் செயற்பாடு இன்னமும் அதிகரித்துள்ளதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு கேட்ட போது.

அரியாலைப் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்குமாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் உயர் பொலிஸ்அதிகாரிகளுக்குக் கடிதங்களை மூன்று முறை அனுப்பியுள்ளோம். ஆனால் அனுப்பிய எந்தக் கடிதத்துக்கும் பதில் கிடைக்கவில்லை. ஆகவே மாவட்ட ரீதியில் நடைபெறும் பொலிஸ்அதிகாரிகளுடனான சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் வலியுறுத்தப்பட்டுசரியான தீர்வு விரைவில் பெறப்படும்-என்றனர். (7)

### ஆடி செவ்வாய் உற்சவம்

யாழ்ப்பாணம், நீர்வேலி தெற்கு மனோர்மணி அம்மன் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆடி செவ்வாய் உற்சவம் மற்றும் ஆடிப்பிறப்பு நிகழ்வு என்பன இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு சிறப்பு அபிஷேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்று ஆடிக்கூழ் காய்ச்சும்நிகழ்வும் நடைபெறும். (17)



யாழ்ப்பாணம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தின் கீழ் வலி.வடக்கு மீள்குடியேற்ற பகுதியான பலாலி தெற்கில் பொருளாதார நிலையில் பின்தங்கிய 3 பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் குடும்பம் ஒன்றுக்குப் பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என ரூபா 20 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (113)

### "தேச கீர்த்தி" விருது

யாழ்ப்பாணம்.ஜூலை 17
பருத்தித்துறை ஆதார மருத்துவமனை உத்தியோகத்தர் இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளருமாகிய வைத்தியலிங்கம் மோனகதாஸ் தேசிய ரீதியில் சமூகப் பணியாற்றியமைக்காக "தேச கீர்த்தி" விருதை பிரதி அமைச்சர் அல்ஹஜ் செய்கித் அலி சாஹிர் மௌலானா வழங்கி மதிப்பளித்தார். (35)



## முதியோர் கொடுப்பனவுகள்

சாவகச்சேரி, ஜூலை 17
யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்குச் சமூக சேவைகள் திணைக்களத்தால் மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வீதம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வந்தன. கடந்த மாதம் அஞ்சல் திணைக்களத்தினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் அந்தந்த சமூர்த்தி வங்கிகள் மூலம் முதியோர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. தற்போது அஞ்சல் அலுவலகங்கள் செயற்படுவதால் வழமை போல் அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவுகளை இன்று தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

### பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இந்த ஆண்டு ஜி.சி.ஈ உயர்தரப் பரிட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். நாளை புதன்கிழமை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் தவிக்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டதாகக் கல்லூரி அதிபர் அறிவித்தார்.

### பரீட்சைகள் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம்

கொடிகாமம், ஜூலை 17
இந்த ஆண்டு ஜி.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சை, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் கடந்த வியாழக்கிழமை வடக்கு மாகாணசபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாகாண்க் கல்விப் பணிப்பாளர் உட்பட வலயக் கல்விப் பணிப்பாளர் ஏனைய கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (159)

## சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஜூலை 17
சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினரின் ஏற்பாட்டில் அமெரிக்க 'ஐரோப்பிய பனிப்போர்' என்ற தலைப்பிலான சிறப்புக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம், தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும்

நிகழ்வில் நெதர்லாந்தில் இருந்து வருகைதந்திருக்கும் அரசியல், பொருளாதார ஆய்வாளரும், இடதுசாரிச் செயற்பாட்டாளருமான தோழர் கலையரசன் சிறப்பு உரையை ஆற்றவுள்ளனர்.

## பிறந்த நாளில் சிறுமி செய்த அன்பளிப்பு



யாழ்ப்பாணம், மீசாலை, கமலாம்பிகை வித்தியாலயத்தில் தரம் 4 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் ரவீந்திரன் லக்ஸ்வினி என்ற மாணவி தனது பிறந்த நாளான நேற்று பாடசாலையின் விளையாட்டுத் தேவைக்குப் பயன்படுத்தும் கூம்புகளை வித்தியாலய அதிபரிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மாணவியின் இந்தச் செயலை ஏனைய பெற்றோர் முன்னுதாரண நிகழ்வாக பாராட்டி தாமும் பாடசாலையின் தேவை அறிந்து தமது பிள்ளைகளின் பிறந்த நாள் பரிசாக வழங்கவுள்ளதாகத் தெரிவித்தனர். (9)

## பால் உற்பத்திகள் தொழில்நுட்ப பயிற்சி

பருத்தித்துறை.ஜூலை 17
பால் உற்பத்தி செய்யும் பண்ணையாளர்களின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் பால் சார்ந்த உற்பத்திகள் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சி நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்குப் பிரதேச செயலக மாநட்டு மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பால் உற்பத்தி செய்யும் பண்ணையாளர்கள் மற்றும் இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு விருப்பமுள்ள அனைவரையும் பங்குகொண்டு பயன்பெறுமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 17
யாழ்ப்பாணம், அருள்மிகு மாவிட்டபுரம் சிறி கந்தசுவாமி கோவில் காம்யோற்சவப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறும்.

தொடர்ந்து எதிர்வரும் ஒகஸ்ட் 5 ஆம் திகதி திருக்கார்த்திகை உற்சவமும், 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

★ ★ ★

தெல்லிப்பழை, ஜூலை 17
யாழ்ப்பாணம், தெல்லிப்பழை - அளவெட்டி- கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம்திகதிவியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் அன்றையதினம் இரவு 7மணிக்குக் கொடியிறக்கமும் இடம்பெறும் என ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

★ ★ ★

அளவெட்டி தெற்கு, வெளிவயல் அருள்மிகு சிறி முத்து மாரியம்மாள் ஆலயப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும்.

தினமும் காலை 9 மணிக்குப் பூசைகள் நடைபெறுவதுடன், மாலை 6.30 மணிக்கு வசந்தமண்ட பூசைகள் இடம்பெற்று சுவாமிவீதிஉலாஇடம்பெறும் என ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவர் தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (36)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 17
யாழ்ப்பாணம், எழுதுமட்டுவாழ் விழுபளை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் (கண்ணகை அம்மன்) ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும்26ஆம்திகதிவியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் பெருந்திருவிழாக்கிரியைகள் சிறி சக்தி கிரியா குருமணி சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்களின் ஆசியுடன் குமார வித்தக ஜோதி சிவஸ்ரீ வெ.தில்லையம்பலக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (9)

### சிங்கள மொழித் திறன் போட்டிகள்

தென்மராட்சி, ஜூலை 17
யாழ்ப்பாணம், தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையிலான வலய நிலை சிங்கள மொழித் திறன் போட்டிகள் நேற்று வலய கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன. இதில் எழுத்து, வாசிப்பு, பேச்சு போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. (9)

# இளைஞர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜூலை 17

சிறந்த சமூகத்தை உருவாக்க வேண்டுமாயின் இளைஞர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள இளைஞர்கள் இன,மத,சாதி வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையாகச் செயற்பட்டால் எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தை நாம் காணலாம் என வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.



சாவகச்சேரி நகர் இளைஞர் மன்றத்தால் சுமார் 3 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சாவகச்சேரி நகர பொதுநோக்கு மண்டபம் புனரமைப்பு மற்றும் மதில் ஆகியவைநேற்றுமுன்தினம் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னையகாலத்தில்சமூக ஒழுக்கத்துக்குப் பயந்து. சட்டத்தை மதித்து இளைஞர்கள் வாழ்ந்துள்ளனர். ஒரு சிலரின் தவறான நடவடிக்கைகளால் அனைத்து இளைஞர் சமூகத்துக்கும் தலைகுனிவு ஏற்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த இளைஞர் சமூகம் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் நிச்சயம் ஒவ்வொரு கிராமத்திலும் ஒழுக்கமுள்ள சமூகம் உருவாகும் என்பதை மறுக்க முடியாது.

எமது பிரதேசத்தில் வாழ்ந்த பெருமளவு இளைஞர்கள் சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் சட்டங்களை மதித்ததால் புலம்பெயர் நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இதனால் எமது பிரதேசத்தில் சனத்தொகையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இங்கு பிரபல்யமாகக் காணப்பட்ட கல்வியியலாளர்கள் புலம்பெயர் நாடுகளுக்குச் சென்றதால் எமது கல்வியில் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் கல்வி நிலையில் வளர்ச்சி ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

அதற்கு இங்குள்ள இளைஞர் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்ட விழிப்பு ணர்வே காரணமெனலாம். நாட்டின் எதிர்காலம் சிறந்த சமூகத்தை உருவாக்கும் பெரிய பொறுப்பு எமது இளைஞர்கள் மத்தியில் தான் உள்ளது - என்றார்.

தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் சிறிலங்கா இளைஞர் கழகச் சம்மேளனம், இளைஞர் நாடாளுமன்றத்தின் துறுணு கிராம சக்தி மக்கள் அடிப்படைக் கருத்திட்ட வேலைத்திட்டத்தின் கீழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நன்கொடை மற்றும் மக்கள் பங்களிப்புடன் இவ் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகர இளைஞர் மன்றத் தலைவர் ஞா.கிசோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகச் சாவகச்சேரி. நகரசபை உப தவி சாளர் அ.பாலமயூரன், நகரசபையின் உறுப்பினர்களான ப.ஜயகாந்தன், லலிதாராணி இரவீந்திரன் மற்றும் கிராம அலுவலர் க.சுபாஸ் சந்திரபோஸ் சாவகச்சேரி நடுவர் சபைத் தவிசாளர் வை.இராசரத்தினம் செருக்கல் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா மு.பரமேஸ்வ ரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி பொது நோக்கு மண்டபப் பயன்பாட்டுக்கென 57 பிளாஸ்ரிக் கதிரைகள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபனால் சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவியிடம் கையளிக்கப்பட்டன. (9)

# பிரதேச அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு ஆதனவரியை மீள்பரிசீலனை செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 17

போதிய வருமானம் கிடைக்காமையால் வலி. தென்மேற்குப்பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில்கொண்டு ஆதனவரியை விரைவாக மீள்பரிசீலனை செய்யுமாறு வலி.தென் மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் லோ.ரமணன் தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு வசதியாகக் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறை குறித்து தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளகடிதத்தில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சபைக்குக் கிடைக்கும் வருமானத்தைச் செலவு செய்வதில் சபைக்கு இருக்கும் அக்கறை வருமானத்தை அதிகரிக்கச் செய்வதில் காட்டுவதில்லை. இதனால் பிரதேசத்தின் அபிவிருத்தியில் தடங்கலும் தாமதமும் ஏற்படுகின்றது. சபைக்குக் கிடைக்கும் வருமானங்களில் ஆதனவரி முக்கிய பங்கு வகிக்கின்றது. நீண்ட காலமாக ஆதனவரி மீள் மதிப்பீடு செய்யப்பட்டமையினால் பிரதேச சபையின் வருமானத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது. ஏனைய சபைகளைப்போல் எமது சபையும் ஆதனவரி வேலைத் திட்டத்தைக் கணினி மயப்படுத்த வேண்டும் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வலி.தென் மேற்குப்பிரதேசசபைத் தவிசாளருடன் ''உதயன்'' தொடர்பு கொண்டு கேட்ட போது. பண்டத்தரிப்புப் பட்டினம்.பண்டத்தரிப்புக்கிராமம் ஆகியன 40 வருடங்களுக்கு மேலாக ஆதன மதிப்பீடுகள் இன்றிக் காணப்படுகின்றது. இது தொடர்பில் விலை மதிப்பீட்டுத்திணைக்களங்களுக்கு மதிப்பீட்டுக்காக அனுப்பிவைக்கப்பட்டு அதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மானிப்பாய்க் கிராம ஆதன மதிப்பீட்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டவைக்கான புதிய மதிப்பீடுகள் வந்து சேர்ந்துள்ளன. இதே போன்று பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்புக் கிராமங்களுக்கும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் புதிய பெறுமதிகள் வழங்கப்படும் பட்சத்தில் உரியநடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (115,114)



யாழ்ப்பாணம், வடமராட்சி திருநாவலூர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வானது முன்பள்ளி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (124)



தீவக வலய மழலைகள் விளையாட்டு நிகழ்வு. யாழ்ப்பாணம். புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை உதவிக் கல்விப் பணிப்பாளர் குமாரதாசன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இளங்கோ கலந்துகொண்டார்.

## பரிசளிப்பு நிகழ்வும் நூல் வெளியீடும்

யாழ்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம், மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் இன்று மாலை 2மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் நருமதா பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளுக்கு முன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் சிவலிங்கம் சத்தியசீலன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (21)



யாழ்ப்பாணம், வரணி மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு கல்லூரி முதன்மை மண்டபத்தில் அண்மையில் அதிபர் ப.செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் சிறப்பு விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரனும் கலந்து கொண்டு மாணவத் தலைவர்களுக்கு சின்னஞ் சூட்டினர். (9)

## குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம்,ஜூலை 17

யாழ்பாணம், நவாலி சென். பீற்றர் தேவாலயத்தில் விமானக்குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த 147 உறவுகளின் 23 ஆம் ஆண்டு நினைவாகக் குருதிக் கொடை முகாம் தேவாலய முன்றலில் அண்மையில் இடம் பெற்றது.

நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக் குருதி வங்கி பொறுப்பதிகாரி மருத்துவர் ம.பிரதீபன் தலைமையிலான குழுவினர் இதில் கலந்து கொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.




# கணினி மயமாகின்றன சபையின் நூலக நூல்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 17

வாசகர்களின் நலன் கருதியும் அவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடனும் வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்களிலிருக்கும் நூல்கள் கணினிமயப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான அங்கீகாரத்தை நிதிக்குழு வழங்கியமையையடுத்து பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென் மேற்குப்பிரதேச சபையின் கீழ் நான்கு நூலகங்கள் இயங்கி வருகின்றன. நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லாமையால் வாசகர்களுக்கு அங்கிருக்கும் நூல்கள் பற்றிய விவரங்கள் தெரியாமலிருப்பதுடன் அவர்கள் விரும்பும் நூல்களை வழங்குவதில் தாமதமும் தடங்கலும் ஏற்படுகின்றன. இதனால் வாசகர்களின் விருப்பத்தை உடனுக்குடன் நிறைவு செய்ய முடியாத நிலை அங்கு கடமையாற்றும் நூலகர்களுக்கும் ஏற்படுகின்றன.

இந்தநிலை குறித்து பிரதேச சபையின் மாதாந்தக்கூட்டத்தில் நூல்களைக் கணினிமயப்படுத்துவதற்கு முன்வந்துள்ளதுடன் இதற்கான அனுமதியையும் நிதிக்குழுவினரிடம் கோரியிருந்தனர்.

நிதிக்குழு இதற்கான அனுமதியை வழங்கியதைத் தொடர்ந்து நூல்களைக் கணினி மயப்படுத்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மானிப்பாய் பட்டினத்தில் இயங்கும் நூலகத்திலுள்ள நூல்கள் கணினி மயப்படுத்தப்படவுள்ளன என வலி.தென் மேற்குப்பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (115)

## இளம் பெண்...

யாழ்ப்பாணம் ஜூலை 17

இளம் பெண் ஒருவரின் தற்கொலைக்கு சட்டத்தரணி ஒருவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

சட்டத்தரணி மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்தவொரு ஆதாரங்களும் இல்லை என யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையக் குற்ற விசாரணைப் பிரிவு முன்வைத்த விசாரணை அறிக்கை தொடர்பில் அதிருப்தியை வெளியிட்ட யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், இந்த உத்தரவை வழங்கினார்.

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த நாகேஸ்வரன் கௌசிகா (வயது -23) என்ற இளம் பெண் கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி தவறான முடிவெடுத்து இறப்பை வருந்தி அழைத்துக்கொண்டார்.

யாழ்ப்பாணம் மருதடியிலுள்ள தனது நண்பியின் இல்லத்தில் யாரும் இல்லாத வேளை அவர் தூக்கு மாட்டிக்கொண்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தவறான முடிவெடுக்க முன்னர் இளம் பெண் எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றை யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸார் மீட்டனர்.

உயிரிழந்த கௌசிகா கடந்த வருடம் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான போதிலும் வீட்டுச் சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் செல்லவில்லை என குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். அதன் பின்னர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் அவர் பணியாற்றி வந்தார். இறக்கும்போது அவர் எழுதியுள்ள கடிதத்தில் அந்தச் சங்கத்தின் தலைவரான சட்டத்தரணியே தனது சாவுக்குக் காரணம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

"பல்வேறு ஊழல் தொடர்பான விடயங்களில் அந்தச் சட்டத்தரணி என்னைக் கட்டாயப்படுத்தி வந்தார். பெரும் தொகையான பணத்தை நான் திருடிவிட்டேன் என்று தெரிவித்து என்னை அச்சுறுத்தினார். எனவேதான் உயிரைமாய்க்கத் தீர்மானித்தேன்" என்று இளம் பெண் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட சட்டத்தரணியிடம் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் இளம் பெண்ணின் குற்றச்சாட்டுத் தொடர்பில் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டிருந்தார்.

இளம் பெண்ணின் சாவு குறித்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் நிலையக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி மன்றில் தோன்றி விசாரணை அறிக்கையை முன்வைத்தார்.

இளம் பெண்ணின் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்ப தற்கான ஆதாரங்கள் இல்லை என்றும் குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லை எனவும் பொலிஸாரின் அறிக்கையில் கூறப்பட்டது. அந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களில் மன்று அதிருப்தியடைந்தது. உரிவாறு விசாரணை நடத்தப்படவில்லை என்று பொலிஸ் பொறுப்பதிகாரியை மன்று கண்டித்தது.

"இந்த விசாரணை அறிக்கை தொடர்பில் மன்று அதிருப்தி கொள்கிறது. இளம் பெண்ணால் சட்டத்தரணி மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விரிவாக விசாரணைகளை மேற்கொண்டு வழக்கை முன்னெடுக்குமாறு கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடப்படுகிறது" என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் கட்டளை வழங்கினார். (உ-103)

## ரூ.2 லட்சம்...

சூழ்நிலை தொடர்பான சிறப்பு விவாதம் நேற்று நடைபெற்றது. கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற அமர் வில், 19 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கோரிக்கை முன்வைத்தற்கு அமைவாக இந்த அமர்வு நடத்தப் பட்டது. ஆளும் கட்சியின் 30 உறுப்பினர்களில் 16 உறுப்பினர்கள் அமர்வில் பங்கேற்கவில்லை. எதிர்கட்சியின் 3 உறுப்பினர்களும் பங்கேற்கவில்லை. உறுப்பினர்களில் சரி அரைவாசிப் பேர் கலந்துகொள்ளாத இந்த அமர்வுக்காக ரூபா 2 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. (உ-5)

### எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றும்

# பொது எதிரணியின் முயற்சியை முறியடிக்க மீள ஐதேக களத்தில்

கொழும்பு, ஜூலை 17

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பொது எதிரணிக்கு வழங்கக்கூடாது என்று ஆளுங்கூட்டணியின் பங்காளி யான ஐக்கிய தேசியக் கட்சி, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் வலியுறுத்தவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது கூட்டரசிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகி எதிர்வரிசையில் அமரும் வரை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உரித்துடையது என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியல்லாத தரப்பு அந்தப் பதவியை வழங்குவது சபைச் சம்பிரதாயத்தை மீறும் செயலாகிவிடும் என்றும் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டவுள்ளனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேர் கூட்டரசிலிருந்து வெளியேறி மகிந்த ஆதரவு அணியான பொது எதிரணியுடன் சங்கமித்துள்ளனர். இதையடுத்து அந்த அணியின் எம்.பிக்கள் தொகை 70ஆக உயர்ந்துள்ளது. இதை மையப்படுத்தியே இந்த வாரம் சபாநாயகரைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமது அணிக்கு வழங்குமாறும், அதற்குரிய காரணங்களைச் சுட்டிக்காட்டியும் கடிதமொன்றைக் கையளிக்க பொது எதிரணி தயாராகி வருகின்றது.

இதற்கு முன்னரும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு மகிந்த அணி பல வழிகளிலும் முயற்சித்தது. எனினும், அதை வழங்குவதற்கு சபாநாயகர் மறுத்துவிட்டார்.

"ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகிய 6 கட்சிகளே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளாகும்.

முதல் இரண்டு இடங்களையும் பிடித்த கட்சிகள் இணைந்து கூட்டரசை அமைத்துள்ளன. எனவே, அதற்கு அடுத்தபடியாக கூடுதல் ஆசனங்களைக்கொண்டுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி உரித்துடையது" என்று சபாநாயகர் விளக்கமளித்திருந்தார்.

எனினும், இதை ஏற்க மறுத்த பொது எதிரணி பல தடவைகள் இது குறித்து சபையில் கேள்விகளை எழுப்பியிருந்ததுடன், பன்னாட்டு நாடாளுமன்ற ஒன்றியத்திலும் முறையிட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மீண்டுமொருமுறை இவ்விவகாரத்தை மகிந்த அணி கையிலெடுத்துள்ளது. இதற்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையாகவே சபாநாயகரை ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் இந்த வாரம் சந்திக்கவுள்ளனர் என்று அந்தக்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (உ-21)

## மாகாண...

வடக்கு மாகாண சபையின் 127ஆவது அமர்வு சிறப்பு அமர்வாகக் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுக் காலை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண சபையில், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாக எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பில் விவாதிப்பதற்காக கூட்டப்பட்ட இந்த அமர்வில் சபை உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். முதலமைச்சரின் செயற்பாடு மீதே பலரும் குற்றம் சுமத்தினர். இலகுவாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினையை, முதலமைச்சர் தன்முனைப்பு (ஈகோ) காரணமாக சிக்கலாக்கியுள்ளார் என்று தெரிவித்தனர்.

இறுதியில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கருத்துரைத்தார். இந்திய அரசமைப்புடன், இலங்கை அரசமைப்பை ஒப்பிட்டு விடயங்களைக் குறிப்பிட்டார். முதலமைச்சர் கடந்த அமர்வில் பேசிய விடயங்களில் தவறுகள் உள்ளதைச் சுட்டிக்காட்டினார். மேலும் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையில், டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்று குறிப்பிட்டபோதும் அவரை உரிய முறையில் பதவி நீக்க முடியாது என்று குறிப்பிடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்.

அதன் பின்னர் இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணுமாறு முதலமைச்சரிடம் சபை கோரிக்கை விடுப்பது என்ற தீர்மானத்தை முன்வைத்தார்.

தீர்மானத்தில் எத்தகைய வாசகங்கள் அடங்கியிருக்கவேண்டும் என்பது தொடர்பில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில், ஆளும் கட்சி உறுப்பினர்களான கே.சயந்தன், பா.சத்தியலிங்கம், த.குருகுலராசா, எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, எதிர்க்கட்சி உறுப்பினர் அலிகான் ஆகியோர் கூடி ஆராய வசதியாக சபை 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

மதியம் 2.15 மணிக்கு சபை மீண்டும் கூடியது. தீர்மான வரைவு சபையின் ஒப்புதலுக்காக முன்வைக்கப்பட்டது.

"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இடைக்காலக் கட்டளை மூலம் எழுந்துள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டும், குறித்த கட்டளை வழங்கப்பட்ட தினமான 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதியிலிருந்து முறைப்படியான அமைச்சர் சபையொன்று வடக்கு மாகாணசபைக்கு முழுமையாகப் பொறுப்புக் கூறக்கூடிய வகையில் இல்லாத நிலை தோன்றியுள்ளது. இதனால் உடனடியான அரசியல் அமைப்பு மீறல் ஒன்று ஏற்பட்டுவிடக்கூடும் என்ற நியாயமான அச்சம் எழுந்துள்ளமையைக் கருத்திற்கொண்டும், மக்களுக்குச் சேவை வழங்கக்கூடிய நிறைவேற்றுத் தீர்மானங்களை எடுக்கமுடியாதவாறு வடமாகாண நிர்வாகம் முழுமையாக முடங்கக்கூடியதொரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாலும், மாகாணசபையினது முதன்மைக் கடமையான சட்டவாக்கத் தத்துவத்தைப் பிரயோகித்து நியதிச் சட்டங்களை ஆக்க முடியாத தேக்க நிலையொன்று உருவாகியுள்ளதாலும், அதன் விளைவாக மாகாண செயற்பாடுகளுக்கு மத்தியின் சட்டவாக்கங்களே பிரயோகமாகி அதிகாரப் பகிர்வுக் கோட்பாடே அர்த்தமற்றதாகி போய்விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலும்,

வடக்கு மாகாண முதலமைச்சர், அரசமைப்பின் உறுப்புரை154 எப் (5) இனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவரது தத்துவத்தை முறையாகப் பயன்படுத்தி வடக்கு மாகாண சபைக்கு ஓர் முழுமையான அமைச்சர்கள் சபையை உருவாக்குவதற்கான ஆலோசனையை எதுவித தாமதமுமின்றி வடக்கு மாகாண ஆளுநருக்கு வழங்கவேண்டுமென்று இந்தச் சபை தீர்மானிக்கின்றது" என்று தீர்மானம் முன்மொழியப்பட்டது. சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. (உ-5)

## அனுதாப...

சோதி தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய சிறப்பு அமர்வில்பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்றைய அமர்வில் என்ன நிலைப்பாட்டை நீங்கள் எடுக்கப் போகின்றீர்கள் என்று முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து நேற்று என்னைத் தொடர்பு கொண்டு கேட்டார்கள். நான் இந்த விவாதத்தில் உரையாற்றுவதில்லை என்றுதான் நினைத்திருந்தேன். என்னையும் இழுத்துவிட்டார்கள்.

நாம் இங்கு பிரச்சினையை இடியப்பச் சிக்கலாக்கியிருக்கின்றோம். வடக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சருக்கு அமைச்சர் சபையைப் பரிந்துரையுங்கள் என்று கடிதம் அனுப்பியதிலிருந்து, இங்கு அமைச்சர் சபை இல்லை என்பது தெளிவாகின்றது. அமைச்சர் சபை இல்லாமல் வடக்கு மாகாண நிர்வாகத்தை நடத்த முடியாது. தொடர்ந்து இதே நிலமை நீடிக்க முடியாது. ஆளுநர் தனது தற்துணிவு அதிகாரத்தில், அரச தலைவருக்கு மாகாண சபையைக் கலைக்கப் பரிந்துரைக்கலாம்.

அவ்வாறு நடக்கவேண்டும் என்பதுதான் சிலரின் விருப்பமாக இருக்கின்றது. அவ்வாறு கலைக்கப்படுவதன் ஊடாக மக்களின் அனுதாபத்தை பெற முடியும் என்று நினைக்கின்றனர். அதனூடாகத் தேர்தலில் தாம் வெற்றியீட்டலாம் என்று அவர்கள் கணக்குப் போடுகின்றனர் என்றார். (உ-5)

## அமைச்சர்களும்...

பதவியில் டெனீஸ்வரன் தொடர்கின்றார் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வடக்கு அமைச்சரவை செயற்பட முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது. வடக்கின் நிறைவேற்று நிர்வாகச் செயற்பாடுகள் முடங்கும் நிலமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய்வதற்கு சிறப்பு அமர்வு நேற்றுக் கூட்டப்பட்டது.

இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுமுன்தினம் இரவு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், தனக்கு முன்னரே ஒப்புதல் வழங்கிய வேறு நிகழ்வு இருக்கின்றது என்பதுடன் உயர் நீதிமன்றத்தின் முன் வழக்கு இருக்கும்போது எந்தளவுக்கு அதன் உள்ளடக்கப் பொருள் பற்றி விமர்சிக்கலாம் என்பது என்ற 'மன்றாய்வில்' கோட்பாட்டின் பால்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். இதே சாரப்பட வடக்கு மாகாண அமைச்சர்களான திருமதி அனந்தி சசிதரன் மற்றும் க.சிவநேசன் ஆகியோர் தெரிவித்து அமர்வில் பங்கேற்கவில்லை.

அமைச்சர் ஜி.குணசீலன் சபை அமர்வில் பங்கேற்று, தனது கட்சியான ரெலோவின் தீர்மானத்துக்கு அமைவாகவும், வழக்கின் பிரதிவாதிகளுள் ஒருவர் என்ற அடிப்படையிலும் வெளியேறுவதாகத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தார்.

அமைச்சர் க.சர்வேஸ்வரன் சபை அமர்வில் பங்கேற்கவில்லை.

ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ரெலோ உறுப்பினர்கள், சபை அமர்வில் பங்கேற்று வெளிநடப்புச் செய்தனர். புளொட் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்களில் தியாகராசா மாத்திரமே பங்கேற்றிருந்தார். அவரும் எதிர்க்கட்சித்தலைவருடன் முரண்பட்டுக்கொண்டு சபையிலிருந்து வெளியேறினார். (உ-5)

## காணாமல்...

கோரிபோராட்டத்தில் ஈடுபட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உறவுகளுடைய போராட்டமும் நாளை புதன் கிழமை 500 ஆவது நாளை அடையவுள்ள நிலையிலேயே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பினுடைய முல்லைத்தீவு மாவட்டத் தலைவி ம.ஈஸ்வரி ஊடாகங்களிடம் தெரிவித்தாவது:

நாளை இடம்பெறும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் மதகுருமார்கள், வணிகர்கள், சிவில் அமைப்பினர், தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் ஏனைய அமைப்புக்களைச் சார்ந்த அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். இலங்கை அரசின் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம் என்று வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்தவர்களும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளோம். எனினும் அந்த அலுவலகத்தை எங்கள் மீது திணிக்கின்றார்கள் என்றால் நாங்கள் ஒப்படைத்த உறவுகள் எங்களுக்குக் கிடைக்க மாட்டார்கள் என்பது உறுதியாகின்றது. எனினும் எமது எதிர்ப்பு உதாசீனம் செய்யப்படுகின்றது.

இலங்கை அரசின் விசாரணை வேண்டாம் என்ற காரணத்தால் தானே பன்னாட்டு விசாரணையினை நாங்கள் கேட்கிறோம். உண்மையில் உலக நாடுகள் தான் எங்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும். எங்கள் விடயத்தில் மீண்டும்அவர்கள்தான் வரவேண்டும் என்ற நோக்குடன் பன்னாடுகளை நோக்கி நாங்கள் பயணித்துக்கொண்டிருக்கின்றோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போராட்டம் தொடங்கி 500 ஆவது நாளில் பன்னாடுகளை நோக்கி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தைத மேற்கொள்ளவுள்ளோம் இந்தப் போராட்டத்திற்கு அனைத்து தமிழ் உள்ளங்களும் ஆதரவு தரவேண்டும் என்று அன்புடை அழைக்கின்றோம்- என்றார். (உ-21,ரி3)

## புத்தரின்...

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தாயைப் பார்ப்பதற்கு நேற்று மாலை 3 மணியளவில் வைத்தியசாலைக்கு வந்த பெண் ஒருவர் வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அந்தப் பெண் அணிந்திருந்த மேலாடையில் புத்தர் மற்றும் விகாரைகளின் படங்கள் சிறிது சிறிதாக நிறையப் பொறிக்கப்பட்டிருந்தன.

தொடக்க விசாரணைகளை அடுத்து வவுனியா அவசரப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த அவசரப் பொலிஸார் அந்தப் பெண்ணை தங்கது வாகனத்தில் ஏற்றி அழைத்துச் சென்று வழக்குப் பதிவு செய்த பின்னர் விடுவித்தனர்.

35 வயதுடைய அந்தப் பெண் தான் 10 வருடங்கள் இந்தியாவில் வசித்தேன் என்றும், உள்நோக்கத்துடன் தான் அவ்வாறு ஆடை அணியவில்லை என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிவித்திருந்தார். (உ-21,110)

## போதைப்பொருள்வியாபாரத்தை ஒழிக்க கூட்டரசே நடவடிக்கை எடு

### வலியுறுத்துகிறவர் மகிந்த ராஜபக்ச



கொழும்பு, ஜூலை 17

போதைப் பொருள் வியாபாரம் தொடர்பில் வடக்கு அரசியல்வாதிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டு தெற்கிலிருந்தும் முன்வைக்கப்படுகிறது.

இந்த போதைப் பொருள் வியாபாரத்தை ஒழிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறு கூறியுள்ளார்.

போதைப்பொருள் தொற்றுநோயால் இன்று சாதாரண பிள்ளையொருவர் வீதியில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் இளைய தலைமுறையினர் போதைப் பொருளுக்கு அடிமையாவதைத் தடுக்கச் சிறப்பு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (4)

## அதிகாரத்தை எமக்கு வழங்குங்கள் சமூகத்தை மாற்றிக்காட்டுகிறோம்

### கோத்தாவைப் போல பசிலும் இறைஞ்சுகிறார்



கொழும்பு, ஜூலை 17

**மக்கள் தங்களுக்கு அதிகாரத்தை வழங்குவார்களாக இருந்தால், ஐந்து வருடங்களுக்குள் சட்டத்தை மதிக்கும் ஒரு சமூகத்தை உருவாக்கிக் காட்டுவேன் என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.**

இலங்கை மக்கள் முன்னணியின் ஆதரவுக்கூட்டமொன்று கொழும்பில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று மக்களுக்குத் தூக்குத் தண்டனை பிரச்சினையல்ல. பொது மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புத் தொடர்பான பிரச்சினையைத் திசை திருப்பவே அரசு முற்படுகிறது. அதற்கான நாடகமே தூக்குத் தண்டனை நடவடிக்கை.

எமக்கு அதிகாரம் கிடைத்தால் தூக்கு மேடை அமைக்கமாட்டோம்: பாடசாலை, விகாரை, கோவில், பள்ளிவாசல் என்பன அமைப்போம். இந்தச் சமூக அமைப்பின் ஊடாகச் சட்டத்தை மதிக்கும் மக்களை உருவாக்குவோம் என்றார். இதுதவிர, பசிலின் சகோதரரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச வாரவெளியீடு ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், தான் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தயார் என்றும், தனக்குத் தமிழ்மக்களும் வாக்களிப்பார்கள் என்றும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)


## ஹெரோய்ன் பொதிசெய்துவந்த ஒரே குடும்பத்தின் 5 பேர் கைது

கொழும்பு, ஜூலை 17

ஹெரோய்ன் போதைப் பொருள்களைப் பொதிசெய்து கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஒரே வீட்டிலிருந்து குடும்ப உறுப்பினர்கள் 5 பேரை மகரகம பொலிஸார் கைது செய்துள்ளனர். 481.3 கிராம் எடையுள்ள 6 மில்லியன் பெறுமதியான ஹெரோய்னை அவர்கள் பொதி செய்துகொண்டிருந்தனர் என்று குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது.

தாய், தகப்பன், இரண்டு மகள்கள் மற்றும் ஒரு களின் கணவன் ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

இந்தக் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, 57, 45, 27 மற்றும் 17 வயதுடைய இருமகள்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)



## தரம் வாய்ந்த கடற்கரைப் பூங்காவை 300 மில்லியனில் அமைக்கத் திட்டம்

கொழும்பு, ஜூலை 17

கொழும்பு துறைமுக நகரையொட்டி 300 மில்லியன் டொலர் செலவில் உலக தரம் வாய்ந்த கடற்கரைப் பூங்கா ஒன்றை இலங்கை அரசு அமைக்கவுள்ளதாக ஜின்குவர செய்தி முகவர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொள்ளுப்பிட்டிக்கும், தெஹிவளைக்கும் இடையில் இந்த உலக தரம் வாய்ந்த கடற்கரைப் பூங்கா அமையவுள்ளது. இதற்கென அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது என்று தென்மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க தெரிவித்தார்.

இது ஒரு செயற்கைக் கடற்கரைப் பூங்காவாக அமையவுள்ளது. ஆயிரக்கணக்கான பார்வையாளர்களைக் கவரும் என்று தெரிவித்த இதன் திட்டப் பணிப்பாளர் டி.இ.சி. ஜெயக்கொடி, பாதுகாப்பான கடல் குளியல் உட்படப் பல கடற்கரைப் பொழுதுபோக்கு அம்சங்களை இந்தக் கடற்கரைப் பூங்கா கொண்டிருக்கும் - என்றார். (4)

## முன்னாள் ஐ.ஜி.பிக்கு நீதிமன்று பிணை

கொழும்பு, ஜூலை 17

முன்னாள் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார மற்றும் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ சுகதபால ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைச் சம்பவம் தொடர்பில் குறித்த இருவரையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

கல்கிஸ்ஸ நீதிவான் மன்றில் இருவரும் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க, 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அத்திடிய பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## சர்வ மதத் தலைவர்களின் சந்திப்புக்கு அரசு திட்டம்



கொழும்பு, ஜூலை 17

இன ஐக்கியத்துக்காக சர்வ மதத் தலைவர்களின் சந்திப்புக்களை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தேசிய மஸ்ஜித் விருது விழா அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகின் ஏனையநாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் இன ஐக்கியம் மிகவும் உயர்ந்த மட்டத்தில் உள்ளது.

சில தரப்புக்கள் இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்த முயற்சித்த போதும் பரஸ்பர புரிந்துணர்வுடன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை விருத்தி செய்வதற்காக அனைத்து மதத் தலைவர்களையும் ஒன்றிணைக்கும் மாநாட்டையும் அரசு ஒழுங்குசெய்துள்ளது என்று சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

கல்வி, சகவாழ்வு, சமூக சேவை, ஜீவனோபாயம் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் சேவையாற்றிய பள்ளிவாசல்களின் நிர்வாகத்தைப் பாராட்டி அங்கு 23 விருதுகள் வழங்கப்பட்டன.

ஆலோசனை மற்றும் நல்லிணக்க சபை முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இந்த விழாவை ஒழுங்கு செய்திருந்தது. இலங்கையில் இவ்வாறான ஒரு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இந்த நிகழ்வில் மகா சங்கத்தினர் உட்பட பல அதிதிகள் கலந்து கொண்டனர். 172 பள்ளிவாசல்களின் பிரதி நிதிகளும் இதில் பங்கேற்றார்கள். (4)

## மாகாணத் தேர்தல் தள்ளிப்போவதால் கூட்டரசுக்கு மக்கள் எதிர்ப்பு அதிகரிப்பு

### கிழக்கு முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17

மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்தும் பிற்போடுவதனூடாகக் கூட்டரசு தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்பையே சம்பாதித்துவருகிறது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸீர் அஹமத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகள் மைய அரசால் பந்தாடப்பட்டுவருகின்றன. இதன்காரணமாகத்தான் நான் மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவது குறித்து அந்தந்த மாகாண சபைகளே தீர்மானிக்க அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தேன்.

மக்களின் வாக்குகளால் தெரிவான ஒரு ஆட்சி நிறுவனத்தை அந்த மக்களின் விருப்பின்றித் தன்னிச்சையாகக் கையாளும் உரிமையை மைய அரசுக்கு மக்கள் வழங்கவில்லை. இவ்வாறு மேற்கொள்ளப்படுவது ஜனநாயகத்துக்கு விரோதசெயல்.

ஆகவே மாகாண சபைகளின் கால எல்லைக்குள்ளோ அதன் நிறைவிலோ தேர்தலை நடத்தும் அதிகாரம் அந்தந்த மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். மாகாண சபைகள் அதில் ஏதேனும் இழுத்தடிப்புகளைச் செய்யுமாயின் அதில் மைய அரசு தலையிடும் அரசமைப்புச் சிறந்தது.

எனவே தற்போது பிற்போடப்பட்டுள்ள தேர்தல்களை பழைய முறையில் உடனடியாக நடத்த அரசு முன்வர வேண்டும். அவ்வாறில்லாது புதிய முறையில் நடத்துவதாகக் கூறி மேலும் தேர்தல் பிற்போடப்பட்டாலோ அல்லது சிறுபான்மையினருக்கு எதிராகப் புதிய முறைமையில் நடத்தினாலே நாம் வீதிக்கு இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (4)

# செல்வம் மிக்க நாடு திட்ட நிகழ்வு ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 17
நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் கம்பெரலிய அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று குருணா கலையில் இடம்பெற்றது.
2025ம் ஆண்டின் செல்வமிக்க நாடு என்ற தொனிப்பொருளில் இது நடத்தப்படுகிறது.
தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிகரவெரட்டிய தேர்தல் தொகுதியில் ரஸ்னாயகபுர பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கனுக்கெட்டியவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
இதில் நிதி மற்றும் ஊடக துறை அமைச்சர் மங்கள சமரவீர, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (4)

# ராஜபக்ச குடும்பத்தை பிரிக்கவே முடியாது

பண்டாரநாயக்க குடும்பத்திரை பிரித்ததுபோல், ராஜபக்ச குடும்பத்தினரைப் பிரிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.
அரசுக்கு எதிரான மக்கள் பேரணி ஒன்று பலாங்கொட பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ராஜபக்சகுடும்பத்தினரின் பலம், இந்த நாட்டில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களை விட வலுவானது என்று அங்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார்.
மற்றுமொரு பேரணி ஒன்று இரத்தினபுரி, பெல்மடுல்ல பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (4)

# பாதுகாப்பை மேம்படுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை

கொழும்பு, ஜூலை 17
நாட்டின் தொழில் பாதுகாப்புத் துறையை மேம்படுத்துவதற்கும் வலுவூட்டுவதற்குமாக இன்சி சிமெந்து நிறுவனமும், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது.
அமைச்சர் ரவீந்திர சமவீரவும், இன்சி சிமெந்து இலங்கை நிறுவனத்தின் தலைமை நிறைவேற்ற அதிகாரி நந்தண ஏக்கநாயக்கவும் இடையில் அண்மையில் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், செயற்றிறன் மிக்க அபிவிருத்தி ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளன. பாதுகாப்பான சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்கள் மூலமாகச் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வது இதன் நோக்கம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)




# இ.போ.ச வினருக்கு அடுத்த வருடம் சீருடை அறிமுகம்

கொழும்பு, ஜூலை 17
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து ஓட்டுநர்களுக்கும் நடத்து நர்களுக்கும் அடுத்த வருடம் தொடக்கம் சீருடை ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.
இலங்கைப் போக்குவரத்து சபையின் தூர சேவை பேருந்துகளின் ஆசனப்பதிவுக்காக உருவாக்கப்பட்ட இணையத்தள ஆரம்ப நிகழ்வு சபையின் கொழும்பு முதன்மை பணியகத்தில் நேற்று இடம்பெற்றது.
அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (4)

# தூரசேவை பேருந்துகளின் பதிவுக்கு இணையத்தளம்

கொழும்பு, ஜூலை 17
இலங்கைப் போக்குவரத்து சபையின் தூர சேவை பேருந்துகளின் ஆசனப்பதிவுக்காக இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.
இனிமேல் sltb.express.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகத் தூரசேவை பேருந்துகளின் ஆசனப்பதிவை மேற்கொள்ள முடியும் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.
இந்த இணையத்தளத்தை அமைச்சர் நிமல்சிறிபால டிசில்வா நேற்று ஆரம்பித்து வைத்தார். (4)




# அரசாட்சி வீழ்ச்சியடையும்போது சர்வாதிகாரியை அழைக்கின்றனர்

## ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 17**
**நாடு ஒன்றின் அரசாட்சி வீழ்ச்சியடையும்போது சர்வாதிகாரியைக் கைகாட்டி அழைக்கின்றனர். எனினும் சர்வாதிகாரி ஒருவர் நாட்டை முன்னேற்றிய மைக்கான சான்றுகள் உலகில் எங்கும் கிடையாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நாட்டைகாக்கும், நாட்டை முன்னேற்றும் மக்கள் சார்பு ஆட்சி மக்கள் சந்திப்பு வேலைத்திட்டத்தின் முதலாவது கூட்டம் தெற்கு பகுதியிலுள்ள ஊருபொக்கவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னர் இரண்டு மூன்று சிறிய உருண்டைகளாக விழுங்கி நாட்டுக்குள் போதைப்பொருள் கடத்தப்பட்டு வந்தது. விமான நிலையத்தில் இருந்து வெளியில் வந்து பேதி மாத்திரை சாப்பிட்டு அவற்றை வெளியில் எடுத்தனர்.
தற்போது போதைப்பொருள்கள் கொள்கலன் பெட்டிகளில் வருகின்றன. அன்றுபோல் அல்ல தற்போது. போதைப்பொருள் கடத்தலில் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர். கடந்த ஆட்சியில் கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிமால் லங்சா என்ற பிரதியமைச்சரின் வீட்டை அதிரடிப்படையினர் சுற்றிவளைத்தனர். அப்போது மகிந்த ராஜபக்ச ஹெலிக்கொப்டரில் நிமால் லங்சாவின் வீட்டுக்குச் சென்று சுற்றிவளைப்புக்குத் தடையேற்படுத்தி, நிமால் லங்சாவை பாதுகாத்தார்.
நீர்கொழும்பில் நிமால் லங்சாவை குடு லங்சா என்றே அழைப்பார்கள். அன்று மகிந்தவின் பாதுகாப்பைப் பெற்ற அவர், ரணிலின் பாதுகாப்பைப் பெற்று, மீண்டும் மகிந்தவுடன் இணைந்து கொண்டுள்ளார்.
கடந்த தேர்தலில் நுவரெலியாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையின்போது அரசதலைவர் இருந்த மேடையில், உரையாற்றிய எஸ்.பி திஸாநாயக்க, நுவரெலியாவுக்குக் ஹெரோயின் போதைப்பொருளைக் கொண்டுவருபவர் அமைச்சர் திகாம்பரம் என்று பகிரங்கமாகக் கூறினார்.
போதைப்பொருள் கடத்தல்களுக்குப் பின்னால் இருப்பது அரசியல்வாதிகள் என்பது தெளிவானது. எதிர்கால சந்ததிக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை எப்படிப் பணத்தைச் சம்பாதிக்கலாம் என்று யோசிக்கும் அரசியல்வாதிகளே எமது நாட்டில் இருக்கின்றனர்.
போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் இருப்போருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று அரசதலைவர் கூறுகிறார். தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் இருப்போருக்கு அங்கிருந்தவாறு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட முடியுமா?.
போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு மாத்திரமல்ல. பாதாள உலகக்குழுக்களுக்கு அரசியல்வாதிகள் பாதுகாப்பு வழங்குகின்றனர். கடுவல வசந்த என்பவர் ஒருகாலத்தில் பவித்ரா வன்னியாராச்சியிடம் இருந்தார். ஜீலம்பிட்டியே அமரே என்பவர் மகிந்தராஜபக்சவிடம் இருந்தார். என்னிடம் புகைப்படம் ஒன்றும் இருக்கின்றது - என்றார். (4)

# உயர்மட்ட பொருளாதார வளர்ச்சிக்கு சிறார்களுக்கு முன் சிறுபராய வளர்ச்சி

## தற்காலத்தில் முறையாக வேண்டும் என்று அமைச்சர் மங்கள தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17
உயர்மட்டத்திலான பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதற்குச் சிறார்களின் முன் சிறுபராயவளர்ச்சி முறையான விதத்தில் அமையவேண்டும் என்று நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
'மூளைவளர்ச்சியை எதிர்காலத்தை கட்டியெழுப்பல்' எனும் தொனிப்பொருளில் கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற முன் சிறுபராயவளர்ச்சி தொடர்பான உயர்மட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதில் சிறார்களின் முன் சிறுபராய வளர்ச்சி முக்கிய பங்கு வகிக்கின்றது. உயர் போட்டித்தன்மையுடையதும் அறிவார்ந்ததுமான சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்குச் சிறுபராய உடலியல் மற்றும் மூளை வளர்ச்சி என்பன தொடர்பில் அக்கறையுடன் செயற்படுதல் அவசியமாகும்.
கல்வி மற்றும் கல்வி சார்ந்த விடயங்களில் முதலீடுகளின் அளவை அதிகரித்துள்ளதோடு அதன் விரிவாக்கத்துக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் உயர் தரம் வரையான பாடத்திட்டம் மற்றும் அவற்றின் அரச, தனியார் துறைகளின் முதலீடு என்பன தற்போது அரசு கவனம் செலுத்தியுள்ள முக்கிய காரணிகள் என்றார். (4)

சுதுமலை வடக்கு

அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத

# ஸ்ரீ ஈஞ்சடி ஞான வைரவர் ஆலய

## தேர்த் திருவிழா சிறப்பிதழ் - 17.07.2018



**தேர்த்திருவிழா**

அபிஷேகம் காலை 8 மணி
வசந்த மண்டப பூசை
மு.ப 10 மணி
சுவாமி தேரில் ஆரோகணித்தல்
மதியம் 12 மணி
பச்சை சாத்துதல் மாலை 2 மணி



### ஆசியுரை

வைரவப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் போற்றி வணங்கி இன்று (17.07.2018) செவ்வாய்க்கிழமை வைரவப் பெருமானின் தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெற வேண்டும் என்று ஆசி கூறி தேர்த்திரு விழாவின் தத்துவமானது சுவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பட்ட தேரானது அழித்தலைக் குறிப்பது. தேரின் பாகங்கள் பிரபஞ்ச தோற்றத்தையும் அதனுடைய பீடம் கிருதையத்தையும் குறிக்கின்றது. அங்கு இறைவன் வீற்றிருந்து தேர் ஓடுகிறது. நாம் எப்போதும் வாழ்க்கை தேர் சிறப்பாக ஓடுவதற்காக இறைவனை எப்போதும் கிருதையத்தில் வைத்திருக்க வேண்டும். தேர் சரியான பாதையில் ஓடுவதற்கு சறுக்கு கட்டைகள் போட்டு கட்டுப்படுத்து வது போல நம் வாழ்க்கையை சிறப்பாக நல்வழிகளிலே நெறிப்படுத்த வேண்டும். கோபுரம் போல் குவிந்து செல்லும் தேர் கவச முடிவில் குழை நிழல் தெரிகின்றது. மனம் குவிந்து மேலான சிந்தனையுடன் இறைவனைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழல் நம்மை துயர வெளியில் இருந்து பாதுகாக்கும். தேர் காலிலே சிதறு தேங்காய் உடைத்து நமது துன்ப துயரங்களை சிதரடைப்பதும் வெண்நிற உட்பாகம் வெளிப்படையச் செய்து மலநீக்கத்தை உருவகப் படுத்துவதையும் இத் தேர்த்திருவிழாவிலே காணலாம். இந்த வைரப் பெருமானின் தேர்த்திருவிழாவிலே கலந்துகொள்ளும் அடியவர்களுக்கு வைரவப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து எனது ஆசிகளைக் கூறுகின்றேன்.

**உருத்திரமூர்த்திக் குருக்கள்**
**உ.அபராஜித குருக்கள் - பிரதம குருக்கள்**
**ஈஞ்சடி வைரவர் கோயில் - சுதுமலை.**



### ஆலய தர்மகர்த்தாவின் வாழ்த்துச் செய்தி

முழுமுதற் கடவுளாகிய சிவபிரானின் மூர்த்தங்களில் ஒருவரான வைரவப் பெருமான் பண்டைக் காலந்தொட்டு இன்று வரை நமது வாழ்வியல் வழக்காடுகளுக்கு மகிமை சேர்க்கும் தெய்வமாக அருள்பாலித்து வருகின்றார். இவ்வாறான தனிச் சிறப்புமிக்க வைரவப் பெருமான் இன்று தேரேறுகிறார். இலங்கையில் முதன்முதலில் வைரவப் பெருமானுக்கு தேர் இழுக்கும் பெருமையைக் கொண்ட சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தான தேர்த் திருவிழாவானது சுதுமலையம்பதியில் உள்ள தீமைகளை அழித்து ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுப்பதுடன். பக்தர்கள் அனைவருக்கும் வைரவப் பெருமானின் திருவருள் கிடைக்கப்பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்தித்து வாழ்த்துக்களை கூறிக் கொள்வதுடன். ஆலய புனருத்தாரணத்தில் இணைந்து கொண்ட அனைத்து வைரவப் பெருமானின் அடியவர்களுக்கும் இவ் வேளையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.க.இராசரத்தினம்**
**(தலைவர்)**
**ஆலய தர்மகர்த்தா சபை,**
**ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்,**
**சுதுமலை.**



### தேரேறி வருகின்றார் சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர்

சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் ஈழத் திருநாட்டின் வட பகுதியான மகுடம் என விளங்கும் யாழ்ப்பாணத்தில் வளம் பல பெருகும் சுதுமலைப் பகுதியில் இன்று
தெஷினாய புண்ணிய தினமாகிய இன்று (ஆடிப்பிறப்பு) தேரேறி வருகிறார் சுதுமலைப் பகுதியில் வீற்றிருக்கும் ஞானவைரவர். சுந்தரவடிவனாய் சுந்தர தேரேறி எம்மைக்காக்க வருகின்றார்.
இன்று தேர்த் திருவிழா கோலாகலமாக நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இறைவன் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு பஞ்சகிருத்தியங்களை செய்கின்றார். அந்தவகையில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவானது அழித்தலைக் குறிக்கின்றது. எனவே அழித்தலின் பின்னர் ஆன்மா இறையருள் பெற முடியும். இதனால் தேர்த்திருவிழாவின் மேன்மையை நன்கு உணர முடியும்.
இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவானது இவ் ஊரில் உள்ள தீமைகளை அழித்து ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிவகுப்பதுடன் பக்தர்கள் அனைவரும் சாந்தரூபரான ஞானவைரவப் பெருமானின் திருக்கடாட்சம் கிடைக்கப்பெற்று நல்ல வண்ணம் வாழ உள்ளம் கனிந்து எம்பெருமானைப் பிரார்த்திப்போமாகா.

தேர் வடம் பிடிக்க ஊரோடி வாருங்கள்

**ச.தம்பித்துரை J.P - சுதுமலை.**


**தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்...**


**ஸ்ரீகுமரன்**
**Hardware**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


**ஐங்கரன்**
**கூல்பார்**
பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.


**அம்பாள்**
**ஸ்ரோர்ஸ்**
சுதுமலை அம்மன் கோயிலடி,
சுதுமலை.


**P.S.R.Construction and Civil Engineering works**
சுதுமலை.


**விஜிதா**
**ஜுவல்லறி**
K.K.S.வீதி தாவடி
**விநாயகர் கட்டிங் சென்ரர்**
யாழ்ப்பாணம்.


**அபிராமி**
**சவுண்ட்**
இளவாலை


**S.K.M.**
**நகைப்பூங்கா**
K.K.S. வீதி,
சுன்னாகம்.


**விநாயகர்**
**கட்டடப் பொருள் விற்பனை நிலையம்**
தாவடி மானிப்பாய் வீதி,
சுதுமலை சந்தி.


**V.K.K.**
**அரிசி ஆலை**
ஆலடி உடுவில்.

(CS/18289)(10)

**தர்மகர்த்தா சபையினரும், திருவிழா உபயகாரர்களும்.**

ஐயனார்துணை



அனலையம்பதி - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு

## பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திர (ஐயனார்) தேவஸ்தான

# வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா சிறப்பிதழ் - 2018

**கொடியேற்றம்**
18.07.2018
புதன்கிழமை

பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம் விண்ணோர்க்காதியே யோலம் சென்டார்
கையனே யோலம் எங்கள் கடவுளே யோலம் மெய்யர்
மெய்யனே யோலம் தொல்சீர் வீரனே யோலம் மோலம்

**தேர்த்திருவிழா**
26.07.2018
வியாழக்கிழமை

## விழாக்கால நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 17.07.2018 | செவ்வாய் | மாலை பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம் |
| 18.07.2018 | புதன் | முதலாம் திருவிழா பகல் 11.30 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) மாலை யாக பூஜை சுவாமி வலம் வருதல் |
| 19.07.2018 | வியாழன் | 2ஆம் திருவிழா மாலை பூச்சொரியும் உற்சவம் |
| 20.07.2018 | வெள்ளி | 3 ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் மாலை வேத பாராயணத் திருவிழா |
| 21.07.2018 | சனி | 4 ஆம் திருவிழா பகல் விஷேட திரவிய அபிஷேகம், விஷேட திரவிய ஹோமம், பகல் பக்தி முத்தி பவனோற்சவம் |
| 22.07.2018 | ஞாயிறு | 5 ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் மாலை வசந்த உற்சவம், முத்துச் சப்பறம் |
| 23.07.2018 | திங்கள் | 6 ஆம் திருவிழா பகல், இரவு கைலாசவாகனத் திருவிழா |
| 24.07.2018 | செவ்வாய் | 7 ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் மாலை வேட்டைத் திருவிழா |
| 25.07.2018 | புதன் | 8 ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம், மாலை சப்பைரத உற்சவம் (சப்பறத் திருவிழா) |
| 26.07.2018 | வியாழன் | 9 ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா பகல் 10 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா, பச்சை சாத்துதல் மஹா அபிஷேகம், (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை |
| 27.07.2018 | வெள்ளி | 10 ஆம் திருவிழா தீர்த்தத்திருவிழா காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும். மாலை துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்), சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும். |
| 28.07.2018 | சனி | 11 ஆம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம், மாலை திருக்கல்யாண உற்சவம் |
| 29.07.2018 | ஞாயிறு | பகல் பிராயச்சித்த அபிஷேகம், மாலை வைரவர் பொங்கல் |

**11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.**
**நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.**

அனலைதீவு - 05

"அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம்.

---

உ
சிவமயம்



## தெல்லிப்பழை - அளவெட்டி - கணேஸ்வரம்

# குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம்

# விளம்பி வருஷ மஹோற்சவம் - 2018

**விநாயகர் அடியார்களே!**
சகல ஜீவான்மாக்களுக்கும் வேண்டுவதை எல்லாம் ஈந்து வாழ்வாங்கு வாழத் திருவருள் செய்து வீற்றிருக்கும் கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி அருள்மிகு விநாயகப் பெருமானின் மஹோற்சவம் விளம்பி வருஷம் ஆடி மாதம் 02 ஆம் நாள் நாளை (18.07.2018) புதன்கிழமை உத்தர நட்சத்திரமும் ஷஷ்டித்திதியும் கூடிய நன்நாளில் பகல் 11 மணிக்கு துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற இறையருள் பாலித்துள்ளது. எனவே இவ்விழாக்காலங்களில் அடியார்கள் யாவரும் ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகை தந்து எம்பெருமானின் விழாப் பொலிவு கண்டு பேரானந்தப் பெருவாழ்வு பெற்று வாழ்வீர்களாக.

## விழாக்கால நியமனங்கள்

| | |
|---|---|
| ஆடி மாதம் 01 ஆம் நாள் (17.07.2018) | செவ்வாய்க்கிழமை -மாலை 06.00 மணிமுதல் மஹோற்சவ பூர்வாங்கக் கிரியைகள் |
| ஆடி மாதம் 02 ஆம் நாள் (18.07.2018) | புதன்கிழமை கொடியேற்றம் - காலை 09.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை, பகல் 11.00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) |
| ஆடி மாதம் 09 ஆம் நாள் (25.07.2018) | புதன்கிழமை இரவு 07.00 மணிக்கு சப்பற உற்சவம் |
| ஆடி மாதம் 10 ஆம் நாள் (26.07.2018) | வியாழக்கிழமை - தேர்த்திருவிழா - காலை 08.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, பகல் 10 மணிக்கு - இரதாரோகணம் |
| ஆடி மாதம் 11 ஆம் நாள் (27.07.2018) | வெள்ளிக்கிழமை - தீர்த்தோற்சவம். காலை 09.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, பகல் 10.00 மணிக்கு - தீர்த்தவாரிதி மாலை 05.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை திருவூஞ்சல். இரவு 07.00 மணிக்கு கொடியிறக்கம், சண்டேஸ்வரர் உற்சவம் ஆசாரியோற்சவம் |
| ஆடி மாதம் 12 ஆம் நாள் (28.07.2018) | சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம். |
| ஆடி மாதம் 18 ஆம் நாள் (03.08.2018) | வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு வைரவர் பொங்கல். |

உற்சவ காலங்களில் தினமும் மதியம், மகேசுவர பூஜை (அன்னதானம்) நடைபெறும், இரவுத் திருவிழா நிறைவில் அடியவர்களுக்கு இரவு உணவு வழங்கப்படும்.

கணேஸ்வரம், அளவெட்டி.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

விநாயகர் அரும்பணியில்
ஆலய நிர்வாக சபையினர்.

வடமராட்சி கிழக்கில்

## வெளிமாவட்ட மீனவர்கள் மீண்டும் வாடி அமைப்பு

### இனியாவது தடுத்து நிறுத்துமாறு பிரதேச மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடமராட்சி கிழக்கு கடற்கரைப்பிரதேசத்தில் கடல் அட்டை பிடிப்பவர்களைத் தடுக்குமாறு கோரிக்கை விடுத்துவரும் நிலையில், அங்கு அண்மைய நாள்களாக பிறமாவட்ட மீனவர்கள் மீண்டும் சில வாடிகளை அமைக்கின்றனர் என்று உள்ளூர் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.

வடமராட்சி கிழக்கில் பிற மாவட்ட மீனவர்கள் 9 நிறுவனங்களின் ஊடாகக் கடல் அட்டை பிடித்துவருகின்றனர். அரச நிலங்களை பிரதேச செயலாளரின் அனுமதியின்றி ஆக்கிரமித்து வாடி அமைத்துத் தங்கிநின்று தொழில் புரிகின்றனர்.

அந்தத் தொழிலுக்கான சட்ட நடைமுறையை மீறி, உள்ளூர் மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் அவர்கள் தொழில் புரிகின்றனர். அதனால் பிற மாவட்ட மீனவர்களை அந்தப் பகுதியில் இருந்து வெளியேற்றுமாறு உள்ளூர் மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவ்வாறு கோரியும் பிற மாவட்ட மீனவர்கள் தொடர்ந்தும் சட்ட மீறலில் ஈடுபட்டுள்ளனர் என்பதால் உள்ளூர் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனையடுத்து, அங்கு தங்கியிருக்கும் மீனவர்கள் தொடர்பில் இறுக்கமான சட்ட நடைமுறை பேணப்படும் என்று நீரியல் வளத்துறைத் திணைக்களம் சார்பில் உறுதியளிக்கப்பட்டது.

அவ்வாறிருந்தும் அங்கு 3 வாடிகள் அமைக்கப்படுவதாக உள்ளூர் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். கவலையும் தெரிவிக்கின்றனர். "வடமராட்சி கிழக்கில் கடலட்டை தொழில் புரிபவர்களுக்குக் கடந்த வருடம் வழங்கப்பட்ட அனுமதிக்குரியவர்கள் மட்டுமே தொழில் புரிகின்றனர். அண்மைக்காலத்தில் எந்த ஒரு நபருக்குமோ அல்லது நிறுவனத்துக்கோ புதிய அனுமதிகள் வழங்கப்படவில்லை" என்று யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

"இந்தப் பகுதியில் உள்ள அரச நிலத்தில் முன்னர் வாடிகள் அமைக்க முன்னரோ, தற்போது அமைக்கப்படும் வாடிகளுக்கோ எந்த அனுமதியும் பெறப்படவில்லை" என்று மருதங்கேணிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். பிறமாவட்ட மீனவர்கள் அங்கு கடந்த மாதம் அத்துமீறியபோது அவர்களுக்கும் அங்குள்ள மீனவர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து பெரும் போராட்டம் நடத்தப்பட்டு பிரச்சினை தீர்க்கப்படும் என்று திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்த பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (4,105)

## 120 குடும்பங்களுக்கு அரச காணிப் பத்திரம்

### ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அரச காணியில் குடியிருப்போருக்குக் காணிக்குரிய ஆவணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மூன்று பிரதேசங்களில் அரச காணிகளில் பொதுமக்கள் குடியிருக்கின்றனர். காணி இல்லாதவர்களுக்கு 2 தொடக்கம் 4 பரப்பு அரச காணித்துண்டுகள் வழங்கப்பட்டன.

ஜே/38 அனலைதீவு தெற்கு, ஜே/50 புளியங்கூடல், ஜே/54 கரம்பொன் மேற்கு ஆகிய கிராமப் பணியாளர் பிரிவுகளில் 120 குடும்பங்களுக்கு அரச காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு இன்னமும் காணிக்கான ஆவணங்கள் வழங்கப்படவில்லை. அதனால் அரசால் வழங்கப்படும் உதவிகள் கிடைப்பதில்லை. அதனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான ஆவணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணி ஆவணங்களை வழங்குவதற்குக் காணிக் கச்சேரி நடைபெறவுள்ளது. செப்ரெம்பர் மாதமளவில் இதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணிக் கச்சேரிக்கான அனுமதி கிடைத்த பின்னர் பாடசாலை ஒன்றில் காணிக் கச்சேரி நடைபெறும். அதில் காணி உரிமையாளர்களின் பெயர் விவரங்கள் மாகாணக் காணித் திணைக்களத்துக்கு அனுப்பப்படும். அதன் பின்னர் காணிக்கான ஆவணம் மக்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

பல மதங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்

# ஒவ்வொருவருடனும் நாம் ஒன்றித்து வாழவேண்டும்

### மன்னார் ஆயர் இம்மானுவேல் அனைவரிடமும் வலியுறுத்துகிறார்



தலைமன்னார், ஜூலை 17

**நாம் பல மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பல மொழிகளைப் பேசினாலும் நாம் வாழுகின்ற இந்தக் கால கட்டத்திலே, மக்களின் உரிமைகளுக்காக நாம் அனைவரும் ஒருவரை ஒருவர் புரிந்து, ஒற்றுமையாக வாழவேண்டும். ஒருவருக்கு ஒருவர் நன்மை செய்யும்போது நாம் ஒற்றுமையையும் அமைதியையும் காணமுடியும்.**

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவுக்கென புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அந்த அமைப்பின் தலைவர் அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மன்னார் ஆயர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் தேவைகளை உணர்ந்து மக்களுக்குச் சேவை செய்வதற்காக, எல்லோரும் ஒன்றுகூடி சேவை செய்வதற்காக ஒரு பணியகம் தேவை.

திருத்தூதுவர் பவுல் கூறுகின்றார், நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும். மற்றவர்களை மதிக்க வேண்டும். நாம் இந்த உலகில் வாழும்போது ஒருவர் மற்றவரை வாழ்த்தி அவர்களோடு இணைந்து வாழும்போது அங்கு மனிதத்தன்மை இருக்கின்றது. நாம் எமது வாழ்வைப் பார்க்கின்றபோது இப்படியான ஒரு பிரஜைகள் குழு அவசியமாக இருக்கின்றது.

நாம் ஒருவருக்கு ஒருவர் எதிராக இல்லாமல் மற்றவர்களுக்கு இடமளித்துச் செயற்படுவதன் மூலமாக எமது மாவட்டத்தை வளமாக்குவோம்.

மன்னார் மாவட்டம் இன்னும் எவ்வளவோ அபிவிருத்தி பெறவேண்டும். இந்த மாவட்டத்திலே இன்னும் தொழிற்சாலைகள் இருக்க வேண்டும். தொழிலகங்கள் இருக்க வேண்டும். தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டிய நிலையிலேயே இந்த மாவட்டம் காணப்படுகின்றது.

இந்நிலை மாற்றம்பெற நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் - என்றார். (4,60)

# சிவன் - அம்மன் வீதியில் கூடும் இளைஞர்குழு தினமும் வழிப்பறி

### பொலிஸாருக்கு அறிவித்தும் பயனில்லை என்று குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 17

திருநெல்வேலி சிவன் அம்மன் ஆலயச் சூழலில் பகலில் வீதியில் பயணிக்கும் பெண்களிடமும் ஏனையோரிடமும் இளைஞர் குழு ஒன்று வழிப்பறியில் ஈடுபட்டு வருகிறது என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே பொலிஸ் உயரதிகாரிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோருகின்றனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிவன் அம்மன் ஆலயப் பிரதேசத்தின் சிவன் ஆலயத் தெற்கு வீதிப் பகுதியில் பகல்வேளையில் இளைஞர் குழு ஒன்று தினமும் கூடிநிற்கும். அங்குள்ள சனசமூக நிலையைக் கட்டட மறைவில் இருந்து அந்தக் குழு மது, போதைப் பாவனையில் ஈடுபடுகிறது. வீதியால் பயணிக்கும் இளம்பெண்களிடம் வழிப்பறியில் ஈடுபடுகிறது.

கால் நடையாகப் பயணிப்பவர்கள் மட்டுமன்றி ஈருருளி, உந்துருளிகளில் பயணிக்கும் பெண்களையும் வழிமறித்து அச்சுறுத்திப் பணம் கோருகின்றனர். சிலவாரங்களாக இது தொடர்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை பொருள்கள் சந்தைப்படுத்தும் பெண் உத்தியோகத்தர் வீதியால் கால் நடையாகப் பயணித்தபோது அவர் கொண்டுசென்ற பொருள்கள் கொண்ட பையைப் பிடித்து வாறு பணம் வழங்கினால் மட்டுமே விடுவோம் என்று அந்தக் கும்பலைச் சேர்ந்த மூவர் அச்சுறுத்தியுள்ளனர்.

இதேபோன்று கடந்த சனிக்கிழமை ஈருருளியில், பொருள்கள் வாங்கச் சென்ற சிறுவனை மறித்து 100 ரூபா பணத்தைப் பறித்துள்ளனர். நேற்று அதே இடத்தைச் சேர்ந்த அரச ஊழியர் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்றபோது மதுபோதையில் நின்ற அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் வழி மறித்துத் தகாத வார்த்தைகளால் ஏசி அச்சுறுத்தியுள்ளனர். அவர் அங்குள்ள வீடு ஒன்றில் அடைக்கலம் புகுந்து பின்னர் அங்கிருந்து சென்றுள்ளார்.

அங்குள்ள மூடப்பட்ட கட்டடத்தின் முன்பாக கூடும் அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லர். வேறு இடங்களைச் சேர்ந்தவர்களே அந்த இடத்தில் வந்து இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். அந்த இளைஞர்களின் தகாத வார்த்தைப் பிரயோகம், மதுபோதைப் பாவனை காரணமாக அந்தப் பாதையூடாகச் சென்றுவர முடியவில்லை. எனவே பொலிஸ் அதிகாரிகள் இந்த விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அங்குள்ளவர்கள் அவசர கோரிக்கையாக விடுக்கின்றனர். (4105)

## உறுப்பினர்களுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, ஜூலை 17

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு எதிரான வழக்கு அடுத்த வருடம் ஜனவரி 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு வட்டுவாகலில் கடந்த பெப்ரவரியில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட இருவருக்கும் எதிராக முல்லைத்தீவு பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அரச சொத்துக்குச் சேதம் விளைவித்தமை, அரச அதிகாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியமை வீதியை மறித்துக் கொட்டில் போட்டு மக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4,ரி3)

## 150 ஆவது நினைவு தின விழாவும் ஆண்டகையின் சிலை திறப்பும்

கொழும்புத்துறை, ஜூலை 17

யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க பரிபாலகத்தின் முதலாவது அமல மரித்தியாகிகள் சபை ஆயராக விளங்கிய பேரருட்கலாநிதி ஜோன் ஸ்ரிபன் செமிரியா ஆண்டகையின் 150 ஆவது நினைவு விழாவும் சிலை திறப்பும் சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு அநுராதபுரம் புத்தளம் சிலாபம் மாவட்டங்களை உள்ளடக்கியதாக இந்தப் பரிபாலகம் அமைந்துள்ளது.

நிகழ்வு யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி வ.யோ. ஜெபரட்ணம் அடிகள் சிலையை ஆசீர்வதித்து வைக்க, அமல மரித்தியாகிகள் சபையின் கொழும்பு மாகாண முதல்வர் அருட்கலாநிதி ஏர்வின் மொறாயஸ் அடிகள் யாழ்ப்பாண முதல்வர் அருட்கலாநிதி எட்வின் வசந்தராசா அடிகள் ஆகியோர் இணைந்து உருவச்சிலையைத் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து பாதுகாவலன் மண்டபத்தில் இடம்பெற்ற நினைவு நிகழ்வில் அருட்பணி எஸ்.வி.பி. மங்களராஜா அடிகள் நினைவுரை யாற்றினார்.

நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (4,135)

# 150 மில்லியன் ரூபா நிதியில் நெல்லியடியில் கடைத்தொகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 17

நெல்லியடிச் சந்தியை அண்மித்து150மில்லியன் ரூபா செலவில் நவீன கடைத்தொகுதிஅமைக்கப் படவுள்ளது. இதற்கான திட்டமுன்மொழிவுமற்றும் வரைபடம் நகர் அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

40கடைகள்,ஒருமண்டபம் அதில்உள்ளடங்கும்வகையில் அது அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சியில் மக்களின் வாழ்வாதாரத்தில் அதிக மானபங்களிப்பைச்செலுத்தும்விவசாயம், கடலுணவுகளை விற்பனை செய்வதற்கு ஏற்ற கடைத்தொகுதிகள்அமைக்கப்படுவதோடு சந்தைத் தொகுதிகளைச் சீரமைக்க வேண்டிய தேவையும்உள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு நெல்லியடிப் பிரதேசத்தில் நவீன கடைத் தொகுதி, மீன்சந்தைஎன்பனவற்றைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடைத்தொகுதிக்கான வடிவமைப்புதொடர்பில்அடுத்த சபை அமர்வில் அங்கத்தவர்களிடம் சமர்பிக்கப்படவுள்ளது.

இதுதவிர நெல்லியடி மீன் சந்தையும் சீரமைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

சபையின் நிதியில் இருந்து 1.7 மில்லியன் செலவில் சீரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளன. சந்தைகள்மற்றும்கடைத்தொகுதியின் தேவைகள் பற்றிக் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுக்கு அமைவாக இந்தநடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,7)



# வடக்கிலுள்ள பாடசாலை மாணவர் தலைமயிர்வெட்ட, சீவ விதிமுறைகள்

*மாகாணக் கல்வி அமைச்சர் அறிவிப்பு*
*ஆசிரியர்களையும் பின்பற்றக் கோரிக்கை*

**யாழ்ப்பாணம், ஜூலை 17**

**“பாடசாலைகளில் ஒழுங்கு, கட்டுப்பாடுகளை மேற்கொள்வதென்பது மாணவர்கள் அணிகின்ற சீருடைகளின் தன்மை, அவர்களது தலை முடிவெட்டு என்பவற்றிலேயே தங்கியுள்ளன. மாணவர்கள் அநாகரிகமான தோற்றத்தில் பாடசாலைக்குச் சமுகமளிப்பது தடுக்கப்படவேண்டும். அதற்கென மாணவர்கள் எப்படி தலைமுடியை வெட்ட வேண்டும், சீவ வேண்டும் என்று மாகாணக் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.**

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கோரியுள்ளார்.

அண்மையில் வடமாகாண அழகக அலங்கரிப்பாளர்சங்கத்தின்தலைவர் ஆனந்தராசா உதயசங்கர் மற்றும் செயலாளர் கதிரமலை நாகராசா ஆகியோருடனான சந்திப்பு அமைச்சரின் பணியகத்தில் அண்மையில் இடம் பெற்றது. அதில் இவை பற்றிக் கலந்துரையாடிஅவற்றைநடைமுறைப்படுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாகசர்வேஸ்வரன்தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தக்கூடிய தோற்றத்தில் மாணவர்கள் பாடசாலை களுக்கு வருவதில் பெற்றோர்கள் அக்கறை காட்டுவதுடன் அழகக அலங்கரிப் பாளர்களும் கவனம் செலுத்தவேண்டும்.

அந்தவகையில் மாணவர்களின் தலைமுடிகளைச்சீர்செய்யும்பொழுது, பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவதாகவும், இது தொடர்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள தமது சங்கஉறுப்பினர்களுக்குஅறிவித்துச் செயற்படுத்துவதாகவும் சங்கத்தினர் உறுதிஅளித்தனர். சிலபெற்றோர்களே தமது பிள்ளைகளைத் தவறாக வழி நடத்தும் வகையில், இவ்வாறான தலைமுடி வெட்டுக்களை ஊக்குவிக்கின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர். அமைச்சரின் அறிவுறுத்தலின் படி,

- மாணவர்களின் தலைமுடிகட்டையாக வெட்டப்பட்டும் பின்புறம்“ப” வடிவத்தில் முறையாக வெட்டப்பட்டும் இருத்தல் வேண்டும்.
- சேட் கொலரிலிருந்து தலைமயிர் ஒரு அங்குலத்திலும் (2.5cm) கூடிய இடைவெளியில் இருத்தல் வேண்டும்.
- பக்கத் தோற்றம் “ப” வடிவத்தில் சீராக்கப்பட்டு காதுக்குமேல் இருக்கவேண்டும். அதன் கீழ் நீண்டிருக்கக் கூடாது.
- தலைமுடியின் நீளம் அரை அங்குலத்துக்கு மேல் இருக்கக்கூடாது.
- தலையில் வரிகள், வடிவங்கள் ஏற்படுத்துதல் முற்றாகத்தடைசெய்யப்படுகின்றது.
- பூசகர்கள் மற்றும் மத அனுஸ்டானங்களை நடத்துபவர்கள், அவர்களுக்குரிய சம்பிரதாய சிகைஅலங்காரம் மேற்கொள்ளமுடியும்.

என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

அதேவேளை பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் தலைமுடியை இடது பக்கம்உச்சிபிரித்துஒழுங்காகஅழகாக சீவியிருப்பதுடன், எண்ணெய் தவிர்ந்த ஏனைய திரவங்கள் (ஜெல், சாயம்) பூசுவதும், சென்ற் போன்ற செயற்கை வாசனைத் திரவியங்கள் பூசுவதையும் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளைக் கட்டுப்பாடான முறையில் பாடசாலைக்கு அனுப்பி வைக்கவேண்டும். பாடசாலைஆசிரியர்கள், அதிபர்கள்ஆகியோரும்இவற்றைத் தவிர்த்து, முன்மாதிரியாக இருந்து, மாணவர்களின் தலைமுடி வெட்டு மற்றும் சீருடைகளில் கூட்டுப் பொறுப்புடன்கவனம்செலுத்தவேண்டும் என்றும் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன்கேட்டுக்கொண்டுள்ளார் - என்றுள்ளது. (4)

# தமிழருக்கு அரசியல் தீர்வு வழங்கினால் சிங்களவர் ஒதுக்கிவிடுவர் என்றுபயம்!

*கூட்டரசைக் கடுமையாகச் சாடுகிறார்*
*நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்*

மன்னார், ஜூலை17

தமிழ்மக்களுக்குஅரசியல் தீர்வு வழங்கினால், தாம் சிங்கள மக்களிடமிருந்து ஓரங்கட்டப்படுவோம் என்றுதற்போதையகூட்டரசின் இரு முதன்மைக் கட்சிகளும் கருதுகின்றன. அதனால் தமிழருக்கான தீர்வு விடயத்தில் கூட்டரசு அக்கறையற்றிருக்கிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது பணியகத்தில்நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:

இந்தநாட்டில்ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்பட்டபோது இலங்கையில் தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக ஏற்பட்டுள்ள தேசியப் பிரச்சினைக்குஒருஅரசியல்தீர்வு மூலம் தீர்வைக் கொடுப்போம்என்றுஅரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் வழங்கிய வாக்குறுதியுடனேயேகூட்டரசு அமைந்துள்ளது.

இந்தநாட்டில்அரசியல்தீர்வு ஒன்று ஏற்படாமல் இந்த நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையாது, தமிழ் மக்களுக்கு எந்தவித விமோசனமும் கிடைக்காது.

அது தொடர்பான வழிநடத்தல் குழுவினுடைய கூட்டங்கள் பல இடம்பெற்றுள்ளன. முன்னேற்றகரமான சில விடயங்கள் பகிரப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் நாடாளுமன்றில்அங்கம்வகிக்கின்ற அனைத்துக்கட்சிகளையும் உள்ளடக்கி கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

ஆனால்உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குப் பிற்பாடு அரசியல் யாப்புத் தொடர்பான முயற்சி கிடப்பில் போடப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றத்தேர்தலுக்குப் பிற்பாடு இலங்கையை ஆட்சி செய்கின்ற முதன்மையான இரு கட்சிகளும் தேர்தலின்போதுமக்களின் ஆணையைப்பெறவில்லை. மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டது குறிப்பாக சிங்கள மக்களின் ஆதரவைப்பெற்றுக்கொண்டது முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்சவின் கட்சி. மகிந்த ராஜபக்சவின் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கணிசமனான வாக்குகளைப் பெற்றுக்கொண்டது.

அதனால் இந்த இரண்டு கட்சிகளும் அரசியல் தீர்வு விடயத்தில் மென்மேலும் முயற்சி எடுத்தார்களேயானால் தாம் சிங்கள மக்களிடம் இருந்து ஓரங்கட்டி விடுவோம்என்றஉள்நோக்கத்துடனேயே குறித்த இரு கட்சிகளும்குறித்த விடயத்தில் ஆர்வம் காட்டவில்லை.

தற்போது குறித்த இரு தேசியக்கட்சிகளும் 2020 ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடிக்கின்ற, தமது கட்சிகளை வளர்க்கின்ற நோக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனவே தவிர, அவர்கள் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் தமிழர்களுக்கு ஒரு அரசியல் தீர்வு வழங்க வேண்டும்என்று எண்ணவில்லை.

ஐ.நா.வின் பரிந்துரைகளை நிறைவேற்றி இலங்கை ஒரு சுமூகமான நாடாக மாறுவதற்கு இந்த அரசு தற்போதைக்கு நடவடிக்கைகள்எடுக்கவில்லை. தற்போதுள்ள அரசில், அரசியல் தீர்வு மாற்றம் வரும் என்று நான் நம்பவில்லை - என்றார். (4,56,213)



*வடக்கு மாகாண சபையின்*

# உறுப்பினர் லிங்கநாதனுக்கு எதிராக வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

*பிரதேச செயலகப் பணியாளர்கள் நடத்தினர்*

வவுனியா, ஜூலை17

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனுக்கு எதிராக வவுனியாவில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. வவுனியா வடக்குப் பிரதேச செயலக பணியாளர்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேசசெயலகவாயிலில்முற்பகல்9.30 மணிக்குஅவர்கள்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற, வவுனியா வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தி லிருந்து லிங்கநாதன் வெளிநடப்புச் செய்திருந்த நிலையில், அவருக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறுது என்று பணியாளர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

"கடந்தகூட்டத்திலேஎமதுபிரதேசசெயலாளரை வேண்டத்தகாத வார்த்தைகளால் அவமதித்துவிட்டு மாகாணசபை உறுப்பினர் வெளிநடப்புச்செய்துள்ளார்.

முன்னதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையால் காஞ்சூரமோட்டையில் அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. அந்த நிகழ்வில்எமதுபிரதேசசெயலாளர்விருந்தினராகவே கலந்து கொண்டிருந்தார். குறித்த நிகழ்வுக்குத் தன்னை அழைக்கவில்லை என்று பிரதேச செயலாளர் மீது உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார். உண்மையில் அந்த நிகழ்வு தேசிய வீடமைப்பு அதிகாரசபையால்ஒழுங்குபடுத்தப்பட்டது. அவர்கள்தான் அழைப்பை விடுத்திருக்க வேண்டும்.

குறித்த குற்றச்சாட்டை முன்வைத்தே எமது பிரதேச செயலாளரை வேண்டத்தகாத வார்த்தைப் பிரயோகங்களல் பலர் முன்னிலையில் அவமதித்துள்ளார். எனவே இவ்வாறான சம்பவங்கள் இனி மேல் நிகழாதிருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "இது ஒன்றும் உங்கள் மாளிகைஅல்ல, உங்கள் அரசியல் இங்கு வேண்டாம், அரச ஊழியரை அச்சுறுத்தாதே"போன்றவாசகங்கள்எழுதியபதாகைகளைஏந்திக்கோசங்கள்எழுப்பிஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர். (4,110)

# ராணுவத்தைக் கட்டுப்படுத்த விக்கிக்கு அதிகாரம் இல்லை

## அழுத்திக் கூறுகிறார் அமுனுகம

கொழும்பு, ஜூலை 17

**வடக்கில் இராணுவத்தின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த வடக்கு முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அவரது கருத்துக்கள் தேசிய பாதுகாப்பைச் சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளது. விக்னேஸ்வரன் கூறியதற்கமைய நாம் செயல்பட வேண்டும், அல்லது பாதுகாப்புத் தரப்புச் செயல்பட வேண்டும் என்ற தேவை எமக்கு இல்லை. இவ்வாறு அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.**



அண்மைக் காலமாக வடக்கு முதல்வரின் கருத்துக்கள், மற்றும் கூட்டரசு தொடர்பில், கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பில், தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசதலைவருக்கும், நாடாளுமன்றத்துக்குமே அரசமைப்பின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப்படைகளுக்குக்கொடுக்கப்பட்ட கடமைகளை அவர்கள் சரியாகச் செய்கின்றனர். அதில் எவரது தலையீடுகளும் இருக்க முடியாது.

விக்னேஸ்வரன் கூறியதற்காக அவர்கள் தமது கடமையைச் செய்யாதிருப்பார்கள் என நாம் நம்பவில்லை.

அதேபோல்அதிகாரபரவலாக்கல்குறித்துப் பேசும் நிலையில் மாகாண சபைகளுக்கான 13 ஆவது திருத்தம் முழுமையாகச் செயல்படுத்தப்படுவதைத் தவிர ஏனைய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு இதுவாகவே உள்ளது. நாம் மாகாணசபைகளை அதியுச்சஅதிகார சபைகளாகமாற்றியமைக்க இடமளிக்கப் போவதில்லை. அரச தலைவரும் இந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்.

இப்போதுள்ள தேர்தல் முறைமைக்கு அமைய அடுத்து அமைவதும் இணைந்த ஆட்சியே யாகும். இதற்கு முன்னரும்அவ்வாறுஇணைந்தஅரசு தான் அமைந்தது.

மகிந்தராஜபக்சஆட்சியில், ஐக்கியதேசியக் கட்சியின் 18 உறுப்பினர்களை நாம் பெற்றுக்கொண்டோம். அதுவும் இணைந்தஆட்சிதான். ஆனால்பெயர் வெளியில் கூறாது ஒரு ஆட்சியைநாம் முன்னெடுத்தோம். இப்போதும் அவ்வாறே உள்ளது.

கூட்டரசு என்ற பெயரில் அதே ஆட்சியைத்தான் இன்றும் முன்னெடுத்துச் செல்கின்றோம். இந்த அரசமைப்பு இருக்கும் வரையில் அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும்என்றால்தேசியஅரசுஎன்ற கொள்கையில் தான் பயணித்தாக வேண்டும். மாறான தனிக் கட்சியினால் ஒருபோதும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப்பெற்றுக்கொள்ள முடியாது-என்றார். (ரி2.61)

# போதைப்பொருள் கடத்தலுக்கு சட்டம் சீர்குலைந்ததே காரணம்

## கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 17

சட்டத்தைச்சரியானமுறையில் நிலைநாட்டத் தவறியதால்தான் அன்று கொழும்பில் மாத்திரமே காணப்பட்ட போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகள் இன்றுகிராமங்கள்தோறும் வியாபித்து, மாணவர்களையும் உடந்தையாக்கியுள்ளது.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருணாகலை, இப்பாகமுவ பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கேட்போர் கூடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமைஇடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்தெரிவித்ததாவது:

போதைப்பொருள்விநியோகிக்கும் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், இதனைக்கட்டுப்படுத்தமுடியாது.

ஒருசிலபாடசாலைகளிலும் போதைப்பொருள்பாவனை இருக்கின்றது. இன்று போதைப்பொருள் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. 2002 ஆம் ஆண்டு இடம்பெற்றதுபோல் சட்ட, ஒழுங்கை நடைமுறைப்படுத்தியிருந்தால் கிராமங்களுக்குப் போதைப்பாவனைவியாபித்திருக்காது. அன்று போதைப்பொருள் பாவனையை ஒழிக்க வேண்டும் என வெளிப்படையாகக் கூறியவர்கள் பின்வழியால் அதனைத் தடுத்துவந்தனர்.

போதைப்பொருள் வைத்திருந்தஎவரையாவதுகைது செய்தால், அவர்களைவிடுவிக்கக்கோரி உடனே தொலைபேசிஅழைப்புகள் வரும்.

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு நெருக்கமானவர்களே போதைப்பொருள் கடத்தல்மற்றும்விநியோக நடவடிக்கைகளில்ஈடுபட்டு வந்தனர்.

போதைப்பொருளைக் கட்டுப்படுத்துமாறு 2015 இல் இருந்தே நாங்கள் பொலிஸாருக்குத்தெரிவித்துவருகின்றோம்.

போதைப்பொருள் விநியோக நிலையங்களை எவ்வாறு தடுத்து நிறுத்துவதென்றுநாங்கள்தீர்மானம் ஒன்றுக்கு வந்துள்ளோம். ஏனெனில் விநியோகிக்க முடியாமல்போனால், கடத்துவதற்கு எதுவும் இருக்காது.

அதனால் விநியோக இடங்களைக் கட்டுப்படுத்தி வருகின்றோம். இதனால்பகிர்ந்தளிக்கத் தேவையான போதைப்பொருள்குறைவடைந்துள்ளது. போதைப் பொருளின் கட்டணமும் அதிகரித்துள்ளது.

போதைப்பொருள்விநியோகம் தற்போது குறைவடைந்துள்ளதால்அதனைப் பகிர்ந்தளிப்பவர்கள் மத்தியில் போட்டித்தன்மை ஏற்பட்டு, அவர்களுக்குள்அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதன் விளைவே துப்பாக்கிப் பிரயோகங்களாகும். இதனால் அவர்களுக்குள் இருப்பவர்களே சாவடைகின்றனர். சம்பவ இடத்துக்குச் சென்றால், இவர்களைக் கைதுசெய்வதற்கு பொலிஸாருக்கு இன்னும் இலகுவாக இருக்கும்.

போதைப்பொருள்விநியோகம் குறைவடையும்போது இவ்வாறான சம்பவங்கள் இன்னும் அதிகரிக்கும்.

அதன் பின்னர் முற்றாகக் குறைவடையும். அதனால் சாதாரண மக்களுக்குப் பாதிப்புஏற்படாதவகையில் போதைப்பொருள்கடத்தல் நடவடிக்கைகளைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறுபொறுப்பானஅமைச்சருக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் தெரிவித்துள்ளேன்-என்றார். (ரி2.61)

# அமெரிக்காவில் தங்கியிருக்க பசில் ராஜபக்சவுக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 17

அமெரிக்காவில்மூன்றுமாதங்கள்தங்கியிருக்க, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவுக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக அமெரிக்கா செல்ல பசில் ராஜபக்ச அனுமதி கோரியிருந்தார். இதற்கமையநீதிமன்றம்அவருக்கு இந்தஅனுமதியைவழங்கியுள்ளது.

எதிர்வரும்ஒகஸ்ட்10ஆம்திகதி முதல்நவம்பர்மாதம்10ஆம் திகதி வரை அமெரிக்காவில் தங்கியிருந்து சிகிச்சை பெற கொழும்புமேல்நீதிமன்றநீதிபதிஏ.ஏ.ஆர்.ஹெய்யான்துடுவ அனுமதி வழங்கியுள்ளார்.

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான 36 மில்லியன் ரூபாவுக்கும் மேலான பணத்தைத் தவறாகப்பயன்படுத்தியசம்பவம்தொடர்பிலானவழக்கில், கடுவலை நீதவான் நீதிமன்றம், பசில் ராஜபக்சவுக்கு வெளிநாடு செல்லத் தடைவிதித்திருந்தது.

வழக்கு விசாரணைகள் பசில் ராஜபக்ச இன்றி, அவர் சார்பிலான சட்டத்தரணி ஊடாக நடக்குமாயின், பசில் ராஜபக்ச வெளிநாடு செல்வது தொடர்பில் எதிர்ப்பு எதனையும் வெளியிடப் போவதில்லை என சட்டமா அதிபர், கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார். (ரி2)

# 13ஆவது திருத்தத்தின் மூலம் தீர்வு காண்பதே பொருத்தம்

## என்கிறார் கெஹெலிய

கொழும்பு, ஜூலை 17

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாகப் புதிய முறைமைகளுக்குச் செல்வது மேலும் காலத்தை வீணடிக்கும் செயல்பாடாகவே அமையும். எனவேதற்போதுநடைமுறையில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பலப்படுத்தி அதில் உள்ள அதிகாரங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதே சரியாகஅமையும். இவ்வாறு கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் குறித்து விவரிக்கையிலேயே அவர்இதனைத்தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது.

காணி அதிகாரங்களை வழங்க முடியுமா என்பது தொடர்பில் ஆராயலாம். அதேபோன்று பொலிஸ் அதிகாரங்களில் ஒரு சிலவற்றை வழங்க முடியும். செனட் சபையை உருவாக்கி 13 ஆவது திருத்தச் சட்டத்தை வலுப்படுத்துவதே சரியான தீர்வாக அமையும்.

தற்போதைய அரசின் கீழ் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட புதிய அரசமைப்புக் கொண்டுவரப்படும் என்று நம்ப முடியாது. பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தல் முடிவுகளுடன் அரசு இந்த விடயத்தை மறந்துவிட்டதாகவே தெரிகின்றது.

தற்போதைய சூழலில் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. 2020 ஆம் ஆண்டுக்கு இடையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு வருமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

எப்படியிருப்பினும் தற்போது அரசமைப்பில்உள்ளடக்கப்பட்டிருக்கும் 13ஆவதுதிருத்தச்சட்டத்தைப்பலப்படுத்திஅதன்மூலம்தீர்வைக்காண வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக உள்ளது. மாகாண சபை முறைமையில் உள்ள பொலிஸ் மற்றும்காணிஅதிகாரங்கள்வழங்கப்படாமல் உள்ளன.

அவற்றை வழங்குவது குறித்து ஆராயவேண்டும். சிறப்பாகக் காணி அதிகாரங்களை வழங்குவது தொடர்பில்மிகப்பெரியசிக்கல்கள் இல்லை என்றே தெரிகின்றது. எனவே அது குறித்துப்பேச்சுநடத்தி முடிவுக்கு வரலாம்.

அதேபோன்று பொலிஸ் அதிகாரங்கள் விடயத்திலும் பேச்சு நடத்தலாம். அதாவதுபொலிஸ்அதிகாரங்களை முழுமையாக வழ்ங்க முடியாது. ஆனால் குறைந்தளவிலான பொலிஸ்அதிகாரங்களை வழங்குவது குறித்தும் ஆராயலாம்.

நாடாளுமன்றத்துக்குமேலதிகமாக செனட் சபை ஒன்றை அமைப்பது குறித்து ஆராயவேண்டும். இவ்வாறான செனட்சபைஒன்றைஅமைப்பது சிறுபான்மையினருக்கான களமாக அமையும். இந்த வகையில் நோக்கும்போது, தற்போது அரசமைப்பில் காணப்படும் 13 ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி அதன் ஊடாகத்தீர்வைப்பெறுவதே சரியாக அமையும். மாறாகப் புதிய தீர்வு முறை குறித்து ஆராய்ந்து கொண்டிருந்தால் மேலும் காலம் தாமதமாகும் நிலையே ஏற்படும்-என்றார். (ரி2.61)

### ஆதரவு வழங்கக் கூட்டமைப்புக்கு நிபந்தனை விதிக்கிறது 'குறூப்16'

கொழும்பு, ஜூலை 17

அதிகாரப் பகிர்வுத் திட்டத்தையும், தேர்தல் முறைமாற்றத்தையும்ஒன்றிணைந்தயோசனையாகக் கொண்டுவருமாறு எதிர்க்கட்சித் தலைவர்தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவிடம் கோர வேண்டும். அவ்வாறு தலைமை அமைச்சர் அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்தால் மூன்றில்இரண்டுபெரும்பான்மைப்பலத்தைப் பெறுவதற்காக சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்டஅணிஆதரவுவழங்கும். இவ்வாறு அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமும் புதிய அரசமைப்பும் சாத்தியமானதா என்று விபரிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் அமைந்தஅதிகாரப்பகிர்வுத்தீர்வுத்திட்டத்தைக் கொண்டுவந்திருந்தால்அதனைநிறைவேற்றியிருக்கலாம். தமிழ்க்கூட்டமைப்பு அரசதலைவர் முறைமையை மாற்றுவதில் உறுதியாக இருப்பதால் தான் தீர்வுத் திட்டத்தைப் பெறமுடியாதுள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்பதாக புதிய அரசமைப்பைக் கொண்டுவர வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில்நாடாளுமன்றில்தெரிவித்திருந்தார்.


தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனமைக்கு யார் காரணம் என்பதைக் கூட்டமைப்புச்சிந்திக்கவேண்டும். நிறைவேற்று அதிகார அரசதலைவர்முறைமைமாற்றத்தையும் அதிகாரப் பகிர்வு முறைமையும் ஒன்றாகக் கொண்டுவந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டியிருக்கும். முதலில் அதிகாரப்பகிர்வுமுறைமையையும்தேர்தல் திருத்தத்தையும் கொண்டு வந்திருக்கலாம். இரண்டையும்கொண்டுவந்திருந்தால்மூன்றில்இரண்டுபெரும்பான்மையுடன்அதனை நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் கூட்டமைப்பினர் அதற்கு மாறாக நிறைவேற்று அதிகார முறைமை மாற்றமும் அவசியம் என்று அடம்பிடித்ததால் இன்று அனைத்தும் கேள்விக்குறியாகிவிட்டனஎன்றார். (ரி2.31)

# நவாஸ் செரீப் விரைவில் மேன்முறையீடு

இஸ்லாமபாத், ஜூலை 17
ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் பாகிஸ்தானில் உள்ள லாகூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நவாஸ் செரீப், விரைவில் மேன்முறையீடு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பனாமா வழக்கில் சிக்கி 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுள்ளார் நவாஸ் செரீப். அவர் லாகூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் அவர் மேன்முறையீடு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

“பாகிஸ்தானில் எதிர்வரும் 25ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காகவே செரீப் சிறைக்குச் சென்றுள்ளார்" என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## உலகின் மிகப்பெரிய குடும்பம்

உலகிலேயே மிகப்பெரிய குடும்பம் உக்ரைன் நாட்டில் இருக்கிறது. டோப்ரஸ்லாவ் கிராமத்தில் வசிக்கும் 87 வயது பாவெல் செமன்யுக் குடும்பம்தான் இந்தப் பெருமைக்குரியது. இவருக்கு 13 குழந்தைகள். 127 பேரன், பேத்திகள். 203 கொள்ளுப் பேரன், பேத்திகள். 3 எள்ளுப் பேரன், பேத்திகள் என மொத்தம் 346 பேர் இந்தக் குடும்பத்தில் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

“எங்கள் குழந்தைகள், பேரன், பேத்திகள் வரை பெயர்களை நினைவில் வைத்திருக்கிறேன். மற்றவர்களின் பெயர்கள் நினைவில் இருப்பதில்லை. நாங்கள் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறோம். எங்கள் குடும்பம் பெருகப் பெருக, இந்தக் கிராமத்திலேயே வீடுகளைக் கட்டி விடுவோம். பிறந்தநாள், திருமண நாள் போன்ற நிகழ்ச்சிகளில் குடும்பத்தினர் ஒன்று கூடிவிடுவோம். பெரிய பெரிய பாத்திரங்களில் உணவுகள் செய்ய வேண்டியிருக்கும். கிட்டத்தட்ட ஆண்டு முழுவதுமே கொண்டாட்டமாகத்தான் இருக்கும்! எங்கள் குடும்பத்திலிருந்து மட்டும் 30 குழந்தைகள் பள்ளிக்குச் செல்கிறார்கள். இவர்களுக்கே ஒரு பேருந்து தேவைப்படுகிறது. சமீபத்தில் தான் உக்ரைன் நாட்டின் மிகப்பெரிய குடும்பமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம். இப்போது கின்னஸுக்கும் விண்ணப்பித்திருக்கிறோம்" என்கிறார் பாவெல் செமன்யுக். தற்போது 192 பேர் அடங்கிய மிகப் பெரிய இந்தியக் குடும்பம், உலகின் மிகப் பெரிய குடும்பம் என்ற கின்னஸ் சாதனையை வைத்திருக்கிறது. நிச்சயம் பாவெல் இதை முறியடித்துவிடுவார். (ம)





## ஹமாஸ் இஸ்ரேல் இடையே

# போர் நிறுத்தம்

டெல்அவிவ், ஜூலை 17
இஸ்ரேல்-ஹமாஸ் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பலஸ்தீனத்தின் பல பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனது பிடியில் வைத்துள்ளது இஸ்ரேல். இஸ்ரேலின் பிடிக்குள் உள்ள பலஸ்தீனப் பகுதிகளை மீட்ப தற்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அமைப்புத்தான் ஹமாஸ். காசா எல்லையில் முகாமிட்டுள்ள ஹமாஸ் அமைப்பு அவ்வப்போது இஸ்ரேலுக்கு எதிராக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துவதும் பின்னர் இஸ்ரேல் அதற்குப் பதிலடி கொடுப்பதும் காலாகாலமாக நடைபெற்று வருவதுதான். இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் அறிவிக்கப்பட்ட பின்னர் காசா எல்லையில் ஹமாஸ் இஸ்ரேல் இடையிலான மோதல் உச்சம் தொட்டிருந்தது. இரு தரப்புக்களும் நேரடித் தாக்குதல்களிலும் ஈடுபட்டு வந்தன. ஹமாஸுக்கு எதிராக இராணுவு நடவடிக்கைகள் மேலும் இறுக்கப்படும் என்று இஸ்ரேலின் அதிபர் நெத்தன்யாகு எச்சரித்திருந்தார்.

இவ்வாறிருக்க எவரும் எதிர்பாரா வண்ணம் இந்த இரண்டு தரப்புக்களும் தமக்கிடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. ஹமாஸின் செய்தித் தொடர்பாளர் பவ்சி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (ம)



சிரியாவைச் சேர்ந்த மையா மெய்ரி என்ற 8 வயதான இந்தச் சிறுமி உள்நாட்டுப் போரால் தனது கால்களை இழந்தவர். இவருக்கு துருக்கியில் உள்ள நிறுவனமொன்றில் வைத்து மாற்றுக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளன. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்த ஒளிப்படத்தை வெளியிட்டுள்ளது. (ம)

# ஆப்கானில் தாக்குதல் 11 சிப்பாய்கள் சாவு

காபூல், ஜூலை 17
ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 11 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இதுகுறித்து அரச தரப்பில், “ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் உள்ள சோதனைச்சாவடியில் ஆப்கன் அரசுக்கு எதிரான



கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 11 சிப்பாய்கள் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர். சிப்பாய்கள் நடத்திய பதில் தாக்குதலில் கிளர்ச்சி யாளர்கள் 13 பேர் உயிரிழந்தனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாகிஸ்தானில் விபத்து 18 பேர் பரிதாபச் சாவு

இஸ்லாமபாத், ஜூலை 17
பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் ஏற்பட்ட பஸ் விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர். திருமண நிகழ்வொன்றுக்காக சுமார் 50 பேர் பயணித்த பேருந்தே அவ்வாறு விபத்துக்குள்ளானது.

சிந்து மாகாணம் ஹைதராபாத் நகரில் இந்த பேருந்து விபத்து இடம்பெற்றுள்ளது. லொறியும் பேருந்தும் அவ்வாறு விபத்துக்குள்ளாகின என்று அறியவருகிறது. உயிரிழந்தவர்களைத் தவிர படுகாயமடைந்த சிலரின் நிலைமையும் கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# நேபாளத்தில் நிலச்சரிவு எண்மர் பரிதாபச் சாவு

காத்மண்டு, ஜூலை 17
நேபாளத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த 2 வாரங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள பெரும்பாலான மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. ஆங்காங்கே நிலச் சரிவுகளும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு ஏற்பட்ட நிலச் சரிவில் சிக்கி எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

காத்மாண்டு பள்ளத்தாக்கில் உள்ள பக்தாபூர் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவே எட்டுப்பேரின் உயிர்களைக் காவு வாங்கியுள்ளது.

இதையடுத்து குறித்த பகுதியில் உள்ள சுமார் 3 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ம)



அருளானந்தன்

# அருள் நிறைந்த அற்புதமான ஆடி மாதம்

தக்ஷிணாயன காலத்தின் தொடக்கமே ஆடிப்பிறப்பு எனும்திருநாளாகதனித்துவம்பெறுகிறது. உத்தராயண புண்ணிய காலம் நீங்கப் பெற்று தக்ஷிணாயன புண்ணியகாலம் ஆரம்பம் கொள்கிறது.

**கால மாற்றம்**

தேவர்களைப் பொறுத்தவரையிலே நாம் கடந்து செல்கின்ற ஒருவருட காலம் (365 நாள்கள்) என்பது ஒரு நாளாகவே கணிக்கப்படுகின்றது. அந்தவகையிலே உத்தராயண காலமான தை முதல் ஆனி வரையான காலம்பகல்காலமாகவும், தக்ஷிணாயனகாலமானஆடி முதல் மார்கழி வரையான காலம் இராக் காலமாகும் அமையும்.

இதன்படியே இந்துக்களாகிய நாம் உத்தராயண கால ஆரம்பத்தைதைத்திருநாளாகவும், தக்ஷிணாயனகால ஆரம்பத்தை ஆடிப்பிறப்பாகவும் கடைப்பிடித்து வருகிறோம். குறிப்பாக, பகலில் ஒளி பெருகி இருள் குறையவும், இரவில்ஒளிகுன்றி இருள்பெருகவும்அமைகின்ற கால நகர்வையே இரு வெளிப்பாடுகளாக்கி உத்தராயணம் பகல் என்றும், தக்ஷிணாயனம் இரவென்றும் குறிப்பிடுகிறோம்.

> “ உத்தராயண காலத்தில் சூரியனில் இருந்து வெளிப்படும் கதிர்களை விடவும், தஷ்ணாயண காலத்தில் சூரியனின் ஒளிக் கதிர்கள் விவசாயத்துக்கு உகந்ததாக இருக்கும். ஆகவே, ஆடி மாதத்தை சக்தி மாதம் என்றும் பண்டைய ஜோதிட நூல்கள் குறிப்பிட்டுள்ள கருத்தை ஏற்றிருப்போம். அருள் சிறப்புடைய ஆடி மாதத்திலே இறைவனை அன்பால் நினைந்து வழிபாடு இயற்றி வாழ்வில் சகல நலன்களையும் பெற்று இன்பமாக வாழ்வோம்.

**சிறப்பு**

இதன் காரணம் கொண்டே உத்தராயண காலத்தில் இடம்பெறுகின்ற உற்சவங்கள் மற்றும் மங்கள காரியங்கள் உத்தமமான பலனையும், தக்ஷிணாயன காலத்தில் இடம்பெறுகின்ற காரியங்கள் மத்திமமான பலாபலனையும் தருவதாக ஆன்றோர் குறித்துரைக்கின்றனர்.

ஆடிப்பிறப்பு தினத்தின் பின்பாக சூரியன் வடக்குத் திசையில் இருந்து தெற்குத் திசை நோக்கிச் சஞ்சரிக்க ஆரம்பிப்பான். இக்காலப்பகுதியில்தேவர்கள்கூட்டாக உறக்கம் கொள்வர்.

மத்திமமான பலன் தரும் காலமாகவே இதனைக் கருத வேண்டும்.

இராக்காலமாக விளங்கும் ஆடிப்பிறப்பு தினத்தில் 'கஞ்சி, கூழ், கொழுக்கட்டை' போன்ற உணவுவகைகளைத்தயாரித்துதேவர்களுக்குஅவற்றைநைவேத்தியம் செய்கின்ற வழமை தோன்றியது. இதன் தொடர் நிலைகளையே ஆடிப் பிறப்பு தினத்தில் இந்துக்கள் உண்டுகளித்து கொண்டாடிவருகின்றனர் எனலாம்.

**நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆடிப் பிறப்பின் மகத்துவம் தனை பாக்களில் மொழிகின்ற அற்புதம் தனிச்சிறப்பானது.

*ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்த மானந்தம் தோழர்களே!*
*கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே..!*

*பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்*
*பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,*
*வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல*
*மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,*

*வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே*
*வேல்லூரில் சக்கரையுங்கலந்து,*
*தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி*
*சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.*


*வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி*
*வெல்லக் கலவையை உள்ளே இட்டு*
*பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே*
*பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே*

*பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி*
*போட்டு மாவுண்டை பயறுமிட்டு*
*மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்*
*மணக்க மணக்க வாயூறிடுமே*

*குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே*
*குத்து விளக்குக் கொளுத்தி வைத்து*
*அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை*
*ஆடிப் படைப்பும் படைப்போமே*


*வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே*
*வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு*
*அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க*
*ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே*


*வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல*
*மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்*
*கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்*
*கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே*



**ஆடி அமாவாசை**

இத்தகுசிறப்புகளைஉடைய ஆடிமாதத்தில் ஆடிஅமாவாசை திருநாளும் தனித்துவமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தட்சணாயனத்தொடக்கமாதமாகஆடிமாதம்விளங்குவதால் பிதிர்க் காரியங்களுக்கு ஆடிமாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படுகின்றது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத்திதி பிதிர் வழிபாட்டுக்குப் புண்ணியமான தினம் எனச் சாஸ்திர நூல்கள் குறித்துரைக்கின்றன.





சிரார்த்தம்முதலானவற்றை செய்ய வேண்டிய கால நேரத்தில் மேற்கொள்ளத் தவறியவர்கள் ஆடி அமாவாசை தினத்தன்று அவற்றைச் செய்வதன் ஊடே பிதுர் திருப்தி ஏற்படும். சந்தான விருத்தி கிடைக்கும்.

அந்தவகையிலேஎதிர்வரும்ஓகஸ்ட்மாதம்11ஆம்திகதிசனிக்கிழமை ஆடிஅமாவாசைவிரதம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் வரலாற்று பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில்எழுந்தருளி அருள்பாலிக்கும் மாவைக் கந்தன்கீரிமலைக்குபயணம்மேற்கொண்டுதீர்த்தமாடுகின்ற திருக்காட்சி அற்புதங்கள் பல புரியும்.

**ஆடிப்பூரம்**

அதேபோன்று ஆடி அமாவாசைத் திருநர்ளைத் தொடர்ந்து ஆடி மாதத்தில் அம்பாள் ருதுவான திருநாள் 'ஆடிப்பூரமாக' கடைப்பிடிக்கப்படுகிறது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி திங்கள்கிழமை ஆடிப்பூர நன்னாள் அம்பாள் ஆலயங்களில்சிறப்புற இடம்பெறவுள்ளது. அன்றைய தினமேதெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவோடு ஆரம்பமாகிறது.

இதனிடையேஎதிர்வரும்21ஆம்திகதியன்று ஆடிச்சுவாதியில் நாயன்மார்களுள்ஏழாம்திருமுறையை அருளிச்செய்தசுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசைத் தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. தொடர்ந்து ஆடிமாதத்தின் நிறைவுநாளான்று நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் ஆரம்பமாகிறது.

**இன்பமாக வாழ்வோம்**

ஆம், ஆடி மாதத்தில் விதை விதைப்பதை எம் முன்னோர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்ற பழமொழி உருவாகியமைக்கும் இதுவே காரணம். உத்தராயண காலத்தில்சூரியனில் இருந்துவெளிப்படும்கதிர்களை விடவும், தஷ்ணாயண காலத்தில் சூரியனின் ஒளிக் கதிர்கள்விவசாயத்துக்கு உகந்ததாக இருக்கும். ஆகவே, ஆடி மாதத்தை சக்தி மாதம் என்றும் பண்டைய ஜோதிட நூல்கள் குறிப்பிட்டுள்ள கருத்தை ஏற்றிருப்போம். அருள் சிறப்புடைய ஆடி மாதத்திலே இறைவனை அன்பால் நினைந்து வழிபாடு இயற்றி வாழ்வில் சகல நலன்களையும் பெற்று இன்பமாக வாழ்வோம்.

**நாளை**

**18.07.2018**

புதன்கிழமை

**ஆடி 02**

திதி: ஷஷ்டி மு.இ 08.45 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப. 02.32 வரை
சுபநேரம்: 04.30 – 06.00 வரை
ராகுகாலம்: 12.00 – 01.30 வரை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## யாராவது ஒரு தரப்பினர் விட்டுக்கொடுங்களேன்!

அமைச்சர்ஒருவரைப் பதவி நீக்கிய விவகாரத்தால் வடக்கு மாகாணசபை எதிர்கொண்டுள்ள பிரச்சினை தொடர்பாக சபையின் தனி அமர்வு நேற்று நடந்தது. முதலமைச்சர் மற்றும் நான்கு அமைச்சர்கள் என மொத்த அமைச்சரவையும் இல்லாமல் இந்த அமர்வு நடந்து முடிந்துள்ளது. இந்த விவகாரம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் அது பற்றி விவாதிப்பது எவ்வளவு தூரம் சரியானது என்கிற தார்மீகக் கேள்வி காரணமாகத் தாம் இந்த விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை என்று மூன்று அமைச்சர்கள் காரணம் கூறியிருந்தார்கள். மற்றொருவர் அமர்வுக்கு வந்தபோதும் தனது கட்சியான ரெலோவின் நிலைப்பாட்டை அனுசரித்து விவாதத்தில் கலந்து கொள்ளாமல் வெளியேறினார். இவர்கள் இன்றியே நடந்த விவாதம் இந்தப் பிரச்சினை எவ்வளவு தூரம் பூதாகாரமாக வளர்ந்து செல்லக்கூடும் என்கிற எச்சரிக்கை மணியை அடித்துள்ளது.

ஏற்கனவே இந்த மாகாண சபை ஒரு நொண்டிக் குதிரை, இப்போது இந்தப் பிரச்சினையால் அது முடமான குதிரையாகிக் கொண்டிருக்கிறது என்று எச்சரித்திருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் தவராசா. பிரச்சினை இப்படியே நீடித்தால், வடக்கு மாகாணசபையின் அமைச்சரவை தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டால் ஆளுநர் தலையிட்டு சபையைக் கலைத்துவிடும் அபாயம் இருப்பதும் நேற்றைய அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் மூன்று மாதங்கள் மட்டுமே இருக்கின்றது. ஒக்ரோபர் மாதத்துடன் தற்போது பதவியில் இருக்கும் ஆட்சியின் ஆயுட்காலம் நிறைவடைந்துவிடும். அத்தகையதொரு நிலையில் இப்படியொரு பிரச்சினைக்குள் சபையைச் சிக்க வைத்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது ஏற்புடையதல்ல.

தன்னைப் பதவி நீக்கம் செய்ததை எதிர்த்து வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவு வந்து 17 நாள்கள் கடந்தபோதும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமலேயே தொடர்வதே எல்லோருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. நீதிமன்ற நடவடிக்கையைக் காட்டித் தொடர்ந்தும் இந்தப் பிரச்சினையை இழுபட விடுவதும் புத்திசாலித்தனமானதல்ல.

ஏதோ ஒரு வழியில் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். தமிழ் மக்கள் ஏகோபித்த முறையில் வாக்களித்து மாகாணசபைக்காக இவர்கள் அனைவரையும் தெரிவுசெய்துவிட்டமை இதுபோன்று ஆளும் கட்சியினரே தமக்கிடையில் பிளவு பட்டுக் கொண்டு சபையை முடக்கி வைத்திருப்பதற்காக அல்ல.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்ததும் கூட்டமைப்பின் தலைவர்கள் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், இந்த வெற்றி 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வெற்றியிலும் பார்க்க பெரிது, மிகச் சிறப்பானது என்று தெரிவித்தார் இரா.சம்பந்தன். தொகுதிவாரித் தேர்தல் முறையில் கிட்டிய அந்த வெற்றியிலும் பார்க்க விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் 85 விழுக்காட்டு மக்களின் ஆதரவுடன் வெற்றிபெறுவது என்பது சாதாரண விடயமல்ல என்பதைத்தான் அவர் அப்படிக் குறிப்பிட்டார். அத்தகைய வெற்றியை மக்கள் வழங்கியது சபையை முடக்கி வைத்து செயலிழக்கச் செய்வதற்கல்ல.

எஞ்சியிருக்கும் மூன்று மாத காலத்தில் பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியாது என்றாலும் மோசமான உதாரணங்களை ஏற்படுத்தாமலாவது ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து கூட்டமைப்பின் மாகாணசபையினர் சிந்திக்க வேண்டும். அதற்கு இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் சம்பந்தப்பட்ட இருதரப்புகளில் ஏதாவது ஒரு தரப்பு விட்டுக்கொடுத்தாக வேண்டும்.

முதலமைச்சர் தனது தவறை ஏற்றுக்கொண்டால் பதவியைப் பொறுப்பேற்காமல் விடுவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடுவதற்குத் தான் தயாராக இருக்கிறார் என்று மாகாண சபை உறுப்பினர் டெனீஸ்வரன் நேற்றைய அமர்வில் தெரிவித்திருக்கிறார். அப்படியில்லாமல் முதலமைச்சர் தான் செய்தது சரி என்று சவால்விட்டால் தானும் பதிலுக்குப் பதில் சட்ட நடவடிக்கைக்குத் தயங்கப்போவதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

டெனீஸ்வரனைத் தெரிவு செய்தவர்கள் மக்கள். முதலமைச்சர் அல்லர். டெனீஸ்வரன் பொறுப்புச் சொல்ல வேண்டியதும் மக்களுக்குத்தான். எனவே மக்களின் நன்மை குறித்துத்தான் அவர் சிந்திக்க வேண்டுமே தவிர முதலமைச்சர் குறித்தல்ல. முதலமைச்சர் தனது தவறை ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு டெனீஸ்வரனால் முடியுமாக இருந்தால் அதைச்செய்வதுதான் அவர்மீதான மதிப்பை மக்கள் மத்தியில் அதிகரிக்கும். பெரியவர்கள் பெரியமனதோடு நடந்துகொள்ளவில்லை என்றாலும் சிறியவர்கள் பெரியமனதோடு நடந்துகொள்ளக்கூடாது என்று சட்டம் ஏதுமில்லை. விட்டுக்கொடுப்பது வீழ்ச்சியாகிவிடாது.



# சமநீதி கிடைக்கும் வரையில் நாட்டுக்கு விமோசனம் கிடையாது

இந்துமதி



இலங்கையில் உயர் நிலையில் உள்ள அரசியல்வாதிகள், ஒரு பிரிவு மதகுருமார்கள், உயர் பதவி வகிக்கும் அரச அதிகாரிகள் எனச் சில பிரிவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் அரசு உள்ளதைக் காணமுடிகின்றது. நாட்டின் அரச தலைவரே இதைப் பகிரங்கமாகக் கூறிவிட்டார்.
ஊழல் மற்றும் மோசடியாளர்கள் தாம் புரிந்த குற்றச்செயல்களிலிருந்து தப்பித்துக்கொள்ள இதுவே வழிவகுத்து விடுகின்றது.

**ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொடவின் மனைவிக்கு அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் ஞானசாரதேரர் தண்டிப்பு**

கடத்தப்பட்டு காணாமல் போன ஊடகவியலாளர் ஒருவரின் மனைவியை நீதிமன்ற வளாகத்தில் வைத்தே அச்சுறுத்தியும், அவமானம் புரிந்தும் அட்டகாசம் செய்த பௌத்த தேரரான ஞானசார தேரருக்கு சிறைத் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இலங்கையின் நீதிமன்றமொன்று வழங்கிய துணிவான தீர்ப்பை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆனால் தெற்கில் உள்ள இனவாதிகள் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக குரல் கொடுக்க ஆரம்பித்தனர். தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிட்டதன் மூலம் ஞானசாரதேரர் பிணையில் வெளிவந்துள்ளார்.
இதேவேளை ஞானசார தேரரை சிறையிலிருந்து வெளியே கொண்டு வருவோமென அவர் சார்ந்த பொதுபலசேனாவினர் சூளுரைத்தனர். இதற்கான நடவடிக்கைகளில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டதையும் காண முடிந்தது.

ஞானசார தேரர் பௌத்த தருமத்தைப் போதிப்பதிலும், அகிம்சைத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பதிலும் ஈடுபட்டவர் அல்ல. அவர் எப்போதுமே பௌத்த கோட்பாடுகளுக்கு மாறாகவே செயற்பட்டுள்ளார். இனவாதமே அவரது பிரதான கொள்கையாகக் காணப்பட்டது. இத்தகைய ஒருவருக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்றவர்களும் நாட்டில் இருப்பதை எண்ணும்போது கவலைதான் மேலிடுகின்றது.

**ஊழல் மோசடிகளில் உலக சாதனை படைத்துவரும் இலங்கை**

ஊழல், மோசடிகளில் இலங்கை உலக சாதனை படைத்து வருகின்றது. எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்பது இந்த நாட்டின் தலைவிதியாகவே மாறிவிட்டது. இத்தகையவர்களைத் தண்டிக்க முடியாத நிலையில் உள்ளதாக அரசதலைவரே ஒப்புக்கொண்டமை கவலைக்குரியது. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாத அரசு ஆட்சி புரிவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.





கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகளும், குற்றச்செயல்களும் இதுவரையில் சரியாக விசாரிக்கப்படாத நிலையிலேயே உள்ளன. மகிந்த குடும்பத்தவர்கள் புரிந்த ஊழல் மற்றும் மோசடிகளால் நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டபோதிலும், அவை தொடர்பாக இந்த அரசு கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. இதற்கு மாறாக மோசடிபுரிந்தவர்களாக கூறப்படுபவர்களை சமரசம் செய்கின்ற முயற்சிகளே இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் நாடு எவ்வாறு அபிவிருத்தியைக் காணமுடியும்?

நாட்டின் அரச நிறுவனங்களில் பலதும் நட்டத்தில் இயங்குவதாகவே தெரிவிக்கப்படுகின்றது. இவற்றைச் சமாளிப்பதற்கு அரசு ஆண்டுதோறும் பெருமளவு நிதியைச் செலவிட்டு வருகின்றது. தனியார் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் இலாபமீட்டி வரும் நிலையில், அரச நிறுவனங்களுக்கு ஏனிந்தக் கதி என்பது புரியவில்லை. அரச நிறுவனங்களில் பணி புரிகின்ற பணியாளர்களின் தவறுகளே இதற்கான காரணமாகும். ஆட்சியில் இருப்பவர்கள் தமது உறவினர்களையும், தெரிந்தவர்களையும் உயர் பதவிகளில் அமர்த்திவிடுவதால் அவர்கள் எவருக்கும் அஞ்சாமல் ஊழல்களைப் புரிகின்றனர். இவர்களது மோசடிகள் காரணமாகவே அவர்கள் சார்ந்த நிறுவனங்கள் நட்டத்தை எதிர்கொள்கின்றன. இதனால் நாடு பெரும் பொருளாதார இழப்பை எதிர்கொண்டு வருகின்றது. சகலத்துக்கும் மானியம் வழங்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

சகலருக்கும் சமநீதி என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படுமானால், நாட்டில் எவ்விதக் குழப்பங்களுக்கும் இடமிருக்காது. நீதித்துறையில் சிலர் செல்வாக்குக் காட்ட முயல்வதையும் அனுமதிக்கக்கூடாது. பணபலம், அரசியல் செல்வாக்கு ஆகியவை அரச நிர்வாகத்தில் செல்வாக்குச் செலுத்துவதை அறவே ஒழிக்க வேண்டும்.

**அரச தலைவரும் தலைமை அமைச்சரும் இணைந்து செயற்பட்டாலே நாடு விமோசனம் அடையும்**

அரசதலைவரும், தலைமை அமைச்சரும் பிணக்கு எதுவுமின்றி இணக்கப்பாட்டுடன் செயற்பட்டால் மாத்திரமே, நாடு விமோசனத்தைப் பெற முடியும். கட்சி ரீதியாகவும், கொள்கை அடிப்படையிலும் அவர்கள் பிரிந்து செயற்பட்டால் நாட்டின் தலைவிதி மோசமானதாகவே மாறிவிடும்.

தலைமை அமைச்சரைப் பதவி நீக்கம் செய்துவிட்டு அந்தப் பதவியில் தாம் அமர்வதற்கு முன்னாள் அரசதலைவர் துடியாய்த் துடிப்பது தெளிவாகத் தெரிகின்றது. அவரும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஒருவர்தான். ஆனால் அரசதலைவர் அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குவதால், மகிந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

வெறுமனே நல்லாட்சி அரசு என்று கூறிக்கொள்வதில் பயனொன்றும் இல்லை. இதைச் செயலில் காட்டும்போதுதான் நாடு உருப்படுமென்பதை ஆட்சியாளர்கள் இப்போதாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அனைவருக்கும் சமநீதி வழங்கப்படும்போதுதான் நாட்டில் அபிவிருத்தியும், அமைதியும் ஏற்படும்.

சேரலாதன்



# உலகத் தமிழர்கள் ஒன்றுபடும்போதுதான் இலங்கையில் நீதி கிடைக்கும்

தமிழர்கள் தாம் தொடர்ந்தும் அடிமைகளாகத்தான் வாழ வேண்டுமா? என்பது தொடர்பாகச் சிந்திக்க வேண்டிய தருணத்தில் உள்ளனர். இலங்கை ஒரு ஜனநாயக நாடு எனக் கூறப்பட்டாலும், இங்கு வாழ்கின்ற தமிழர்கள் ஜனநாயகத்தின் பலன்களை அறியாதவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கின்ற இந்த இழிநிலைக்கு இனியாவது முடிவு கட்டப்பட்டாக வேண்டும்.

அந்நியரின் வருகைக்கு முன்னர் தமக்கென தனியான சுதந்திர அரசுகளைக் கொண்டிருந்த தமிழர்கள், அதன் பின்னர் அவற்றை இழந்து விட்டனர். தமது வசதிக்காக நாடு முழுவதையும் ஒரே குடையின் கீழ்க் கொண்டு வந்த அந்நியர்களுக்கு தாம் திரும்பிச் செல்லும்போது அவற்றை மீளவும் உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்வதற்கு மனம் வரவில்லை. அதன் பலாபலன்களைத்தான் தமிழர்கள் இன்று அனுபவிக்கின்றனர்.

**உலகம் முழுவதிலும் 11 கோடிப் பேர் வரையிலான தமிழர்கள் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது**

அந்நியர்களிடமிருந்து நாடு சுதந்திரம் பெற்றபோதிலும் தமிழர்களுக்கு அது எட்டாக்கனியாகவே காணப்படுகின்றது. சுமார் 11கோடி என்பது மக்கள் தொகையைப் பொறுத்தவரையில் பெரியதொரு எண்ணிக்கைதான். உலகம் முழுவதும் இந்த எண்ணிக்கையைக் கொண்ட தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றமை சிலவேளை பலருக்குத் தெரியாமலிருக்கலாம்.

> ஒற்றுமையீனமே தமிழர்களின் பலவீனமாகக் காணப்படுகின்றது. தமிழர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டால் அவர்கள் எதிர்பார்க்கின்ற அனைத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

போர் காரணமாகத் தமிழர்கள் என்றால் அது இலங்கைத் தமிழர்களையே சுட்டி நின்றதை மறந்துவிட முடியாது. இதைவிடத் தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்வதற்கும் போரே காரணமாகிவிட்டது. இதனால் இலங்கைத் தமிழர்கள் உலகம் முழுவதும் தெரிந்த இனமாகிவிட்டனர்.

ஆனால் அவர்கள் அனுபவிக்கின்ற இன்னல்கள் தொடர்பாக வெளியில் உள்ளவர்களுக்கு உண்மைநிலை சரியாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவான எண்ணிக்கை கொண்டவர்கள் தமக்கெனத் தனிநாடு அமைத்து வாழ்ந்து வருவதைக் காணமுடிகின்றது. இஸ்ரேல் நாட்டை அமைத்து வாழ்கின்ற யூத மக்களை இதற்கொரு உதாரணமாகக் கூறமுடியும். அவர்கள் எதிர்கொண்ட அவலங்கள் மிகக் கொடியவை. ஆனால் அதையெல்லாம் மீறித் தமக்கெனத் தனி நாடு ஒன்றை அமைத்து அந்த மக்கள் சிறப்பாக வாழ்கின்றனர். ஆனால் எதுவுமே சாத்தியமாகாத நிலையில் ஆயுதம் ஏந்தி தனிநாட்டுக்காகப் போராடிய இலங்கைத் தமிழர்கள், எதுவுமே கிடைக்காத நிலையில் அடிமை வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

**தமிழர்களது பலவீனம் அவர்கள் மத்தியில் ஒற்றுமை இன்மையே**

ஒற்றுமையீனமே தமிழர்களின் பலவீனமாகக் காணப்படுகின்றது. தமிழர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டால் அவர்கள் எதிர்பார்க்கின்ற அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். ஒற்றுமை என்பது இனம், மதம், குலம் ஆகிய அனைத்தையும் கடந்து அனைவரும் ஒன்றாகிவிடுகின்ற ஒன்றாக அமைய வேண்டும். ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற போது ஒற்றுமையீனம் தலைதூக்கிக் காணப்பட்டதுடன் காட்டிக்கொடுப்புக்களும் நிறையவே இடம்பெற்றன.

இன்றைய நிலையில் இதை மேலும் தொடரவிடுவது தமிழினத்தின் அழிவுக்கே வழிவகுத்துவிடும். தேர்தல்கள் மூலமாகக் கிடைக்கின்ற பட்டங்களும், பதவிகளும் தமிழர்களுக்கு உதவப் போவதில்லை. அவை வீணான பிளவுகளுக்கும், குரோதங்களுக்கும் வழிவகுக்குமே தவிர இனத்தின் எதிர்கால நன்மைகளுக்கு ஒருபோதுமே உதவப்போவதில்லை. பல கட்சிகளாகப் பிரிந்து அரசியலில் ஈடுபடுவதால் தமிழர்களுக்கு என்ன கிடைத்துவிடப் போகின்றது? ஒருசிலர் பதவிகளால் கிடைக்கின்ற சுகங்களை அனுபவித்துக்கொண்டிருக்க, ஏனையவர்கள் எதுவும் கிடைக்காமல் திண்டாடுவதற்குத் தான் இது வழிவகுக்கும். வடக்கு மாகாணசபையை இதற்கொரு உதாரணமாகக் கொள்ளமுடியும்.

**நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் வளங்கள் வீணே அவமாகிப் போகின்றன**

வடக்கிலும், கிழக்கிலும் ஏராளமான இயற்கை வளங்கள் குவிந்து கிடக்கின்றன. இவற்றைப் பயன்படுத்துவதற்குத்தான் எவருமேயில்லை. அரசின் உதவியும், ஊக்கமும் கிடைக்காததால் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர். அரசின் தவறான நடவடிக்கைகள் காரணமாகவே இந்த அவலநிலை தோன்றியுள்ளது. தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் திராணியில்லாத நிலையில் காணப்படுகின்றன. தமிழர்களைக் கொத்தடிமைகள் போன்று நடத்துகின்ற நிலையும் தொடர்ந்து செல்கின்றது. எல்லாவற்றுக்கும் ஒற்றையாட்சியொன்றையே தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். தனிநாடு கேட்டுப் போராடிய தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒற்றையாட்சி எந்தவகையில் தீர்வைத் தரப்போகின்றது என்பதை அறியமுடியவில்லை. ஆகக் குறைந்தது சுயாட்சியையாவது வழங்கி அவர்களை ஓரளவாவது திருப்திப்படுத்த முடியும். அதுவும் முடியாது விட்டால், அவர்களைப் பிரிந்து செல்ல அனுமதிப்பதுதான் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுத்தரும் என்பதை மறுக்கமுடியாது.

உலகம் முழுவதிலும் வாழுகின்ற 11கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் ஒன்றுபட்டுச் செயற்படும்போது தமிழர்களின் பலம் உலகத்துக்குத் தெரியவரும். ஈழத் தமிழர்களின் அவலநிலையையும் வெளியில் உள்ளவர்களால் புரிந்து கொள்ள முடியும். இதன் பின்னரே அடுத்த நடவடிக்கை தொடர்பாகச் சிந்திக்க முடியும். தனிநாடோ அல்லது சுயாட்சியோ கிடைக்காமல் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எந்த வகையிலும் இயலாததொரு காரியமாகும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# அழுவதா? சிரிப்பதா?

"ஆகா வந்திட்டான் ஐயா! வந்திட்டான்" என்ற சொற்றொடரொன்று சில தென்னிந்தியத் திரைப்படங்களில் சிரிப்பு நடிகர் வடிவேலுவால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருவதை எம்மில் பலர் அறிவர்.

அடுத்த அரசதலைவர் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருக்கிறேன். நான் போட்டியிட்டால் எனக்கு தமிழர்களும்கூட வாக்களிப்பார்கள் என்று முன்னைய மகிந்த அரசில் பாதுகாப்புச் செயலராக அதிகாரம் பண்ணிய கோத்தபாய கொழும்பு தமிழ் நாளிதலொன்றுக்குத் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

அதனை வாசிக்க நேர்ந்தபோது மேற்குறிப்பிட்ட சிரிப்பு நடிகர் வடிவேலுவினது "ஆகா, வந்திட்டான் ஐயா, வந்திட்டான்" என்ற நகைச்சுவை சொற்றொடரே நினைவுக்கு வந்தது.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும் தனது கையில் எடுத்துக்கொண்டு பாதுகாப்புச் செயலர் என்ற பதவி வழங்கிய அதிகாரங்களைப் பயன்படுத்தி செயற்பட்டவர் இந்த கோத்தபாயவே.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற பெயரில், நாட்டின் ஒட்டு மொத்தத் தமிழ் மக்களையும் பயங்கரவாதிகள் என்ற கணிப்பீட்டுக்குள் அடக்கி, தமிழ் மக்களுக்கு எதிராக, அவர்களது இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டதன் மூலம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களது வெறுப்பையும் குரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டவர் இந்த கோத்தபாய.


தமிழ் இளைஞர்கள், யுவதிகளைக் கடத்திச் செல்லும் வெள்ளைவான் விவகாரம், மற்றும் யாழ்ப்பாணம் குடாநாட்டு மக்களை ஒரு காலகட்டத்தில் நித்திரையின்றி அலைக்கழித்த கிறீஸ் பூத விவகாரம் போன்றவற்றின் பின்னணியில் கோத்தபாயவுக்கும் கணிசமான தொடர்பு இருந்துள்ளதென்ற குற்றச்சாட்டும் தமிழர் தரப்புக்களால் முன்வைக்கப்பட்டு வந்திருந்தன.

போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகள் மற்றும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இன்றுவரை காணாமல் போனோராகக் கணிக்கப்பட்டு வருவதன் பின்னணியிலும், அவ்வேளைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற ரீதியில் கோத்தபாயவுக்கும் கணிசமான அளவு பங்குண்டு என்பதும் அவர் மீதான மிகப்பெரும் குற்றச்சாட்டு.

இத்தகைய அனைத்துத் திருவிளையாடல்களாலும் ஒட்டுமொத்த ஈழத்தமிழ் மக்களது வெறுப்பையும் குரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டுள்ள கோத்தபாய, அடுத்த அரசதலைவர் பதவிக்கான தேர்தலில் தாம் போட்டியிட நேர்ந்தால் தமிழ் மக்களில் கணிசமானோர் தமக்கு வாக்களிப்பர் என திருவாய் மலர்ந்தருளியிருப்பதைக் கேட்டு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

ப.அற்புதம்
வண்ணார்பண்ணை

அடிமைத்தனம்




## போதி தர்மர் பொன்மொழிகள்



- உங்கள் மனதுக்கு உடைகளில்லை...
- வாழ்க்கையும் சாவும் முக்கியமானவை...
- வார்த்தை என்பது மாயை...
- ஆச்சரியமான அபூர்வமான எல்லாமே ஒன்றுமில்லாதவை
- பாதையின் சாரம் என்பது அதிலிருந்து பிரிந்துபோவது...






உலகத்தில் மிகச்
சிறந்த காதல் ஜோடி
செருப்பு மட்டுமே...
ஒண்ணு
இல்லைன்னா
இன்னொன்று
வாழவே வாழாது;
வாழ்ந்தாலும் வேஸ்ட்!

விட்டுக்கொடுத்தல்,
சகிப்புத்தன்மை,
முட்டாள்தனம்...
இவற்றால் ஆனது
**அன்பு**



'தயவுசெய்து' எனக்
கூறும்போது எழும்
தன்மான உணர்வு
'ப்ளீஸ்'னு
சொல்லும்போது
எழுவதில்லை!
**– அந்நிய மொழி**

இனப்படுகொலை
என்பது சிக்கன்
பிரியாணி
சாப்பிடும்போது கூடவே
ஒரு முட்டையையும்
சேர்த்துச் சாப்பிடுவது!



## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | | |
| 3 | | | | | 9 | | 1 | 2 |
| 4 | | | | | 8 | 3 | | 9 |
| 9 | | | | | | | | |
| | | | 8 | | | | | 6 |
| | 6 | | 7 | | | 1 | | 8 |
| | | 4 | | | 3 | 5 | | |
| | | | | 5 | | 9 | 2 | |
| | | 7 | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 1 | 5 | 7 | 9 | 6 | 8 | 2 |
| 7 | 2 | 8 | 3 | 4 | 6 | 1 | 5 | 9 |
| 6 | 5 | 9 | 2 | 8 | 1 | 7 | 4 | 3 |
| 8 | 6 | 2 | 1 | 3 | 5 | 9 | 7 | 4 |
| 9 | 1 | 4 | 8 | 6 | 7 | 2 | 3 | 5 |
| 3 | 7 | 5 | 9 | 2 | 4 | 8 | 6 | 1 |
| 1 | 9 | 7 | 6 | 5 | 3 | 4 | 2 | 8 |
| 2 | 4 | 3 | 7 | 9 | 8 | 5 | 1 | 6 |
| 5 | 8 | 6 | 4 | 1 | 2 | 3 | 9 | 7 |

நேற்றைய விடை

விரைவில்



# 'கருப்பு காக்கா'வில் கதாநாயகனாக ராஜேந்திரன்

'நான்கடவுள்'படத்தில்வில்லனாக அறிமுகமாகிபலபடங்களில்வில்லனாகநடித்துநகைச்சுவைநடிகராகமாறியவர் ராஜேந்திரன். இவர் தற்போதுநாயகனாக நடிக்கும்படம் 'கருப்புகாக்கா'.

தருண் பிரபு இயக்கத்தில் உருவாகியுள்ளது இந்தப் படம். நகைச்சுவை கலந்த பேய்ப் படமாகத் தயாராகியிருக்கிறது. வசந்த் மற்றும் பிரகாஷ் இருவரும் இணைந்து தயாரித்துள்ளனர். டேனியல், 'ராட்டினம்'சுவாதி, ஜார்ஜ், அஞ்சலிராவ் ஆகியோர்முக்கியவேடங்களில் நடித்துள்ளனர்.

பேய்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்துகதைஎழுதப்போன ஒருவரின் வாழ்வில் என்ன நடக்கிறது என்பதுதான் இந்தப்படத்தின்கதை. உண்மைச்சம்பவத்தைஅடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது என்கிறது படக்குழு. இந்தப் படத்தின் முதல் சுவரொட்டியை இயக்குநர் விஜய் மில்டன் வெளியிட்டுள்ளார்.

## வெற்றிக்கு வழி

- வாய்ப்புகளைத்திறக்கும்சாவிஉழைப்புதான் என்பதை மறக்காதீர்.
- வெற்றி என்னும் ஏணியில் ஒவ்வொரு படியாகத்தான் ஏறவேண்டும்.
- முடியாது, தெரியாது, நடக்காது, என்றவார்த்தைகளை சொல்லவே கூடாது.
- பாதுகாப்பாய் ஒரே இடத்தில் இருப்பது வளர்ச்சிக்கு உதவாது.
- வெற்றிக்கு தேவை பாதி அதிர்ஷ்டம் பாதி அறிவு.



## இன்றைய நாள்

**மேடம்:** நற்செயலில் ஈடுபட்டு நண்பரால் பாராட்டப்படுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**இடபம்:** எண்ணம், செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். கூடுதல் உழைப்பினால் தொழில் வியாபா ரத்தில் வளர்ச்சி ஏற்படும்.பணவரவு திருப்தியளிக்கும். புத்திரர் படிப்பில் முன்னேற உதவுவீர்கள்.

**மிதுனம்:** உறவினரின் பாசம் கண்டு வியப்பு உண்டாகலாம். எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் கூடுதல் பொறுப்பு அதிகரிக்கும்.

**கடகம்:** சுற்றுப்புற சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. முக்கியமான பணி நிறைவேற அவகாசம் தேவைப்படும். தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர்.

**சிங்கம்:** உங்களின் செயலில் திறமை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். உபரி பணவரவில் சேமிப்பு கூடும்.

**கன்னி:** உங்களின் செயலை சிலர் விமர்சனம் செய்யலாம். பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழிலில் சராசரி உற்பத்தி விற்பனை இருக்கும். இலாபம் சுமார். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** நண்பருக்கு ஆலோசனை சொல்வீர்கள். தொழில் வியாபா ரத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பார்கள்.

**விருச்சிகம்:** எதிர்கால நலன் குறித்து ஆலோசிப்பீர்கள். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாப்பது நல்லது.

**தனுசு:** ஆன்மிக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும். குடும்பத் தேவை பெருமளவில் நிறைவேறும்.

**மகரம்:** எதிரியால் இருந்த தொல்லை மறையும். வெற்றிப் பாதையில் வீறு நடை போடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**கும்பம்:** திட்டமிட்ட செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பிள்ளைகளின் வழியில் திடீர் செலவு ஏற்படலாம்.

**மீனம்:** மனம் வருந்தும்படி சிலர் பேச வாய்ப்புண்டு. பொது விஷயங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும்.



அடபாவிங்களா சிக்கன் பிரியாணில முழு கோழிய பாத்திருக்கன்.... ஆனா மட்டன் பிரியாணில முழு ஆடு இருக்கிறத இப்பதாண்டா பாக்கிறேன்

உன்னால சீக்கிரமா தூங்க முடியல
நேரத்துக்கு வேலைக்கு கிளம்ப முடியல
பிரெண்டுங்க கூட சுத்த முடியல
இப்படி என்ன புலம்ப விட்டுட்டியே



அடேய் உன்னால ஒன்னே ஒன்னு மிச்சம்டா நான் ரி.வி பாத்து பல மாசம் ஆச்சுடா...



யாழ் - வரணி குடமியன்

# அருள்மிகு ஆதிசிவன் தேவஸ்தான

## வருடாந்த மஹோற்சவம் -18.07.2018

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விளம்பி வருஷம் ஆடி மாத பௌர்ணமியை முன்னிட்டு நாளை (18.07.2018) ஆடிமாதம் 2 ஆம் நாள் புதன்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெறும். மறுநாள் பூங்காவனம்.

### தினசரி உற்சவம்

**காலை**

- காலை 9.00 மணிக்கு கும்ப பூஜை
- பகல் 10.30 மூலஸ்தான பூஜை
- பகல் 11.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை சுவாமி உள்வீதி வலம் வருதல்
- 1.00 மணிக்கு அன்னதானம்.

**மாலை**

- மாலை 6.30 மணிக்கு மூலஸ்தானப் பூஜை
- இரவு 8.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை சுவாமி உள்வீதி வெளி வீதி வலம் வருதல்.

| | | |
|---|---|---|
| 25.07.2018 | புதன்கிழமை | மாலை 3.30 மணிக்கு சடை வயிரவர் ஆலயத்துக்கு வேட்டைக்குப் புறப்படல். இரவு சப்பறத் திருவிழா. |
| 26.07.2018 | வியாழக்கிழமை | தேர்த்திருவிழா காலை 6.30 மணிக்கு கும்பபூஜை 10.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார். |
| 27.07.2018 | வெள்ளிக்கிழமை | தீர்த்தம் 10.30 மணிக்கு இடம்பெறும். |
| 28.07.2018 | சனிக்கிழமை | திருக்கல்யாணம். பூங்காவனம். |
| 29.07.2018 | ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணிக்கு வயிரவர் மடை. |

சிவஸ்ரீ கதி.இராமலிங்க ஐயா ஆசியுடன் ஆலய பிரதிஸ்டா உற்சவ குரு
தென்இந்திய பயிற்சி குருமணி சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக் குருக்கள்

தினமும் சிறந்த முறையில் அன்னதானம் வழங்கப்படும்
குடமியன் ஆதிசிவன் தேவஸ்தானம்.

ஆலய தர்மகர்த்தா,
சி.குமாரசாமி.

(SUP/1524)(11,17)

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின் ஆடித் தள்ளுபடி

15000/= பெறுமதியான பட்டுச் சாறி
ஒன்றிற்கு 5000/= பெறுமதியான
சாறி ஒன்று **இலவசம்**



| | | |
|---|---|---|
| கொட்டன் TOP | - ~~1800/=~~ | 1000/= |
| டெனிம் TOP | - ~~1800/=~~ | 1200/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500/=~~ | 1000/= |

**10%-50%** வரை விலைக்கழிவு

மொடர்ன் Tops, கொட்டன் Tops, டெனிம் Top,
மொடர்ன் சல்வார்கள், மொடர்ன் சூட்ஸ்,
பார்ட்டி புரொக்ஸ் மற்றும்
சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகள்



ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்


**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**

**காலம் : 16.07.2018 - 01.08.2018**

**இந்தியன் செலக்ஷன்**

அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 09 . 1950

மறைவு 13 . 07 . 2018

### நடராஜன் பற்குணன் (ஸ்ரீபன் பாஸ்டர்)

கொழும்பு கொள்ளுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாவும், ஜேர்மனியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜன் பற்குணன் (ஸ்ரீபன் பாஸ்டர்) 13.07.2018 ஜேர்மனியில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாரந்தனை உடையார் செல்லப்பா நடராஜன் - நடராஜன் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான முத்தையா - பாலம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்ரீதேவியின் அன்புக் கணவரும், கிருசாந்தி, சாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Rev அன்ரூ பிரகாஷ், ஜோசப் தனுகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பகவதி (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (வவுனியா), புவனேஸ்வரி (வவுனியா), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (பாலா மாஸ்டர் - சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும், அமலோற்பவதாஸ் (பிரான்ஸ்), விஜயசெல்வி (ஆசிரியை - கலைமகள் வித்தியாலயம், நெளுக்குளம்), நாகேந்திரன் (சுத்தானந்த விலாஸ், வவுனியா), திருமலர்தேவி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், Jeriel, Jason Joanna, Joylin, Jovita ஆகியோரின் அன்பு பேரனும், ஏஞ்சலின், பார்மிலா, தரன்ஸ், யோர்மிலா, நிரூபன், அஷ்மிலா, திருமிலா ஆகியோரின் பெரியப்பாவும், கிரிதரா திருநாவுக்கரசு (நோர்வே), காலஞ்சென்ற பத்மகரன், துகிதாஸன், ஜிவிதா, சுவர்ணா, கமல், டிரோசன், கலைப்பிரியா, பிரியங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (18.07.2018) புதன்கிழமை ஜேர்மனியில் Hattingen இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**சகோதரன் - நடராஜன் பரமேஸ்வரன்**
**077 6701733**

**சகோதரி - திருமதி புவனேஸ்வரி நாகேந்திரன்**
**077 9081847**

**மகள் - சாமினி - +44 7954 384974,**
**மருமகன் - Rev. அன்ரூ பிரகாஷ் - +44 7760 276138**

SAVA/18277 (11.17)

---

### வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்துக்கு வாகனத்தில் சென்று வேலை செய்யக்கூடிய Delivery Boys தேவை.

**191,A கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்**
**(சென்.பெனடிக் பாடசாலை முன்பாக)** (CS/18278) (11.17)

---

### தவறவிடப்பட்டுள்ளது

**NP QG 3947** என்ற வாகன இலக்கமுடைய வாகனப் புத்தகம் ஒன்று சுன்னாகத்திலிருந்து கொக்குவில் வழியாக ஆடியபாதம் வீதியில் தவறவிடப்பட்டுள்ளது.

**077 739 3881, 077 386 9776**

(CS/18291)(11.17)

---

### வேலையாள்கள் தேவை

யாழில் இயங்கும் வர்த்தக நிறுவனத்துக்கு

- சிட்டை எழுதுநர்
- உதவியாள்கள்

உடன் தேவை. ஆண்கள் மட்டும்.

**071 766 7715**

(CS/18290)(11.17)

---

### வீடு வாடகைக்கு

வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் சகல வசதிகளுடன்கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு - 077 366 0456**

---

### பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து பணிபுரிய பணிப் பெண் தேவை.

**தொடர்பு - 077 362 9259**

---

### வேலையாள்கள் தேவை

பேக்கரி வேலையில் நன்கு அனுபவம் உள்ளவர்கள் மற்றும் நடமாடும் பாண் வாகனம் ஓடுவதற்கு சாரதிகள், பாண் விற்பனையாளர்கள் தேவை.

**புதிய துர்க்கா வெதுப்பகம், கலைவாணி வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

---

## வேலை வாய்ப்பு

**யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்**
**VISHNU International Industry நிறுவனத்திற்கு**
**விற்பனை பிரதிநிதிகள், வாகனச்சாரதிகள் தேவை.**

விற்பனை பிரதிநிதிகள் - இரு ஆண்கள் வயது 27 மேற்பட்டவராகவும், விற்பனைத்துறையில் இரண்டு வருடங்கள் அனுபவமுள்ளவராகவும், மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது அவசியமாகும்.

வாகனச்சாரதி - கனரக வாகனம் செலுத்தக்கூடிய, 30 வயதிற்கு மேற்பட்டவராகவும், தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர் தேவை.

**நாளை (18.07.2018) புதன்கிழமை மு.ப. 10 மணிமுதல் பி.ப. 2 மணி வரையும் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.**

**VISHNU International Industry**

இல. 195, ஆடியபாதம் வீதி, (லக்ஷ்மி மண்டபம்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 077 718 5002, 076 303 7154

---

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## வைத்திலிங்கம் இலட்சுமணன் (பனங்கட்டி)

மண்ணில் 28.07.1939



விண்ணில் 17.07.2011

ஆடிப்பிறப்பன்று அதிர்ந்தது எம் உள்ளம் ஐயா
பொறுமையின் சிகரமாய் உழைப்பில் நேர்மையாய்
பாசத்தில் பக்குவமாய் வாழ்க்கையெனும் பாதையில்
நெடுந்தூரம் பயணித்த எம் தந்தையே
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் - உங்கள்
நினைவுகளோடு வாழ்ந்திருப்போம் - ஐயா
"தந்தை காலடி எமது கோயில்"

**குடும்பத்தினர்.**

**இலட்சுமணன் ஹாட்வெயார்**
**கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.**

(CS/18281)(11.17)

# உலகக்கிண்ணக் கொண்டாட்டங்களும் கோலாகலங்களும்












ரஷ்யாவில் நடைபெற்றுவந்த கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் முடிவடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் குரோசியாவை வீழ்த்தி கிண்ணம் வென்றது பிரான்ஸ். பிரான்ஸ் அணினரும் ரசிகர்களும் பிரான்ஸில் பரவலாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குரோசிய அணி கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறுவது இதுவே முதல் முறையாதலால் அந்த அணியின் ரசிகர்களும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர். (ம)

# ஏமாற்று வித்தை




அது ஒரு பெரிய ஆல மரம். அந்த ஆல மரத்தில் ஆண்காகமும் பெண் காகமும் கூடு கட்டி வாழ்ந்தன. பெண் காகம் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது. ஒரு நாள் காகக் குஞ்சுகள் நோய்வாய்ப்பட்டன. பெண் காகம் அழுதது. ஆண் காகம் பெண் காகத்தைப் பார்த்து "அழாதே" என்று கூறியது. அதன் பின் இரை தேடிச் சென்றது.

பெண் காகம் ஆல மரத்தின் கீழ் பூனை ஒன்றைக் கண்டது. பெண் காகத்துக்கு மகிழ்ச்சிதாங்க முடியவில்லை. பூனையின் அருகே பறந்து சென்றது. "அன்புள்ள பூனையாரே! எனது குஞ்சுகள் நோயால் வேதனைப் படுகின்றன. உமக்குத் தெரிந்த வைத்தியர் இருந்தால் சொல்வீரா?"என்று கவலையோடு கேட்டது.

பூனை சிறிது நேரம் சிந்தித்தது. காகத்தை ஏமாற்றி குஞ்சுகளை உண்பதற்குத் திட்டம் தீட்டியது. "அன்புள்ள காக்கையாரே! என்னைப் பற்றி உமக்குத் தெரியாதா? நானும் ஒரு வைத்தியர் தானே! ஆனால் நான் பணம் வாங்குவதில்லை. இலவசமாக வைத்தியம் செய்வதே எனது பணியாகும். எந்த இனத்தவருக்கும் உதவி செய்வேன். காக்கையாரே! நீர் விரும்பினால் நானே வைத்தியம் செய்கின்றேன்" என்று பூனை நயவஞ்சகமாகக் கூறியது. பூனையை மரத்தின் மீது ஏறி வருமாறு காகம் அழைத்தது. அந்த நேரம் பார்த்து ஆண் காகம் பறந்து வந்தது. பெண் காகம் வைத்தியப் பூனை பற்றிக் கூறியது. ஆண் காகத்துக்கு கோபம் வந்தது. "பூனை எமது விரோதி. அது எம்மையும் குஞ்சுகளையும் பிடித்துத் தின்றுவிடும். துன்பம் வந்தால் புத்தியுமா தடுமாறுமா? வஞ்சகனிடம் உதவி கேட்கலாமா?" என்று உரத்துக் கத்தியது. "நல்ல வேளை நீங்கள் உரிய நேரத்தில் வந்தீர்கள். இல்லையென்றால் நானும் எனது குஞ்சுகளும் பூனைக்கு இரையாகி இருப்போம்"என்றது பெண் காகம். பூனை மரத்தில் ஏறி வருவதைப் பெண் காகம் கண்டது. பூனையைக் கொத்தப் பறந்தது. ஆண்காகமும் அதனுடன் சேர்ந்து கொத்தியது. பூனை தனது நய வஞ்சகம் காகங்களுக்குத் தெரிந்து விட்டதை உணர்ந்து கொண்டது. உயிர் தப்பினால் போதும் என்று எண்ணியது. தப்பினேன். பிழைத்தேன் என்று மரத்திலிருந்து பாய்ந்து ஓடியது.

ஆண் காகமும் பெண் காகமும் பூனை பாய்ந்து ஓடுவதைப் பார்த்துச் சிரித்தன.

# வழிகாட்டுவோம்



# சுனாமி



- சுனாமி என்பது ஜப்பானியச் சொல்லாகும்.
- இதனைத் தமிழில் கடற்கோள் என்பார்கள்.
- ஜப்பானில் அடிக்கடி கடற்கோளின் தாக்கம் ஏற்படுகிறது.
- கடற்கோளினால் உருவாகும் அலைகள் துறைமுகங்களைத் தாக்குகின்றன.
- 2004டிசெம்பர் 26இல் பெரியதொரு கடற்கோள் உலகைத் தாக்கியது.
- அன்றிலிருந்து சுனாமி என்ற ஜப்பானியச் சொல் பன்னாட்டு அந்தஸ்தைப் பெற்றுவிட்டது.
- 2004 டிசெம்பரில் ஏற்பட்ட சுனாமி இலங்கை, இந்தியா இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் நாடுகளைத் தாக்கியது.
- பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டது.
- கோடிக் கணக்கான சொத்துக்களை அழித்தது.
- மக்கள் இன்னலில் சிக்கித் தவித்தனர்.
- இலங்கையில் சுமார் முப்பதாயிரம் பேர் உயிரிழுந்தனர்.
- இலங்கையின் கடற்கரைப் பிரதேசம் அழிவுக்குள்ளானது.
- இயற்கைக் காரணிகளால் ஏற்படும் சுனாமியைத் தடுக்க முடியாது.
- ஆனால் முன் எச்சரிக்கையாக இருந்தால் அழிவைக் குறைக்கலாம்.
- சுனாமி போன்ற பாதிப்புக்களில் இருந்து அழிவுகளைக் குறைக்கும் திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது.
- சுனாமியால் ஏற்பட்ட வடுக்கள் படிப்படியாக மாறி வருகின்றன.
- சுனாமி ஒரு இயற்கை பேரிடராகும்.



## இன்று சிறுவர் மகிழும் ஆடிப் பிறப்பு

ஆடிப் பிறப்புக்கு நாளை (இன்று)விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

பாசிப்பயறு வறுத்துக் குற்றி சென்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சக்கரையுங் கலந்து
தோண்டியில் நீர் விட்டு மாவையதிற் கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக்கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிளந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயிறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துளாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே!

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப்படைப்பும் படைப்போமே

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக் கூழ் குடிப்போமே!

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

-நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

- இலங்கையின் மணி முடிபோல் விளங்கும் யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் மானிப்பாய் ஊரில் பிறந்தவர் சோமசுந்தரப் புலவர்.



- இவர் 1880ஆம் ஆண்டு யூன் மாதம் 17ஆம் நாள் பிறந்தார்.
- இவர் தனது ஆரம்பக்கல்வியை மானிப்பாயிலிருந்த அருணாசல உபாத்தியாரிடம் கற்றார்.
- பின்னர் இவர் தமிழ் அறிஞராய் விளங்கிய தனது தந்தையாரிடமும், நவாலியிலுள்ள இராமலிங்க உபாத்தியாரிடமும் தமிழையும் ஆங்கிலத்தையும் கற்றுப் புலமை பெற்றார்.
- வடமொழி நூல்களிலும் பயிற்சி பெற்றார்.
- இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே பாடல்களை ஆக்கத் தொடங்கிவிட்டார்.
- யாப்பிலக்கணம் கற்றுக் கொள்வதற்கு முன்னரே தனிப்பாடல்கள் பலவற்றையும் திறம்படப் பாடும் வல்லமை புலவருக்கு இயல்பாகவே அமைந்து கொண்டது. இதனால் இவரை எல்லோரும் வரகவி என்று வழங்குவராயினர்.
- வட்டுக்கோட்டையிலுள்ள ஆசிரியர் சின்னத்துரை என்பவரும் இவரும் சேர்ந்து நிறுவிய வட்டுக்கோட்டையிலுள்ள பாடசாலை ஒன்றில் இவர் ஆங்கிலம், தமிழ், இதிகாசம் என்னும் பாடங்களைக் கற்பித்தார். அவரிடம் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்விகற்று வெளியேறினர்.
- இவர் 1925ஆம் ஆண்டு உயிரிளங்குமரன் எனும் நாடகத்தை எழுதி நடிப்பித்தார். அந்த நாடகத்தின் அருமை பெருமைகளை அறிந்த இலங்கைத் தமிழ் புலவர்கள் (புலவர்) என்னும் பட்டத்தை அவருக்கு அளித்தனர். பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கினர்.
- இந்த நிலையில் இவரிடம் பள்ளிச் சிறுவர்களுக்குரிய பாடல்களைப் பாடித்தரும்படி இலங்கைக் கல்விப் பகுதியினர் வேண்டினர்.
- ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி முதலிய பாடல்களைப் பாடி பரிசும் முதன்மையும் பெற்றார்.
- தங்கத் தாத்தா என்ற சிறப்புப் பெயரும் அவருக்கு உண்டாவதாயிற்று.
- புலவருடைய தந்தையார் இறந்தபோது, அவர் நினைவாக 'தந்தையார் பதிற்றுப் பத்து' என்னும் விழுமிய நூலை எழுதினார். இது திருக்குறள் நாலடியார் முதலிய நூல்களின் கருத்துக்களைப் பெரிதும் தழுவி எழுதப்பட்டது. தமிழர்களுடைய பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் எடுத்துக் கூறுகின்றது.
- இவர் ஆசிரியர் தொழிலில் நின்றும் இளைப்பாறிய பின் வீட்டிலிருந்து கொண்டு பல வகுப்புக்களை நடத்திவந்தார். பல நூல்களையும் எழுதினார். உயிரிழங்குமரன் நாடகம், இலங்கை வளம், தால விலாசம், தந்தையார் பதிற்றுப்பத்து, நாமகள் புகழ் மாலை, சிறுவர் செந்தமிழ், விநாயகர் பாமாலை, மரதனோட்டம், முருகன், பாமாலை, கதிரைச் சிலேடை, நல்லையந்தாதி, நான்மணி மாலை என்பவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை.
- இவர் 1953ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் நாள் சிவபதமெய்தினார்.

## லசந்த...

வான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்களும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

இந்த வழக்கோடு தொடர்புபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார கடந்த பெப்ரவரி மாதம் முதல் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்ட சமயத்தில் நாணயக்கார, மேல் மாகாண தெற்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றினார். முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் கல்கிஸ்சை பொலிஸ் நிலையத்தின் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றினார். லசந்த கொலை தொடர்பான சாட்சியங்களை மறைத்தனர் என இவர்களுக்கு எதிராகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (உ-21)

## தூக்கிலிடுவோர்...

கஹவத்த பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

காணிக் கொள்ளை, வாகனக் கொள்ளை எனப் பல வழிகளில் பாதாளக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் போதைப் பொருள் விற்பனையிலேயே அதிகளவானோர் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பாதாளக்குழுக்களுக்குமுடிவுகட்டப்படவேண்டும். அதற்குரிய நடவடிக்கையை அரசு முன்னெடுத்து வருகின்றது.

போதைப்பொருள் விற்பனை, கடத்திலின் போது அவற்றை எடுத்துச்செல்வதில் பெண்களே அதிகளவு ஈடுபட்டுள்ளனர் என்பதை அந்த அமைச்சைப் பொறுப்பேற்ற பின்பு தான் தெரிந்துகொண்டேன். அண்மையில் எனக்குக் கிடைக்கப்பெற்ற தூக்கிலிடப்பட வேண்டியவர்களின் பட்டியலில் முதலில் இருப்பதும் பெண்ணொருவரின் பெயர் தான்.

இலங்கை இன்று போதைப்பொருளின் கேந்திர நிலையமாக மாறியுள்ளது. பல நாடுகளுக்கும் கடத்தப்படும் பொருள்கள் இங்கு தான் பரிமாறப்படுகின்றன. இதன் பின்னணியில் சில அரச அதிகாரிகள் இருந்துள்ளனர். சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் என அந்தப் பட்டியல் நீண்டு செல்லலாம் - என்றார். (உ -21)

## பொய்...

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற அமர்வில் டெனீஸ்வரன் விவகாரம் தொடர்பில் விளக்கவுரை ஒன்றை முதலமைச்சர் நிகழ்த்தினார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலக் கட்டளைக்கு அமைவாகத் தன்னால் அமைச்சர் ஒருவரை நியமிக்கவோ நீக்கவோ முடியாது என்று குறிப்பிட்டிருந்தார்.

முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டது தவறு என்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றுச் சுட்டிக்காட்டினர். நீதிமன்றத் தீர்ப்பை திரிபுபடுத்தி முதலமைச்சர் பொய்யுரைத்து சபையைத் தவறாக வழிநடத்தியுள்ளார் என்று தெரிவித்தனர். அரசமைப்பின் 154 எப்(5) இற்கு அமைவாக, அமைச்சர்களைப் பரிந்துரைக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கே உண்டு எனவும், அது நீதிமன்றத் தீர்ப்பினால் பறிக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அமைச்சரவையின் விவரத்தைத் தருமாறு கோரிக் கடிதம் அனுப்பினாரா என்ற கேள்விக்கு, இல்லை என்று முதலமைச்சர் அதே அமர்வில் பதிலளித்திருந்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் 5ஆம் திகதி எழுதிய கடிதத்துக்கு முதலமைச்சர் 6ஆம் திகதி பதில் அனுப்பியிருந்தமையும், 6ஆம் திகதி ஆளுநர் எழுதிய கடிதத்துக்கு முதலமைச்சர் 11ஆம் திகதி பதில் அனுப்பியிருந்தமையும் ஆதாரங்களுடன் நேற்று சபை உறுப்பினர்களால் வெளிப்படுத்தப்பட்டன.

இந்த விடயத்தில் முதலமைச்சர் பொய்யுரைத்து மக்களை முட்டாள் ஆக்கிவிட்டார் என்றும் உறுப்பினர்கள் கடுமையாகச் சாடினார்கள். (உ-5)


### காணி விற்பனைக்கு

டிப்போ பஸ்நிலையத்திற்கு அருகில் (சிவன் வீதியில்) விவசாயம், பண்ணை மேற்கொள்ளக் கூடிய 12.5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 247 3112**

### வேலையாள் தேவை

போட்டோ பிறேம் கடைக்கு பெண் வேலையாள் தேவை.

**தொடர்பு - 077 6099 071**

### நாவற்குழி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில்

மண்டலாபிஷேக பூர்த்திவிழா 18.07.2018 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி சிறப்பாக நடைபெறும். 1008 சங்காபிஷேகம். நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும்.

அனைவரும் வருகைதந்து நல்லருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

(CS 18293/15/17) **சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்.**

### பெயர்மாற்றம்

இலகடி, உடுப்பிட்டி என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **கந்தன் வடிவேலு** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **கந்தன் வேலாயுதம்** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

(ANE/532)(11,17) **- கந்தன் வேலாயுதம் -**

### 89ஆவது பிறந்தநாள் நினைவும் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



அமரர் வைத்தியகலாநிதி

**செ.இந்திரராஜா**

தோற்றம் 17.07.1929 — மறைவு 21.04.2014

அன்பின் நினைவலைகளுடன்

**மனைவி, பிள்ளைகள்.**

(CS/18285)(11,17)

### மரண அறிவித்தல்

**திருமதி அம்பிகை அம்மா செல்லையாக்குருக்கள்**



சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகை அம்மா செல்லையாக் குருக்கள் நேற்று (16.07.2018) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாக் குருக்களின் அன்பு மனைவியும் பரராஜசேகரக்குருக்கள் (மீசாலை கரும்புமாவடி கந்தசாமி ஆலயம்), காந்திமதி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற முத்துலிங்க சர்மா மற்றும் தெட்சணாமூர்த்திக்குருக்கள் (மயூரபதி சோதிட நிலையம், சாவகச்சேரி), விக்கினேஸ்வரமூர்த்திக் குருக்கள் (அறுகம்புலம் பிள்ளையார் கோவில், மீசாலை), கருணாகரசர்மா (கதிரேசன் கோவில், கொழும்பு), உருத்திரமூர்த்திசர்மா (கொழும்பு), சிவசங்கர ஐயர் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2018) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு, வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பங்களா வீதி, மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர். 0771326758**

### பணிஸ் விலை உயர்வு

**பாண் தவிர்ந்த பணிஸ் வகைகளின் விலை 18.07.2018 தொடக்கம் ஐந்து (05/=) ரூபாவால்** அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**செயலாளர்.**

(IN/7297)(11,17) **யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.**

### மரண அறிவித்தல்கள்

**நாகராசா கமலேந்திரன் (ராசு)**

*(உரிமையாளர் - பிள்ளையார் கடைச்சல் பட்டடை)*



ஆசாரி வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கமலேந்திரன் (ராசு) நேற்று (16.07.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 36, நாவலடி லேன், வண்ணார்பண்ணை எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**36, நாவலடி லேன், வண்ணார்பண்ணை.** (CS 18294/15/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**திருமதி புஸ்பராணி பரமேஸ்வரன்**



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி பரமேஸ்வரன் கடந்த (15.07.2018) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - சீவரட்ணம் தம்பதிகளின் மருமகளும் பரமேஸ்வரனின் அன்பு மனைவியும் இந்துஜா (ஆஸ்திரேலியா), இந்திரஜித் (ஆசிரியர் - மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் அரவிந்தன் (ஆஸ்திரேலியா), தாட்சாயினி (விவசாயப் போதனாசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, தியாகராசா மற்றும் சிறிக்காந்தன் (லண்டன்), செல்வராணி, விஜியராணி, தங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனேஸ்வரன், இராஜேஸ்வரன், காலஞ்சென்ற சரஸ்வதி, சிவகாமசுந்தரி, தவபாலன், காலஞ்சென்ற ஜீவரட்ணம், ஸ்ரீரஞ்சன், காலஞ்சென்ற வத்சலாதேவி, பற்குணவதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் கிஷாண், கர்ணிகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தில்லைநாதனின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2018) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**67, பாற்பண்ணை வீதி, 10ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு.**

**தகவல்: குடும்பத்தினர். 0772798158**



**திருமதி மனோன்மணி சோமசுந்தரம்**

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் மற்றும் கொட்டடி சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவராகிய திருமதி மனோன்மணி சோமசுந்தரம் நேற்று (16.07.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் கந்தவனம் இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் பொன்னுச்சாமி, அன்னலட்சுமி, நடராசா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரியும் சோமசுந்தரத்தின் அன்புமனைவியும் வசந்தினி, சாந்தினி, ஈழநேசன், (முன்னாள் L.C.L உத்தியோகத்தர் உதவி மாவட்ட ஆணையாளர் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்), இந்திரதாஸ் (சுவிஸ்), காலஞ்சென்ற சுகந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் புனிதகுமாரி (ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி கல்வி வலயம்), விஜயசுசீலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சேயோன் (மாணவர், விவசாயக் கல்லூரி, வவுனியா), வித்தகி, அபி, கபி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டடி வில்லூண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**இல. 33, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.**

**தகவல் : சோ. ஈழநேசன் (மகன்).**

# மூலக்கூறுகளும் மின்னணுக்களும்

கயல்விழி

எந்த வகை மின்னணுக்களாக இருந்தாலும், அவைகளுக்கிடையில் எதிர்ப்பு விசை உண்டு. காரணம், அனைத்தும் ஒரே வகையான எதிர் மின்னூட்டம் கொண்டவை. ஒன்றையொன்று எதிர்க்கும். இந்த எதிர்ப்பு விசையின் விளைவை அறிவியல் அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். பொதுவாக, இரண்டு தனி மின்னணுக்களிடையே உள்ள எதிர்ப்பு அதிக பட்சம் இருக்கும். ஒரு தனி மின்னணுவுக்கும், ஒரு பிணைக்கப்பட்ட இணை மின்னணுக்களுக்கும் இடையே உள்ள எதிர்ப்பு முன்பை விடவும் சற்றுக் குறைவாக இருக்கும். இரண்டுமே பிணைக்கப்பட்ட இணை மின்னணுக்களாக இருந்தாலும் இன்னும் குறைவாக ஈர்ப்பு விசை இருக்கும்.

**அமோனியா மூலக்கூறு**


உதாரணத்தோடு பார்த்தால், இந்தத் தத்துவம் எளிதில் விளங்கிவிடும். அமோனியா மூலக்கூறில் 3 N-H இணைக்கப்பட்ட இணை மின்னணுக்களும், ஒரு தனி இணை மின்னணுவும் உள்ளன. அவைகளுக்கிடையில் ஒன்றுக்கொன்று, ஒன்றையொன்று பாதிக்காத வகையில் இணக்கமான சூழ்நிலை நிலவ வேண்டுமானால், படத்தில் காட்டியபடி தங்களை அவை அமைத்துக் கொண்டால்தான் அம்மோனியா மூலக்கூறு, எந்த ஆபத்துக்கும் உட்படாமல் நிலையாக இருக்க முடியும். பிணைக்கப்பட்ட இணை மின்ன ணுக்களும் ஒரு பிரமிட் போன்ற அமைப்பில் தங்களை இருத்திக் கொண்டும், பிணைப்பில் ஈடுபடாத தனி இணை மின்னணுக்கள் இரண்டும் மேற்புறம் நீட்டிக் கொண்டிருப்பதுபோல் வைத்துக் கொள்ளும்போது மூலக்கூறு முழுவதற்குமே சிரமம் எதுவுமில்லாமல் நிலைப்படுத்திக் கொள்ள முடிகிறது.

**வடிவம்**

ஒரு நுட்பம் இங்கே கவனிக்கப்பட வேண்டியுள்ளது. ஒரு மூலக்கூறுக்கு அதற்கென்று ஒரு தனிப்பட்ட வடிவமும், அமைப்பும் இருக்கிறது. அந்த வடிவமும் அமைப்பும் அம்மூலக்கூறுக்கு எப்படி அமைகிறது..? யார் இந்த மூலக்கூறு இந்த வடிவத்தில்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள்..? என்ற கேள்விகளை நோக்கின் 'கிட்டப்போனால் முட்டப்பகை' என்ற பழமொழியின் கருத்துத்தான் இதைத் தீர்மானிக்கிறது என்ற பதிலைக் கண்டுகொள்ள முடியும்.
மூன்று இணை பிணைப்பு மின்ன ணுக்களும், ஒரு தனி இணை மின்னணுக்களுமாக உள்ள ஓர் அமைப்புக்கு ஒன்றுக்கொன்று பாதிப்பில்லாமல் ஒன்றையொன்று ஒத்துக்கொண்டு போகவேண்டுமானால் பிரமிட் போன்ற அமைப்புடன் மேற்புறம் நீட்டிக்கொண்டிருக்கும் நாற்பக்க அமைப்புத்தான் (Tedrahedran) அதற்குத் தீர்வாக அமைய முடியும். வேறு எந்த வடிவத்தில் அந்த நான்கும் தங்களை அமைத்துக் கொண்டாலும், ஒன்றுக்கொன்று எதிர்ப்பு வலுத்து இறுதியில் மூலக்கூறு நிலைப்புத் தன்மை குன்றி உடைந்து போகும்.


**இணை மின்னணுக்கள்**

ஆக, மூலக்கூறுக்கு என்ன வடிவம் இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பதே அதில் உள்ள பிணைப்பு இணை மின்னணுக்களும், தனி இணை மின்னணுக்களும்தான் என்பது தெளிவாகிறது. அவை செயற்படும் விதத்தின் உள்ளார்ந்த கோட்பாட்டை நோக்கும்போது 'கிட்டப் போனால் முட்டப் பகை' பழமொழியின் கருத்துக்கிணங்க குறிப்பிட்ட தூரங்களிலும், குறிப்பிட்ட கோணங்களிலும் தங்களை நிலை நிறுத்திக் கொள்கின்றன.
'தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு' என்ற பழமொழியின் கருத்தும் இதிலேயே அடங்கியிருப்பதை நாம் எளிதில் உணரலாம். இதேபோன்று ஒவ்வொரு மூலக்கூறும் நடந்துகொள்வதால் குறிப்பிட்ட தூரங்களும், குறிப்பிட்ட கோணங்களும் தானாகவே ஏற்படுகிறது. அதன் மூலம் அம் மூலக்கூறு என்ன வடிவத்தில் இருக்கவேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்டு விடுகிறது.



**வேதியியல்**

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, வேதியியல் வெறும் அறிவியல் பாடம் மட்டுமல்ல, மனிதன் எப்படித் தங்களுக்குள் இணக்கமாக வாழவேண்டும் என்பது பற்றிய உயரிய தத்துவங்களை மறைமுகமாகப் போதிக்கும் அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்கிறது.
வேதியியலில் ஒரு பிரிவு கனிம வேதியியல். அதில் ஒரு உள்பிரிவு உலோகங்களை அவற்றின் தாதுப்பொருள்களிலிருந்து பிரித்தெடுப்பதைப் பற்றி விளக்கும் பகுதியாகும். இதற்காகக் கடைப் பிடிக்கப்படும் முறைகளைக் கவனிக்கும்போது அவற்றில் அடங்கியுள்ள தத்துவம் எமக்குச் சமையலறையில் பழகிப்போன முறைகளாகவே அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.




**தாதுப்பொருள்கள்**


தங்கம் போன்ற ஒரு சில உலோகங்கள் தவிர ஏனைய அனைத்துமே பூமிக்கடியில் கூட்டுப் பொருள்களாகத்தான் கிடைக்கின் றன. அவற்றைத் தாதுப்பொருள்கள் என்று அழைக்கின்றனர். அவற்றிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்கப் பல முறைகளைக் கையாளுகிறார்கள்.
தாதுப்பொருள்களுடன் தேவையற்ற தும்பு, தூசு, மணல், களிமண் போன்ற பொருள்கள் இருக்கக்கூடும். எனவே தேவையற்ற பொருள்களிலிருந்து எமக்குத் தேவையான தாதுப் பொருள்களை மட்டும் பிரித்தெடுக்கும் முறைகளை தாதுப் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் அல்லது ஒருமைப்படுத்தும் முறைகள் என்றழைக்கின்றனர். அவற்றுள் முதலாவதாக 'நீரினால் கழுவுதல்' அல்லது 'ஈர்ப்பு விசையினால் பிரித்தல்' என்ற முறை பற்றி நோக்குவோம்.

**நீரினால் கழுவுதல்**

இந்த முறையில் பொடியாக்கப்பட்ட தாதுப் பொருளைச் சற்றுச் சாய்வாக உள்ள ஒரு கிடை மட்டமான மேடை மீது பரப்பி வைத்து, வலிமையான நீரோட்டத்தை அதன் மீது பாய்ச்சுவார்கள். மிகவும் இலேசான மணல் மற்றும் இதர மண் சம்பந்தமான பொருள்கள் அனைத்தும் வலிமையான நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு விடும். கனமான தாதுப் பொருள்கள் அடியில் தங்கிவிடும். இதுதான், நீரினால் கழுவுதல் அல்லது ஈர்ப்பு விசையினால் பிரித்தல் என்றழைக்கப்படும் முறையாகும்.

**அரிசி களைதல்**

இந்த முறையை ஆழ்ந்து கவனிக்கும் போது இதில் அடங்கியுள்ள தத்துவமும், அது கையாளப்படும் விதமும் எமக்கு ஒன்றும் புதியதல்ல என்று தெரிகிறது. கடையில் வாங்கி வந்த அரிசியில் நிறைய உமி மற்றும் சிறு சிறு கற்கள் இருப்பதுண்டு. அவற்றை அப்படியே சமையலுக்குப் பயன்படுத்த முடியாது. அந்த அரிசியை ஒரு பாத்திரத்தில் இடுகிறோம். தண்ணீர் ஊற்றி சிறிது நேரம் ஊற வைக்கிறோம். பின்பு வலதுகை விரல்களை ஒன்று சேர்த்து குவித்து வைத்துப் பாத்திரத்தில் உள்ள நீருக்குள் வைத்துக்கொண்டு இடது கையினால் அந்தப் பாத்திரத்தை முன்னும் பின்னும் மாற்றி மாற்றி அசைக்கையில் பாத்திரத்தில் உள்ள அரிசி மற்றும் நீர் சேர்ந்த கலவையிலிருந்து அரிசி மட்டும் சிறிது சிறிதாக வலது கையில் ஏறி உட்கார்ந்து கொள்ளும். கை அரிசியால் நிரம்பியதும் அதை எடுத்து வேறொரு பாத்திரத்தில் போட்டுவிடுகிறோம். மீண்டும் மேற்கூறிய முறைப்படியே தொடர்கிறோம். இதனை வீடுகளில் 'அரிசி களைதல்' என்ற பெயர் கொண்டு அழைக்கிறோம். எமது முன்னோரும், எங்கள் அம்மாரும் தொன்று தொட்டு கடைப் பிடித்து வருகின்ற இந்த முறைக்கும், உலோகவியல் தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்படும் முறைக்கும் தத்துவ ரீதியில் எந்தவித வேறுபாடும் இல்லை என்ற காரண காரியம் தெளிவாகப் புலனாகிறது.



## அனந்தியிடம்...

பெண் அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் உரிமத்துடன் கைத்துப் பாக்கியைப் பெற்றுள்ளார்.
இந்தத் தகவலை வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஐ.அஸ்மின் நேற்றுச் சபையில் தெரிவித்தார். வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இங்கே இருக்கின்ற அமைச்சர்கள் தனிப்பட்ட ரீதியாக தங்களுடைய அமைச்சுக்களின் பொறுப்புக்களை, அந்தப் பதவி நிலையைத் தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். அதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன. அவர்கள் தங்கள் மக்கள் சார்ந்து சிந்திப்பதைவிடவும் தங்களுடைய சொந்த நலன் சார்ந்து சித்திக்கின்ற போக்குத் தான் அண்மைக்காலம் இருந்திருக்கின்றது.
இங்கே 38 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். போரின் பின்னர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அச்சுறுத்தல் இருக்கின்றது. எல்லா மக்கள் பிரதிநிதிகளுக்கும் அச்சுறுத்தல் இருக்கின்றது. ஆனால் நீங்கள் எவரும் பாவிக்காத ஒரு சிறப்புரிமையை, இங்கே இருக்கின்ற அமைச்சர், பெண் அமைச்சர் பாவித்திருக்கின்றார். கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.
தனக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றது என்று கூறி பாதுகாப்பு அமைச்சிடமிருந்து கைத்துப்பாக்கியை உரிமத்துடன் பெற்றுள்ளார். இது எப்படிச் சாத்தியமாகின்றது? மக்களுக்காகப் பேசுகின்ற இந்த அமர்வுகளில் அவர்களைக் காணமுடிவதில்லை. ஆனால் அச்சுறுத்தல் இருக்கின்றது எனக் கூறி, எந்த அரசை விமர்சிக்கின்றோமோ, எந்தப் பாதுகாப்பு அமைச்சை விமர்சிக்கின்றோமோ, எந்த இராணுவத்தை விமர்சிக்கின்றோமோ அவர்களிடத்தில் போய் உரிமம் பெற்று கைத்துப்பாக்கி எடுத்து வைத்திருக்கின்றார்கள். அமைச்சர்கள் மக்கள் நலன்சார்ந்து செயற்பட வேண்டும் என்றார்.
வடக்கு மாகாண அமைச்சரவையில் இருக்கின்ற ஒரே ஒரு பெண் திருமதி அனந்தி சசிதரன் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## அலுக்கோசு...

வயதுடைய மூதாட்டியொருவர் தெரிவித்துள்ளார்.

கலாவத்தை, ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய எஸ்.பி.கருணாவதி யாரும் இல்லை என்றால் தான் தயார் என்று அறிவித்துள்ளார்.

"நாட்டில் போதைப் பொருளை இல்லாதொழிக்க வேண்டும். அத்துடன் பாலியல் முறைகேடுகள் மற்றும் சிறுவர் பாலியல் துன்புறுத்தல்கள், வன்கொடுமைகளில் ஈடுபடுவோருக்கு சாவுத் தண்டனை வழங்க வேண்டும். குற்றச்செயல்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. அவற்றைத் தடுக்க வேண்டுமென்றால் அரசு சாவுத் தண்டனையை நிறைவேற்ற வேண்டு" என்றார்.

அலுகோசுப் பதவிக்கு எவரும் வராமையால்தான் இவ்வாறான குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றன எனவும் எனவே தான் அந்தப் பதவிக்கு வந்து குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தவுள்ளார் எனவும் மூதாட்டி தெரிவித்தார். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த வேலையைத் தான் சேவையாகவே செய்வார் என்றும் அதற்காகத் தனக்கு எவ்வித சம்பளமும் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-21)

## முதல்வர்...

லமைச்சர் சவால் விடுவாராக இருந்தால், எந்தளவுக்கும் சென்று அதனை எதிர்கொள்வதற்கு நானும் தயாராகவே இருக்கின்றேன். இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாணசபையின் சிறப்பு அமர்வு நேற்று இடம்பெற்றது. அதில் பங்கேற்றுக் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் (முன்னைய) நான்கு பேரும் இரவு பகலாக வேலை செய்தோம். ஆனால் முதலமைச்சர் எங்களை ரிசுப் பேப்பரைக் கசக்கி எறிவது போன்று எறிந்துவிட்டார். நாங்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை. எங்கள் மீது அபாண்டமாகப் பழி சுமத்தி பதவி நீக்கினார். ஏன் அவ்வாறு செய்தார்?

முதலமைச்சர் இந்த விடயத்தில் நீதியரசராகச் செயற்படவில்லை. அவர் அந்தத் தகுதி நிலையிலிருந்து தவறிவிட்டார். தான் செய்த தவறை நியாயப்படுத்த முயற்சித்து அவர் மீண்டும் மீண்டும் தவறிழைத்துக் கொண்டு போகின்றார்.

முதலமைச்சர் தான் செய்தது பிழை என்று ஏற்றுக் கொண்டால், நான் பதவி ஏற்காமல் விடுவதற்குக் கூடத் தயார். தற்போதைய முடக்க நிலைக்கு முதலமைச்சர்தான் காரணம். சிலவேளைகளில் அவர் அதற்கு நான் காரணம் எனக் கூறக்கூடும் - என்றார். (உ-5)

## கே.கே.எஸ்...

கேசன் துறைக் கடற்படையால் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர். இந்தியாவில் தூண்டிலுக்குச் சென்றபோது காற்றின் வேகத்தை எதிர்க்க முடியாது கடலில் தத்தளித்தோம் என்று கைதானவர்கள் விசாரணைகளில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கடற்பரப்பில் வைத்து நேற்று மாலை 6 மணியளவில் இருவரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் கடலில் தத்தளித்தார்கள். உணவின்றி பசியில் இருந்தார்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் இருவரும் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (21,26,101)

## கரடி...

டைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு வெலிஓயா காட்டுப்பகுதியில் உள்ள இராணுவமுகாம் ஒன்றில் கடமையாற்றும் காமினி (வயது - 48) என்ற இராணுவச் சிப்பாயே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு சம்பத்நுவர பகுதியில் உள்ள காட்டிலிருந்து வந்த கரடியே தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. உடனடியாக சம்பத்துவர பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட

அவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (உ-21,110)

## இந்திய...

பில அத்துமீறித் தொழில் ஈடுபட்டனர் என்றகுற்றச்சாட்டில் அந்த நான்கு இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்களுடைய படகுகளைச் சோதனையிட்டபோது அதிலிருந்து கஞ்சா மீட்கப்பட்டது. அது 37 கிலோகிராம் எடை கொண்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர். விசாரணைகளுக்காக மீனவர்கள் நால்வரும் காங்கேசன் துறைக்கு அழைத்துவரப்பட்டனர். சான்றுப்பொருள்களும் எடுத்துவரப்பட்டன. விசாரணைகளின் பின்னர் மீனவர்கள், மற்றும் கஞ்சாவை காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தினர். (உ-21,26,8)

## காய்த்துக்...



ணர் ஐயா வீட்டில் நிற்கும் மரமே இந்த ஆண்டு திடீரெனக் காய்த்துக் குலுங்குகிறது. நீண்ட காலமாக இவரது வீட்டில் பேரீச்சை மரம் நிற்கின்றது. மிக உயரமாக வளர்ந்துள்ளது. இதுவரையில் இந்த மரம் பூத்ததோ காய்த்ததோ கிடையாது. இந்தத் தடவை காய்த்துக் குலுங்குகிறது.

யாழ்ப்பாணத்தில் சிலரது வீடுகளில் பேரீச்சை மரங்கள் நிற்கின்றன. உயரமாக வளர்ந்துள்ளபோதிலும் இவை பெரும்பாலும் காய்ப்பதில்லை. பிஞ்சுகள் வந்தாலும் பழுத்துக் குலுங்குவதில்லை. கடந்த வருடமே முதற்றடவையாக யாழ்ப்பாணத்தில் சிலரது வீடுகளில் உள்ள பேரீச்சை மரங்கள் காய்த்துப் பழுத்தது என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் அது பெரியளவில் இருக்கவில்லை.

காரைநகரில் உள்ள பேரீச்சை மரமோ பெருமெடுப்பில் காய்த்துப் பழுத்துள்ளது. பலர் அங்கு சென்று மரத்தைப் பார்த்து இரசித்து வியந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-21)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1483
சீட்டிழுப்பு திகதி 16.07.2018
வெற்றி இலக்கங்கள்
24 28 54 55 X
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 30, 548, 836/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB-space-LOT-space-JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தூரி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்

### பிரான்சிஸ்கா அரியமலர்



பிறப்பு 06.02.1947

இறப்பு 14.07.2018

சங்கானையைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ்கா அரியமலர் கடந்த (14.07.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் தேவராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபநாயகம் றெஜினோல்ட் பிரான்சிஸ், கைத்தாம்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தெல்லிப்பழையைச் சேர்ந்த தேவசகாயம்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அனிட்டா கிருசாந்தினியின் அன்புத் தாயாரும் ரவீந்திரனின் அன்பு மாமியாரும் பெனிட்டா கிருசிக்காவின் அன்புப்பேர்த்தியும் அரசரட்ணம் (லண்டன்), அஞ்சலா (கனடா), ஜெயரட்ணம், விஜயரட்ணம் (பிரான்ஸ்), செல்வரட்ணம் (பிரான்ஸ்), குணரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது ஈச்சமோட்டை இல்லத்திலிருந்து நாளை (18.07.2018) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் கொஞ்சேஞ்சி மாதாசேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**80, ஈச்சமோட்டை வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: மகள், மருமகன், பேரப்பிள்ளை, சகோதரர்கள்**
**077 8966 361**

Galaxy Star
வெற்றி வாரம் 260 / திகதி 15.07.2018
வெற்றி இலக்கங்கள்
05 05 43 54 59
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பெரதி
ரூ. 3,414,396/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB-space-LOT-space-GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது தூரி அழைப்பு 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3057 திகதி: 2018.07.16
திங்கட்கிழமை
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து / போனஸ் இலக்கம் / அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
23 32 58 60 X 11 32,860,175/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB-space-LOT-space-A.K என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தூரி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 313
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.07.16
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,878,950/-
வெற்றி இலக்கங்கள்
09 21 61 74 T
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB-space-LOT-space-A.K என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தூரி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோதுமைத் தவிடு விற்பனைக்கு
VISHNU International Industry
நிறுவனத்திலிருந்து 7 நட்சத்திர கோதுமைத்தவிடு வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு - 076 303 7154, 077 718 5002

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்தானலக்ஸ்மி சோமசுந்தரம் (சோதி)



சட்டநாதர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சோதி என அன்பாக அழைக்கப்படும் திருமதி சந்தானலக்ஸ்மி சோமசுந்தரம் கடந்த (15.07.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**021 222 6560** (CS 9642/15/17) **தகவல்: குடும்பத்தினர்.**



### செல்லையா இராசதுரை

6ஆம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசதுரை நேற்று (16.07.2018) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தங்கமணியின் அன்புக் கணவரும் கந்தையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகமணி, குணரத்தினம், சுப்பிரமணியம் மற்றும் அரசரத்தினம், சீவரத்தினம், இராசாத்தியம்மா, சரசு, நேசம்மா ஆகியோரின் சகோதரனும் சுப்பிரமணியம், எட்விசம்மா, இராஜேஸ்வரி, நேசரத்தினம், கணேசு, திருநாவுக்கரசு, விமலதாஸ், புஸ்பராணி காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, தம்புத்துரை, இராசம்மா, சின்னம்மா, நல்லபிள்ளை, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2018) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு, தாளையம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6ஆம் வட்டாரம்,**
**வேலணை மேற்கு, வேலணை.** (C 7304/15/18)

**தகவல்: குடும்பத்தினர்.**

# வென்றது விநாயகர்

யாழ்ப்பாணம். ஜீலை 17
சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 12:01 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சித்திவிநாயகர் அணி வெற்றி பெற்றது.

(ம-23)



# கார்மேல் போய்ஸ் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜீலை 17
ஆனைக்கோட்டை வராஹி அம்மன் சனசமூக நிலையம் ராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கார்மேல் போய்ஸ் அணி கிண்ணம் வென்றது.

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆனைகோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி 3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 16 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக விது 5 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கார்மேல் போய்ஸ் அணியின் சார்பில் ரகீம் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி 3.1பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் ரகிம் தெரிவுசெய்யப்பட்டார்.

(ம-23)

# சென். மேரிஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜீலை 17
மன்னார் துள்ளுக்குடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் துள்ளுக்குடியிருப்பு சென். மேரிஸ் அணியே கிண்ணம் வென்றது.

துள்ளுக்குடியிறுப்பு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. இதில் துள்ளுக் குடியிருப்பு சென். மேரிஸ் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து ஓலைத்தொடுவாய் சென். தோமஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. 3:0 என்ற செற் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது.

பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன், மன்னார் பிரதேச சபை உறுப்பினர் கொன்சால் குலாஸ், மன்னார் மறைசாட்சிகள் சமூக அமைப்பின் தலைவர் அமிர்தம் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு வெற்றிக் கேடயங்களையும், பணப்பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

(ம-56)




# நல்லூர் இளைஞர் கழகம் தடகளத்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜீலை 17
யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 30ஆவது தடகளத் தொடரில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தத் தொடர் நடைபெற்றது. ஒட்டுமொத்தமாக 52 புள்ளிகளைப்பெற்று முதலிடத்தைப் பிடித்தது நல்லூர். தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் 38 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தையும், உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் 34 புள்ளிகளைப்பெற்று மூன்றாம் இடத்தையும், கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் 24 புள்ளிகளைப்பெற்று நான்காமிடத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் 23 புள்ளிகளைப்பெற்று ஐந்தாமிடத்தையும் பெற்றன.

(ம-23)

# வை.எவ்.சி. அணி அபார வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஜீலை 17
சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் உடுவில் வை.எவ்.சி. அணி கிண்ணம் வென்றது.

சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வை.எவ். சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சங்கானை கிங்ஸ் அணி நிர்ண யிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 51 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுஜீவன் 16 ஓட்டங்களையும், சூரி 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வை.எவ்.சி விளையாட்டுக் கழக அணி 5.5 பந்துப் பரிமாற்றங்களில் 52 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அதிகபட்சமாக தினேஸ் 24 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்ட நாயகனாக தினேஷ் தொடரின் நாயகனாக சூரி இருவரும் தெரிவாகினார்கள்.

(ம-23)





# கால்பந்தாட்டத்தில் உடுவில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜீலை 17
யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 30ஆவது விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் உடுவில் பிரதேச இளைஞர் கழகம் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியை எதிர்த்து உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி வெற்றிபெற்றது.

(ம-23)





விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தை பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உலகப் பிரபலங்கள் என்று பலரும் நேரில் கண்டு ரசித்தனர். (ம)

# மீண்டும் கார்த்திக்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் இந்திய அணியின் இலக்குக் காப்பாளராக டினேஸ் கார்த்திக் செயற்படுவார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஐ.பி.எல். தொடரின்போது சகா காயமடைந்தார்.

இதன் பின்னர் அவர் தொடர்ந்து ஓய்வில் இருந்து வருகிறார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தின்போது சகாவுக்கு ஓய்வு வழங்கப்பட்டது.

பதில் வீரராக டினேஸ் கார்த்திக் சேர்க்கப்பட்டார்.


இங்கிலாந்துக்கு எதிரான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரின்போதும் சகாவுக்கு ஓய்வு வழங்கப்படவுள்ளது.

இதனால் டினேஸ் கார்த்திக் அணியில் மீண்டும் சேர்க்கப்படவுள்ளார். (ம)

# விம்பிள்டன் ரென்னிஸ் ஜோகோவிக் சம்பியன்





இங்கிலாந்தில் நடைபெற்று வந்த விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் சேர்பிய வீரர் ஜோகோவிக்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சேர்பிய வீரர் ஜோகோவிக்கை எதிர்த்து அன்டர்சன் மோதினார்.

ஜோகோவிக்கின் வேகத்துக்கு ஈடுகொடுக்க அன்டர்சன் சற்றுச் சிரமப்படவே செய்தார். முதலிரு செற்களையும் 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கினார் ஜோகோவிக். மூன்றாவது செற்றில் அன்டர்சன் சிறிது போராட்டம் காட்டினார். எனினும் மூன்றாவது செற்றும் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜோகோவிக்கின் வசமானது. முடிவில் அவர் 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார்.

2016ஆம் ஆண்டு மத்திய பகுதிக்குப் பின்னர் ஜோகோவிக் முக்கிய தொடர் எதையும் கைப்பற்ற இயலாமல் தடுமாறி வந்தார்.

இந்த நிலையில் அவர் விம்பிள்டனைக் கைப்பற்றி தனது நீண்ட தடுமாற்றத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். (ம)

## உலகக் கிண்ணத்தில் கவனமீர்த்த மக்ரோன்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பிரான்ஸ். பிரான்ஸின் வெற்றியை அந்த நாட்டின் அதிபர் மக்ரோன் கொண்டாடி மகிழ்ந்தார்.

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தின்போது மக்ரோனின் மீதும் குவிந்திருந்தது பன்னாட்டு ஊடகங்களின் பார்வை.

காலிறுதி, அரையிறுதி, இறுதி என்று பிரான்ஸ் விளையாடிய அனைத்து ஆட்டங்களின்போதும் மைதானத்துக்கு வருகைதந்து ஆட்டங்களைப் பார்த்து ரசிகர்களையும் வீரர்களையும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார் மக்ரோன். உலகக்கிண்ணத்தை பிரான்ஸ் கைப்பற்றியதும் அவர் பவிலியனில் இருந்தவாறு துள்ளிக் குதித்தார். பரிசளிப்பு வைபவத்தின்போதும் தனது கொண்டாட்டங்களை அவர் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

உரிய முறையில் வீரர்களை மக்ரோன் உற்சாகப்படுத்தினார். இந்த வெற்றியில் அவரின் பங்களிப்பும் அதிகம் என்று மக்ரோனையும் புகழ்ந்து வருகின்றன பன்னாட்டு ஊடகங்கள். (ம)

## 169 கோல்கள்

ரஷ்யாவில் நடைபெற்ற கால்பந்து உலகக்கிண்ணத் தொடரில் ஒட்டுமொத்தமாக 169 கோல்கள் பதிவாகியுள்ளன.

இங்கிலாந்தின் அணித் தலைவர் ஹரிகேன் 6 கோல்களைப் பதிவு செய்து முதலிடத்தில் உள்ளார். ரொனால்டோ, மப்பே, லுகாகு ஆகியோர் தலா 4 கோல்களுடன் அடுத்த இடத்திலும், பெர்சிச், ஈடன் ஹசாட், அர்டம், கவானி ஆகியோர் தலா மூன்று கோல்களுடன் அடுத்த இடத்திலும் உள்ளனர். (ம)





## பிரான்ஸின் வெற்றியில் உள்ள சுவாரஸ்யங்கள்



உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் பிரான்ஸ் அணி குரோசியாவை 4:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கிண்ண த்தைக் கைப்பற்றியது. இந்த இறுதியாட்டம் தொடர்பில் உள்ள பத்து பரபரப்புத் தகவல்கள் வருமாறு.

⇨ ஒரு அணியில் வீரராகவும், ஒரு அணிக்கு முகாமையாளராகவும் உலகக் கிண்ணத்தை வென்ற மூன்றாவது நபரானார் டெஸ்சாம்ப்ஸ். இதற்கு முன்னதாக பிரேசிலின் மரியோஜகல்லோ மற்றும் ஜேர்மனியின் பிரான்ஸ் பெக்குன்பெர் இந்தச் சிறப்பைப் பெற்றிருந்தனர்.

⇨ நாற்பத்தெட்டு வருடத்திற்கு பிறகு இறுதியாட்டத்தில் நான்கு கோல் அடித்த அணி பிரான்ஸ்.

1970ஆம் ஆண்டில் பிரேசில் இத்தாலியை 4:1 என வென்றிருந்தது.

⇨ உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் முதல் முறையாக விளையாடும் ஓர் அணி தோல்வியடைவது 1974க்குப் பிறகு இதுதான் முதல் முறை. குரோசியாவுக்கு இது முதல் இறுதியாட்டம்.

⇨ உலகக்கிண்ண இறுதியாட்ட வரலாற்றில் தனது அணிக்கு எதிராக கோல் அடித்த ஒரே வீரர் ஆனார் குரோஷியாவின் மண்ட்ஜூகிக்.

⇨ உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் கோல் அடித்த இரண்டாவது இளையவர் ஆனார் பிரான்ஸின் மப்பே. அவருக்கு வயது 19.

⇨ உலகக்கிண்ணம் மற்றும் யூரோ கிண்ணம் ஆகியவற்றில் பிரான்ஸ் அணிக்காக இதுவரை 10 கோல்கள் அடித்திருக்கிறார் கிரீஸ்மன். கடந்த ஐம்பது ஆண்டுகளில் பிரான்ஸ் வீரர் செய்த மிகப்பெரிய சாதனை இது.

⇨ பெரிய கால்பந்துத் தொடர்களில் 11 கோல்களுக்கு நேரடி காரணமாக இருந்திருக்கிறார் பெர்சிச். வேறு எந்த குரேஷிய வீரரும் இந்தச் சாதனையைச் செய்யவில்லை.

⇨ உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் 1982க்குக்கு பிறகு பெனால்டி பகுதிக்கு பிறகு அதாவது அவுட் சைட் டி பொக்ஸ் பகுதியில் இருந்து கோல் அடித்த வீரர் ஆனார் பிரான்ஸின் போக்பா.

⇨ உலகக்கிண்ண வரலாற்றிலேயே ஒரே ஆட்டத்தில் தனது அணிக்காக ஒரு கோலும் தனது அணிக்கு எதிராக ஒரு கோலும் அடித்த இரண்டாவது வீரர் ஆகியுள்ளார் குரோஷியாவின் மண்ட்ஜுகிச். 1978ஆம் ஆண்டில் இத்தாலிக்கு எதிரான ஆட்டத்தில் நெதர்லாந்தின் எர்னி பிராண்ட்ஸ் இதே போல விளையாடியுள்ளார்.

⇨ கடந்த 20 ஆண்டுகளில் நடந்த ஆறு உலகக்கிண்ணத் தொடர்களில் (1998, 2006, 2018) மூன்றில் இறுதியாட்டத்துக்கு வந்த ஒரே நாடு பிரான்ஸ்.

இதில் இரண்டு முறை (1998, 2018) அந்த அணி சம்பியனானது. (ம)

## கிண்ணம் எவரிடம்?

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இரண்டு ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் உள்ளதால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரில் சம்பியனாகும்.
முன்னதாக நடைபெற்ற ரி-20 தொடரை இந்தியா கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)



பிரான்ஸில்வருடாவருடம்வெகு கோலாகலமாக நடைபெறும்ரூர்டிபிரான்ஸ்சமீபகாலமாக நடைபெற்றுவருகிறது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ்வெளியிட்டது. (ம)


### காணி விற்பனைக்குண்டு

கொக்குவில் கிழக்கு. பழைய தபாற் கந்தோர் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு :
076 1844 680


## இந்தியாவுக்கு எதிரான தொடருக்காக
# களம் திரும்பினார் ஜிம்மி அன்டர்சன்

காயம் காரணமாக கடந்த சில தினங்களாக கிரிக்கெட் அரங்கில் இருந்து விலகியிருந்த ஜிம்மி அன்டர்சன் மீண்டும் பயிற்சிக்குத் திரும்பினார். இதனால் அவர் இந்தியாவுக்கு எதிரான தொடரில் களமிறங்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.
இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் கடந்த மாதம் நடைபெற்ற டெஸ்ட் தொடரின்போது அன்டர்சனின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. இதனால் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அன்டர்சன் களமிறங்குவாரா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவியது.



அன்டர்சன் தற்போது மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். இதனால் அவர் இந்தியாவுக்கு எதிராகப் பெரும்பாலும் களமிறங்குவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.
இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பித்துச் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி முடிவுக்கு வரும். (ம)


### வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள (நியூ சண் செரமிக்ஸ் பிறைவேட் லிமிட்டட்) நிறுவனத்துக்குக் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு O/L, A/L சித்தியடைந்த அனுபவமுள்ள / அனுபவமற்ற பணியாளர் தேவை.

**விற்பனையாளர்** - ஆண்/ பெண் - வயதெல்லை - 22 தொடக்கம் 35 வரை
**களஞ்சியப்படுத்துநர்** - ஆண் - வயதெல்லை 30 தொடக்கம் 40 வரை
**குறிப்பு:**- அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (AKN/496(11.17)

**நியூ சண் செரமிக்ஸ் பிறைவேட் லிமிட்டட்**
A-9, கண்டி றோட், கிளிநொச்சி. (பழைய வைத்தியசாலை முன்பாக)
071 792 3721, 021 228 3872



### மரண அறிவித்தல்

## திருமதி அரியநாயகம் ஜெயபாலசிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



பிறப்பு 13.08.1939 இறப்பு 15.07.2018

யாழ். துன்னாலை மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியநாயகம் ஜெயபாலசிங்கம் கடந்த (15.07.2018) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிதம்பரம் தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கந்தர் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தர் ஜெயபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயக்குமார், ஜெயதேவன் (ஆஸ்திரேலியா), ஜெயந்திமாலா (லண்டன்), ஜெயசிறீ (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பவளகுமாரி, சாந்தினி, பாலசுப்ரமணியம், சுதோமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுரஞ்சனி, மதனவேந்தன், ஜெய்விக்கினன், பாலமுகுந்தன், பாரமணன், பாலபிருந்தன், சுகன்யா, ஜீவிதன், நிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அவிக்னா, வீரா ஆகியோரின் பூட்டியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற அருமைநாயகம், சிவலிங்கம், அற்புதநாயகம் ஆகியோரின் சகோதரியும் பத்தினிப்பிள்ளை, வேலாயுதம், இலட்சுமிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை, சிவநாதன், குமாரநாதன், தவகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 தொடக்கம் பி.ப. 2.00 மணிவரையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**21/7, காந்தி வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்.**

தகவல்: ஜெயசிறீ (மகன்)
திருமதி ப.ஜெயக்குமார் (இலங்கை) - +94 77 476 6112,
ஜெயதேவன் (ஆஸ்திரேலியா),
ஜெயந்திமாலா (லண்டன்) +94 76 101 9826/+44 77372 85264,
ஜெயசிறீ (லண்டன்) + 94 76 206 7671/ +44 790 999 01265
(C 7301 /15/17)



### பணிப்பெண் தேவை

நல்லூரில் இயங்கும் விடுமுறை பங்களாவுக்குப் பணிப்பெண் தேவை.
(வயதெல்லை 18 - 40)
தங்குமிட வசதி உண்டு.
077 248 7642



### தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஓய்வு பெற்ற Technical Officer தேவை.

தொடர்பு - 076 737 4444



### SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

O/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக நுழைவு மாணவர்கள், தொழில்புரிவோர் வெளிநாடு செல்வோர், இல்லத்தரசிகள், இளைஞர் யுவதிகள்

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்

சனி; ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 21.07.2018
1. காலை 08-10 3.மதியம் 01-03
2. காலை 10-12 4.மாலை 03-05

வாரநாள் பிரிவுகள் (செவ்வாய், வியாழன்) ஆரம்பம் - 19.07.2018
1. காலை 08-10 2. காலை 10-12

SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
021 320 3313 077 1570 486


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.